24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 326 ஐப்பசி 01ஆம் நாள் வியாழக்கிழமை 18 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# மைத்திரியை கொல்ல இந்திய 'றோ' சதி வெளியான செய்தியால் நேற்று பரபரப்பு

## உடனடியாக மறுத்தது அரச தலைவரின் ஊடகப் பிரிவு

கொழும்பு, ஒக்ரோபர் 18
தன்னைக் கொல்வதற்கு நடந்த சதியின் பின்னணியில் இந்தியாவின் வெளிநாட்டு உளவுப் பிரிவான 'றோ' தொடர்புபட்டுள்ளது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார் என வெளியான செய்தியால் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அரச தலைவர் அவ்வாறு எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை என்று அரச தலைவர் மாளிகை மறுப்பு அறிக்கையை உடனடியாக வெளிப்படுத்தும் அளவிற்கு 25



## கைதிகள் விவகாரத்தில்

# அரசியல் தீர்மானம் எடுக்க மைத்திரி நேற்று இணக்கம்

## கூட்டமைப்பிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 18
அரசியல் கைதிகள் விவகாரத்தில் அரசியல் ரீதியாகவே தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்தமாக முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பில் தலைமை அமைச்சர் ரணிலுடன் இணைந்தே அதனை மேற்கொள்ள முடியும் என்பதால், அடுத்த வாரம் மீண்டும் சந்தித்துப் பேசுவோம் 25



கோப்புப்படம்

## காணிகளை படையினர் விடுவிக்க பணம் ஒதுக்க மைத்திரி சம்மதம்

கொழும்பு, ஒக். 18
தனியார் காணிகளை விடுவிப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினர் மாற்றுக் காணிகளை அடையாளப்படுத்தி அதற்கான திட்டங்களை முன்வைத்தால், அதற்குத் தேவையான பணத்தை விடுவிக்கத் தயாராக இருப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான 25

## எல்லோரையும் விடுவிக்கவேண்டும் மைத்திரியிடம் சம்பந்தன் அழுத்தம்

கொழும்பு, ஒக். 18
அரசியல் கைதிகள் எல்லோரையும் விடுவிக்க வேண்டும். இந்த விவகாரத்தில் வேறு விடயங்கள் கலக்கக் கூடாது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அழுத்திக் கூறியுள்ளார்.
அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக, 25

## வடகிழக்கில் 79 ஏக்கர் காணி மக்கள் பாவனைக்கு விடுவிப்பு

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக். 18
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்பாதுகாப்புத் தரப்பினரின் ஆக்கிரமிப்பிலிருந்து 79 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது.
மீள்குடியேற்ற அமைச்சு முன்வைத்த அமைச்சரவைப்பத்திரத்துக்க 04

## வடக்கு - கிழக்கில் வீடமைக்க இந்திய நிறுவனத்துக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 18
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு சீன நிறுவனத்துக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அரசியல் தீர்மானங்களால் அது கைவிடப் பட்டு இந்திய நிறுவனத் துக்கு 04

## மோடியும் நேற்றே அலைபேசியில் பேச்சு

கொழும்பு, ஒக். 18
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று மாலை 5.15 மணியளவில் தொடர்புகொண்டு இந்தியத் தலைமை அமைச்சர்நரேந்திரமோடி அலைபேசியில் பேசியுள்ளார். 25

## அவசரமாக இந்தியத் தூதுவர் மைத்திரியுடன் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஒக். 18
தனது படுகொலைச் சதியில் இந்தியாவின் உளவு அமைப்பான 'றோ' தொடர்புபட்டுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக்கூட்டத்தில் தெரிவித்துள்ளதாக நேற்றுக் காலை செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை அவசரமாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். 24

## இந்தியாவால் அமைச்சரவைக் கூட்டத்தில் மைத்திரி – ரணில் கடும் வாக்குவாதம்

கொழும்பு, ஒக். 18
கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக, நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையில் 25

## 'றோ'வின் தொடர்புகளை அம்பலப்படுத்திய விமல்

25

## தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் மைய நிலையம்

### இந்திய - இலங்கை அனுசரணையில் யாழ்ப்பாணத்தில் அமைக்க அனுமதி

கொழும்பு, ஒக். 18
யாழ்ப்பாணத்தில் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் மைய நிலையம் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக்சமர விக்கிரம சமரபித்த அமைச்சரவைப் பத்திரத்துக்குகே 25



*மகிந்த அணியின்*

# குடுமிப்பிடிச் சண்டை முடிவுக்கு வந்தது

கொழும்பு, ஒக். 18

மகிந்த அணிக்குள் கடந்த சில வாரங்களாகஅடுத்தஅரசதலைவர் வேட்பாளர் யார் என்பது தொடர்பிலும், நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் செயற்பாடு தொடர்பிலும் குழப்பங்கள் சச்சரவுகள்நீடித்து வந்த நிலையில், மகிந்த ராஜபக்சவின்தலையீட்டையடுத்து அவை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மகிந்த அணியின் கட்சித் தலைவர்களின் கூட்டம் விஜேராமவில் உள்ள மகிந்தவின் இல்லத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மீது கண்டியைச் சேர்ந்த உறுப்பினர்கள் முன்வைத்த பகிரங்க குற்றச்சாட் டுக்கள் தொடர்பில் கூட்டத்தில்கருத்துக்கள்முன்வைக்கப்பட்டன. அவற்றைக்காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, சொற்ப விடயங்களுக்காக எமக்குள் பகைமையை வளர்க்க கூடாது. பகிரங்கமாகஊடகங்களில் விமர்சனங்களைத்தவிர்க்கவேண்டும். நாம் அனைவரும் ஒன்றாக பயணிக்கவேண்டும்என்றுஅறிவுரைகளை வழங்கியுள்ளார். இதன் பின்னர்முரண்பாடுகளைக்கொண்டிருந்தவர்களிடையேஇணக்கபாடு எட்டப்பட்டது.

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களைவழங்குவதுகுறித்துகவனம் செலுத்தப்பட்டது. நாடளாவிய ரீதியில் அதற்கான அழுத்தங்களை வழங்கும் வகையில் எவ்வாறு செயற்பாடுகளை முன்னெடுப்பது என்று கலந்துரையாடப்பட்டது. இடைக்காலஅரசுகுறித்துப்பேச்சுக்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திப்பு நிறைவடைந்த பின்னர், கூட்டுஎதிர்க்கட்சியின்நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்ததாவது, மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்காக தொடர்ச்சியாக மாவட்டங்கள் ரீதியாகப் போராட்டங்களை மேற்கொள்வதென்றும் உள்ளூராட்சி மற்றும் கட்சியின்ஏனையதரப்புக்களுடன் கூட்டிணைந்து இதனை முன்னெடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போதுசரிவைநோக்கிச் செல்லும் பொருளாதார நிலைமைகள்தொடர்பில்நிபுணர்கள்கொண்ட குழுவொன்றைநியமிப்பதுஎன்றும் தீர்மானிக்கப்பட்டது என்றார்.

இடைக்கால அரசு தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடவில்லை. அது தொடர்பிலான எந்த விதமானவார்த்தைப்பிரயோகங்களும் எழுந்திருக்கவில்லை என்று வாசுதேவ குறிப்பிட்டார்.

குமாரவெல்கம தெரிவித்ததாவது, எதிர்காலத்தில் கூட்டு எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் தனித்தனியாக பெயர்களை கூறி விமர்சனம் செய்வதைதவிர்க்கவேண்டும். இவ்வாறானசம்பவங்கள்இனிஇடம்பெறக் கூடாது. சமாதானமாக இருக்க வேண்டும்என்றுமகிந்தஅறிவுரை வழங்கினார். மகிந்தானந்தஅளுத்கமவும் விமர்சனம் செய்வதை நிறுத்துவதாக கூறியுள்ளார்.

அவர் இறுதியாக தெரிவித்த கருத்துக்கு நான் பதிலளித்து விட்டு அனைத்தையும் நிறுத்துவதாக கூறினேன். கூட்டு எதிர்க்கட்சியின் சில நிலைப்பாடுகள் தொடர்பில் எனக்குமாறுபட்டகருத்துக்கள்உள்ளன. தனிப்பட்டவகையில்எனக்கு கருத்துக்களைவெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் உண்டு. மேலும் நான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வக்காளத்துவாங்கவேண்டியஅவசியமில்லை. நான்அவர்கள்பின்னால் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. நான்சிறந்தசுதந்திரக் கட்சிக்காரன் என்பதை அனைவரும் அறிவார்கள். எனது கழுத்து அறுக்கப்பட்டாலும்கூடநான்ஒருபோதும் ஐக்கியதேசியக்கட்சியின்பக்கத்தில் சென்று அமரமாட்டேன்.

கோத்தபாயவிடயத்தில்நான்எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவதற்கு காரணம்உண்டு. எமதுஅரசமைப்புக்கு அமைவாக, கோத்தபாய ராஜபக்சவுக்கு இரட்டைக் குடியுரிமை உள்ளது. அவரால்தேர்தலில்போட்டியிட முடியாது. அதன் காரணமாகவேநான்அதனைதொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றேன். இது தொடாபில் நாம் குழப்பமடைய வேண்டியதில்லை. பந்துல குணவர்த்தன சிறந்த பொருளாதார அறிவாளிஎன்பதில்மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அவர் நிதி அமைச்சருக்கும் பொருத்தமானவர். 2 ஆயிரத்து500ரூபாவில்குடும்பமென்று வாழ்க்கை நடத்த முடியும் என்று கூறியவர். அவரின் பொருளாதார அறிவு வியக்கத்தக்கது. அவரிடத்தில் அரசமைப்புச் சார்ந்த அறிவு குறைவாக இருப்பதாலோ தெரியவில்லைகோத்தபாயவின்பெயரை முன்மொழிந்திருக்கின்றார் என்றார்.

மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்ததாவது, கூட்டணிஎன்றவகையில் எமக்குள் வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. தற்போது நாம் இருவரும் (வெல்கம) சந்தித்தோம். மகிந்தராஜபக்சவின் அறிவுரைக்குஅமைவாகநாம்இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிட்டன. அடுத்த அரச தலைவர் தேர்தலில் இரட்டைக்குடியுரிமை கொண்டஒருவர்தேர்தலில்போட்டியிடமுடியாது என்பது எமது அரசமைப்பில் காணப்படுகின்றது. குமாரவெல்கமகூறுவதுஉண்மைதான். ஆனால்அவ்வாறானநபரொருவர் இரட்டைக் குடியுரிமையை இல்லாமல் செய்யும் பட்சத்தில் அவரால் தேர்தலில் போட்டியிட முடியும் என்றார். (5,31)

# கனடாவில் இலங்கை பெண்ணை காணவில்லை

கொழும்பு, ஒக். 18

கனடாவில் இலங்கையை சேர்ந்த தமிழ் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மார்க்கம் பகுதியில் வசிக்கும் 46 வயதான தமிழினி குகேந்திரன் என்ற பெண்ணே காணாமல் போயுள்ளார். கடந்த 15ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் அவரது வீட்டில் இறுதியாக அவதானிக்கப்பட்டுள்ளார். காணாமல் போயுள்ள பெண் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5)

# நெடுந்தீவு பிரதேச சபை விவகாரத்தை விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி

**வடக்கு மாகாண முதலமைச்சர் நியமிப்பு**

யாழ்ப்பாணம், ஒக்.18

நெடுந்தீவுப் பிரதேச சபையில் தற்போது காணப்படும்நெருக்கடிதொடர்பில்விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஓய்வு பெற்ற நீதிபதி கமலசபேசனை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நியமித்துள்ளார்.

நெடுந்தீவுப் பிரதேச சபை கூடிய வேளையில்தவிசாளர் உபதவிசாளர் தேர்வுகள் இடம்பெற்று சபை இயங்கிய காலத்தில் கடந்த ஜூன் மாதம் உப தவிசாளர் சாவடைந்திருந்தார். இதன் காரணத்தால் ஏற்பட்ட உப தவிசாளர் வெற்றிடத்தைநிரப்பும்நோக்கில்மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் 6 தடவைகள் சபையை கூட்டிய போதும் சபை கோரம் இன்மை காரணமாகஉபதவிசாளர்தேர்வு இடம்பெறவில்லை.

உப தவிசாளர் தேர்வு இன்றிச் சபை இயங்க முடியாத சூழலில் அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் அறிவுறுத்தலிற்காக மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் சட்டமா அதிபர் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரான முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் மாகாணஉள்ளூராட்சிஅமைச்சர் என்றவகையில்வடக்குமாகாண முதலமைச்சரினால் கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவு பிரதேச சபையின் தற்போதைய நிலமையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஓய்வு பெற்ற நீதிபதி கமலசபேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிபதி நாளை முதல் தனது விசாரணையை ஆரம்பிக்கவுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

னா (8,105)

# சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்ஒக்18

வீட்டில் தனித்து வாழ்ந்து வந்த இளைஞன் ஒருவரின்உடலம்அழுகியநிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இந்தசம்பவத்தில்திருநெல்வேலி கிழக்கு பகுதியை சேர்ந்த யேசுதாசன் நிமல்ராஜ்(வயது48)என்பவரே மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பில்தெரியவருவதாவது,

திருநெல்வேலியில்வசித்து வரும் குறித்த இளைஞன் திருமணம்முடிக்காது தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் அவரது நடமாட்டம் இல்லாத நிலை இருந்துள்ளது. இவ்வாறான நிலையில் அந்த இளைஞன் வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. இதனால் அயலவர்கள் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் வீட்டினைதிறந்துபார்த்தபோது அழுகியநிலையில்அவரது உடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (8)

# ஹெரோயினோடு ஒருவர் கைது

யாழ்ப்பாணம்ஒக்18

மல்லாகம் நீதிமன்ற வீதிக்கு அருகில் 665 மில்லிகிறாம் ஹெரோயினைஉடைமையில்வைத்திருந்தார்என்றகுற்றசாட்டில்ஒருவரைத் தெல்லிப்பழை பொலிசார்நேற்று முன்தினம்கைதுசெய்தனர்.

தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மல்லாகம் நீதிமன்ற வீதிக்கு சென்றவர்கள் சந்தேகத்துக்கு இடமாக நின்ற ஒருவரை விசாரிக்க முற்பட்டுள்ளனர். எனினும்அவர்மர்மப்பொருள்ஒன்றை தனது வாய்க்குள் போட்டுக் கொண்டு அங்கிருந்து ஓட முற்பட்டுள்ளார். எனும்பொலிஸார் குறித்த நபரை பிடித்து விசாரித்துள்ளனர். அப்போது கெரோயின் போதை பொருள் பொதி ஒன்றை மீட்டுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (8-26)

*மைத்திரி தலைமையிலான கூட்டத்தில்*

# இடைக்கால அரசு யோசனையை சு.க. கணக்கில் எடுக்கவில்லை

கொழும்பு, ஒக். 18

சுதந்திரக்கட்சியிலிருந்துவெளியேறிய 15பேர் அணி இடைக்கால அரசு உருவாக்கும் யோசனையை முன்வைத்திருந்த நிலையில், கொழும்பு அரசியலில் அது பேசுபொருளாகியிருந்த நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழுக் கூட் டத்தில் இடைக்கால அரசுவிவகாரம்கணக்கில்எடுக்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவைமுறித்துகூட்டுஅரசிலிருந்துசிறிலங்காசுதந்திரக்கட்சி வெளியேறவேண்டும்என்றும், இடைக்காலஅரசைஉருவாக்க வேண்டும் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 15பேர் அணிதொடர்ச்சியாகவலியுறுத்தியிருந்தநிலையில்சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக்கூட்டம்அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் இரவு 6.30 மணிக்கு ஆரம்பமான கூட்டம், இரவு 8.45 மணிக்கு நிறைவடைந்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்15பேர்அணியில்தயாசிறி ஜயசேகர மாத்திரம் மையக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார்.

கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டியமை தொடர்பான எழுத்துமூலமான யோசனைகள்அடங்கிய15பேர்அணியின் ஆவணம்அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணம் கூட்டத்தில் முழுமையாக வாசிக்கப்பட்டுள்ளது. இருப்பினும்அதுதொடர்பில்கலந்துரையாடல் இடம்பெறவில்லை. அதனைஆவணப்படுத்துமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வினால், கட்சியின் செயலருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதன் பின்னர், கட்சியின் நீண்டகால மற்றும் குறுகிய கால மறுசீரமைப்புபணிகளை ஒரே நேரத்தில் முன்னெடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. அரசியல் நிலமைகளுக்கு அப்பால் கட்சியை கீழ் மட்டத்திலிருந்து நிர்வாகம் செய்வது தொடர்பில் ஆராயப்பட்டது. கடந்த காலத் தேர்தல் முடிவுகளை கவனத்தில் கொண்டு பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைத்து மூன்று நான்கு மடங்கு வாக்கு வங்கியை அதிகரிப்பது தொடர்பிலான விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. கட்சியின் மாநாட்டை விரைவாக நடத்துவது தொடர்பிலும் அதற்குரிய ஆயத்தப்பணிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

கட்சியின் மறுசீரமைப்பு பணிகளை முன்னெடுப்பதற்காக தயாசிறிஜயசேகரதலைமையிலான குழுவொன்றும், அமைச்சர் ரஞ்சித்சியம்பலாப்பிட்டிய தலைமையிலான குழுவொன்றும்நியமிக்கப்பட்டுள்ளது. (5,61)

## விடைபெற்றார் எழுத்தாளர் சிதம்பரதிருச்செந்திநாதன்



யாழ்ப்பாணம், ஒக். 18
ஈழத்து இலக்கிய வரலாற்றில் எழுத்துத் துறையில் தனக்கென தனியிடம் பிடித்த சிறுகதை எழுத்தாளரும், பல்துறை விற்பன்னருமான இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் கடந்த திங்கட்கிழமை சுகவீனம் காரணமாக உயிரிழந்திருந்தார். அவரது இறுதிச் சடங்கு மருதனார்மடம் அம்பலவாணர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இறுதி நிகழ்வில் இலக்கியவாதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
இறுதி அஞ்சலி நிகழ்வு எழுத்தாளர் கை.சரவணன் தலைமையில் இடம்பெற்றது.
நினைவுரைகளை, ஆறு.திருமுருகன், மூத்த எழுத்தாளர் ஐ.சாந்தன், சைவப்புலவர் சு.செல்லத்துரை, சட்டத்தரணி சோ.தேவராஜா, மூத்த நிர்வாக அதிகாரி செல்வின், போதகர் ராஜ்குமார், கலாநிதி சிதம்பரநாதன், கலாநிதி ரகுராம், ஊடகவியலாளர் ரமணன் ஆகியோர் நிகழ்த்தினர்.
ஆறு.திருமுருகன் தனது உரையில், ஈழத்து இலக்கியப் பரப்புக்கு அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது எனக் குறிப்பிட்டதோடு ஈழத்து கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்வு ஒன்றில் சிதம்பரதிருச்செந்திநாதனை உணர்வுள்ள, உக்கிரமான ஒரு படைப்புப் போராளி என்று பெருமைப்படுத்தியதையும் நினைவு கூர்ந்தார்.
நினைவுரைகளைத் தொடர்ந்து அவரது உடல், காலை 11 மணிக்கு வீட்டிலிருந்து பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பலரும் கண்ணீர் மல்க அவரின் உடல் தீயுடன் சங்கமமானது.

*மன்னாரில்*

# பல அபிவிருத்திகளுக்கு அமைச்சரவை அனுமதி

**கொழும்பு, ஒக். 18**
**மன்னார் மாவட்டத்தில் குளங்களை மறுசீரமைப்பதற்கும், பேசாலை துறைமுகத்தை அமைப்பதற்கும், காற்றாலை மின் உற்பத்தி நிலையம் நிறுவுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி கிராமிய பொருளாதார அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா சமர்பித்த அமைச்சரவைப் பத்திரத்தில், வடக்கு மாகாணத்தில் கடற்றொழில் அடிப்படை வசதிகளை மேலும் மேம்படுத்துதல் நீர் உயிர்வாழ் உற்பத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் வட மாகாண பேண்தகு கடற்றொழில் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்ப் பேசாலையில் கடற்றொழில் துறைமுகத்தை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
267 மில்லியன் ரூபா முதலீட்டில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். இந்தத் திட்டத்துக்காகன கட்டடப் பணிகளுக்காக நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப குழுவை நியமிப்பதற்கு அனுமதி கோரப்பட்டிருந்தது. அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள. இடர் முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திசாநாயக்க, மன்னார் மாவட்டத்தில் பெரிய குளங்கள் 3 ஆயிரத்து 800 ஏக்கர் நிலப்பரப்பிலும் பார்க்க பரந்துபட்டு காணப்படுவதுடன் இதன் கீழ் சிறிய 62 குளங்கள் காணப்படுகின்றன.
கடந்த காலங்களில் நிலவிய மோதல் நிலை காரணமாக மூன்று தசாப்த காலத்தில் பெரிய குளங்களின் கீழ் உள்ள குளங்களின் பராமரிப்பு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கமைவாக 40 நீர் கால்வாய்களை சீர் செய்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ள அமைச்சரவை அனுமதி கோரினார். அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, 100 மெகாவோட் காற்று மின் சக்தி நிலையத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி பங்களிப்புடன் மன்னார்த் தீவின் தெற்கு கரையோரத்தில் அமைப்பதற்கான ஒப்பந்தம் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய டென்மார்க்கின் நிறுவனத்திடம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கோரியிருந்தார். அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (5)

## நாலக டி சில்வாவை பதவி விலக்க அனுமதி

கொழும்பு, ஒக். 18
பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவை பதவியில் இருந்து நீக்குவதற்கு பொலிஸ் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.
இந்தப் பணிநீக்கமானது உடனடியாக நடைமுறைக்கு வர வேண்டுமென பொலிஸ் ஆணைக்குழுவுக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் பரிந்துரை செய்திருந்தார். அதற்கு அமைவாகவே, பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவை பதவியில் இருந்து நீக்குவதற்கு பொலிஸ் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தன் மீதான கொலை முயற்சி தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் காரசாரமாகத் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் மேற்படி நடவடிக்கை எடுத்துள்ளார். இதேவேளை, பயங்கரவாதத் தடுப்புபிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டிசில்வா இன்று வியாழக்கிழமை குற்றத் தடுப்பு விசாரணைத் திணைக்களத்தில் முன்னிலையாகவுள்ளார். அவரைக் குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தமது குழந்தைக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக அங்கு முன்னிலையாக முடியாது என்று அவர் தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில், இன்று முன்னிலையாகுமாறு பொலிஸார் ஊடாக நாலக டி சில்வாவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக, அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோருக்கு எதிரான கொலை முயற்சி சதித் திட்டம் குறித்த வாக்குமூலம் வழங்கவே அவர் அங்கு முன்னிலையாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)




## காணாமல்போனோர் அலுவலகம் பணம் கொடுத்து ஏமாற்றுகின்றது

### முல்லைத்தீவில் உறவினர்கள் கவலை

முல்லைத்தீவு.ஒக் .18
இலங்கை அரசின் காணாமல் போனவர்கள் அலுவலகம், காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு மாதம் தோறும் ஆறாயிரம் ரூபா பணத்தினைக் கொடுக்க அரசு அங்கீகரித்துள்ளமையானது. காணாமல்ப்போனோரின் உறவுகளான எங்களின் போராட்டத்தை மழுங்கடிக்க செய்வதும், திசைதிருப்பும் நோக்கமுமாகவே உள்ளது என்று, முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் இணைப்பாளராக செயற்படும் ஈஸ்வரி கருத்து தெரிவிக்கும்போது: அரசின் காணாமல்போனவர்களின் அலுவலகம் .காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு மாதம் ஆறாயிரம் ரூபா வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது .இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை நேற்று அழைத்து மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்ட கொட்டகையில் ஒரு சந்திப்பினை மேற்கொண்டு சில முடிவுகளை எடுத்துள்ளோம்.
இதில் அரசினால் கொடுக்கப்படும் ஆறாயிரம்ரூபா பணம் எங்களுக்குத் தேவையில்லை .அரசதலைவரிடமோ அல்லது காணாமல் போனோர் அலுவலகத் தலைவரிடமோ நாங்கள் கேட்ட கோரிக்கைகள் இதுவரைக்கும் நிறைவேற்றப்படவில்லை. அதனை நிறைவேற்றிவிட்டு அவர்கள் எந்தக் கொடுப்பனவைக் கொடுத்தாலும் நாங்கள் ஏற்கத் தயாராக உள்ளோம் . உறவுகளை நாங்கள் தேடிக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு பணத்தினை கொண்டு வந்து திணிப்பது ஏன் என்ற கேள்விதான் எங்களுக்கு கஸ்ரத்தினை கொடுத்துள்ளது.
பணத்தினை கொடுத்து எங்களை ஏமாற்றி, எங்கள் உறவுகளை இல்லாமல் செய்ய விழைகின்றனர் . பணம் ஊடாக காணாமல் போனவர்களின் போராட்டத்தினை இல்லாமல் செய்கின்ற சதிவேலையினை இலங்கை அரசின் காணாமல் போனவர்கள் அலுவலம் மேற்கொண்டு வருகின்றது.
இதனை நாங்கள் கண்டிக்கின்றோம்- என்றார். (ரி 3)

## காணி விடுவிப்பு தொடர்பில் விசேட சந்திப்புகள்

முல்லைத்தீவு.ஒக் .18
முல்லைத்தீவு , வவுனியா மாவட்டத்தில் படையினர் வசமுள்ள தனியாருக்குச் சொந்தமான நிலங்களை விடுவிப்பது தொடர்பில் 23 ஆம் திகதியும் ,மன்னார் மாவட்டம் தொடர்பாக எதிர்வரும் 25 ஆம் திகதியும் மாவட்டச் செயலகங்களில் சிறப்பு சந்திப்பிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா தலமையில் கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான சிறப்புச் செயலணியின் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் ,டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக தனியார் காணிகள் மற்றும் பாடசாலைகளை படையினரின் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டும். என அரச தலைவர் தெரிவித்ததோடு. இதற்காக இரு மாகாண முதலமைச்சர்கள் தலைமையில் குழு நியமிக்கப்பட்டது.
படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் மாலை யாழ்மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது .
இதன் பிரகாரம் பாதுகாப்பு படையினர் வசமுள்ள நிலங்கள் விடுவிப்புத் தொடர்பில் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட காணிகள் தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் ஆராயப்படவுள்ளதோடு ,மாலை 4 மணிக்கு வவுனியா மாவட்ட நிலவரம் தொடர்பில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்ட கலந்துரையாடல் 23 ஆம் திகதி மாலை 2 மணிக்கும், மன்னார் மாவட்டத்தில் படையினர் வசம் உள்ள தனியார் நிலங்களை விடுவிப்பது தொடர்பில் எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை 3 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு உந்துருளிகள் வழங்க வேண்டும்

## சாவ. பிரதேச சபையின் உறுப்பினர் குகானந்தன் இப்படிக்கொண்டுவந்தார் தனிநபர் தீர்மான வரைவு

**கொடிகாமம், ஒக். 18**

**உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் உந்துருளிகள் வழங்க வேண்டும். சபை அமர்வுகள் மற்றும் பொது நிகழ்வுகளுக்குச் செல்கையில் நாங்கள் நடந்தும் ஈருருளிகளிலும் செல்ல வேண்டியுள்ளது என்று தனிநபர் தீர்மான வரைவை முன்வைத்தார் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.குகானந்தன்.**

சாவகச்சேரி பிரதேச சபையின் இந்த மாதத்துக்கான அமர்வு கடந்ததிங்கட்கிழமைநடைபெற்றது. அங்கு தனிநபர் தீர்மான வரைபை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது: கடந்த தேர்தலில் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுள் பெண் உறுப்பினர்களும் அடங்குவர். தெரிவுசெய்யப்பட்ட பல உறுப்பினர்கள் உந்துருளி வசதியின்மையால் சபையின் அமர்வுகளுக்கு தனியார் மற்றும் அரச பேருந்துகளில் பயணிக்கின்றனர். அத்துடன் வட்டாரங்களில் மக்கள்சந்திப்புமற்றும்பிரதேசத்தில்நடைபெறும்நிகழ்வுகளுக்குச் செல்லும்வேளைகளில்நடந்தும் ஈருருளிகளிலும் பயணிக்கின்றனர். சபையின் தவிசாளர் உபதவிசாளர்கள் கூட தமது சொந்த உந்துருளியையேபயன்படுத்துகின்றனர். இதனால்முன்னைய ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டதுபோன்றுதற்போதுஇயங்கும் அனைத்துச் சபைகளின் தவிசாளர்உபதவிசாளர்மற்றும்உறுப்பினர்கள் அனைவருக்கும் உந்துருளிபெற்றுக்கொடுக்கவேண்டும் - என்றார். (ம-9.159)

# சாவகச்சேரியின் அபிவிருத்திக்கென சுமந்திரனால் ஐம்பது லட்சம் ரூபா

சாவகச்சேரி, ஒக். 18

சாவகச்சேரி பிரதேச சபையின் அபிவிருத்திக்கெனநாடாளுமன்ற உறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன்பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில்இருந்து50லட்சம்ரூபாவினை வழங்கியுள்ளார். சாவகச்சேரி பிரதேச சபையின் 7ஆவது அமர்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதன்போதே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சுமந்திரன் வழங்கிய 50 லட்சம் ரூபாநிதியில்இருந்துசாலைவிளக்குகள் பொருத்த 15 லட்சம் ரூபாவினையும் மயான அபிவிருத்திக்கு 15 லட்சம் ரூபாவினையும் ஏனைய அபிவிருத்தி வேலைகளுக்கு20லட்சம்ரூபாவினையும் செலவளிக்கவுள்ளோம் என தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.



சபை உறுப்பினர் அ.மதன்ராஜ் உரையாற்றுகையில், மட்டுவில் தெற்குகிராமத்தில்வதிவோர்தமது பயணங்களுக்காககைதடிநுணாவில் வைரவர் கோவில் சந்தியினைப் பயன்படுத்துகின்றனர். இந்தச் சந்தியில் பொருத்தப்பட்டிருந்த சாலை விளக்கு நீண்ட காலமாகப் பழுதடைந்து காணப்படுகிறது. தென்பகுதிக்குச் செல்வோர் தென்பகுதியிலிருந்து வருவோர் மற்றும் இரவு வேளைகளில் ஏ9 முதன்மைச் சாலையில் வருவோர் என பலர் தினமும் சந்தியில் வாகனங்களில் இருந்து இறங்கி தமது குடியிருப்புகளுக்குச் செல்கின்றனர். கைதடி நுணாவில் வைரவர் கோவில் சந்தியில் வாகனங்களில் இருந்து இறங்குவோர் மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவில் வரையான மூன்று கிலோ மீற்றர் தூரம் வரைசெல்கின்றனர். வாகனங்களில்வருவோருக்குஇனங்காணக்கூடிய வகையில் வைரவர் கோவில் சந்தியில் சக்திமிக்க சாலை விளக்கு பொருத்தப்பட வேண்டும் என்று கோரினார்.

புதிதாகக் மின்விளக்குகள் கொள்வனவுசெய்ததும்சந்தியில்சாலை விளக்குப் பொருத்தப்படும் எனத் தவிசாளர்தெரிவித்தார். (ம-9.159)

## 11 பவுண் நகை கொள்ளை

யாழ்ப்பாணம் ஒக் 18

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியிலுள்ள நாதஸ்வர வித்துவானின் வீட்டிற்குள் புகுந்த கொள்ளையர்கள், 11 பவுண் நகையை கொள்ளையடித்து விட்டுதப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் சம்பவம் தொடர்பாகமேலும்தெரியவருவதாவது, கொள்ளையர்கள் மூவரும், முகத்தினை கறுப்பு துணியால் கட்டியவாறு வீட்டிற்குள் உட்புகுந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அக்கொள்ளையர்கள், வித்துவானிடம் கத்தியைக் காட்டி மிரட்டி, 11பவுண் சங்கிலியை கொள்ளையிட்டு தப்பி சென்றுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8)



பன்னாட்டுச்சிறுவர்தினத்தை முன்னிட்டுசுன்னாகம்ஸ்கந்தவரோதயக் கல்லூரியில்தரம் 8 இல்கல்வி கற்கும்மாணவர்ஒருவர்தான் சுயமாக பதிபோட்டுஉருவாக்கிய60மரக்கன்றுகளைப்பாடசாலையில்வைத்து சக மாணவர்களுக்கு வழங்கினார். (ம)



## காஞ்சூரமோட்டை வெடுக்குநாரி பகுதிகளுக்கு வடக்கு மாகாண சபையினர் நேரில் சென்று ஆராய்வு

யாழ்ப்பாணம் ஓக் 18

வுனியாவடக்குபிரதேசசெயலகத்திற்குட்பட்ட காஞ்சூரமோட்டை மற்றும் வெடுக்குநாரி ஆதிசிவன் ஆலயத்திற்குவடக்குமாகாணசபைஉறுப்பினர்கள் நேரடியாகச் நேற்று சென்று அங்குள்ளநிலைமைகள்தொடர்பில் ஆராய்ந்தனர்.

வவுனியாவடக்குபிரதேசசெயலகத்திற்குட்பட்ட காஞ்சூரமோட்டை பகுதியில்போர்ச்சூழல்காரணமாக1980, 90 காலப்பகுதியில் இடம்பெயர்ந்து இந்தியா உட்பட வேறுபகுதிகளிற்கு இடம்பெயர்ந்து சென்றமக்கள்மீண்டும் வந்து காடுகளாககிடக்கும் தமது காணிகளையும்தமதுபெற்றோர்கள் வசித்த காணிகளை பிள்ளைகளும் துப்புரவாக்கிநாற்பதுகுடும்பமளவில் தற்காலிக்கொட்டில்கள் அமைத்து வசித்துவருகின்றனர். இந்நிலையில் குறித்தகாணிகள்தமக்குரியதுஎன்று வனவளத்திணைக்களத்தால் கூறப்படுவதுடன்மக்கள்மீள், குடியேறுவதிலும், வீடுகளை அமைப்பதற்கும் வனவளத்திணைக்களம் தடையை ஏற்படுத்தி வருகின்றது. காணிகளை துப்புரவாக்கினாலோ, அல்லது கட்டுமான பணிகளை மேற்கொண்டாலோ கைதுசெய்வோம் எனவும் மக்களை எச்சரித்து வருகின்றனர். இதனால் அப்பகுதியில்மக்களிற்கும், வனத்துறையினருக்கும் இடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டுவருகிறது. குறித்த விடயம் தொடர்பாகவும் வவுனியாவில் வனவளத்திணைக்களத்தின் அநாகரிகமானசெயற்பாடுகள்தொடர்பாக நேரில் வந்து ஆராயவேண்டும் எனமாகாணசபைஉறுப்பினர்ஜி.ரி. லிங்கநாதன் கடந்த 133-வது மாகாண சபை அமர்வில் வேண்டுகோள் ஒன்றைமுன்வைத்திருந்தார்.

அதற்கமைவாகவே12பேர்கொண்ட மாகாணசபை உறுப்பினர்கள் குழு நேற்று காஞ்சூரமோட்டைக்கு சென்று, மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகநேரில்கண்டறிந்ததுடன் அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். அத்துடன் பொதுமக்கள் வழிபடுவதற்கு தொல்பொருட்திணைக்களத்தால் தடைவிதிக்கபட்டுள்ள வெடுக்குநாரி ஆதிசிவன் ஆலயத்திற்கும் குறித்த குழுவினர் விஜயம்செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சி.வி.கே.சிவஞானம்தலைமையில் வடக்கு விவசாய அமைச்சர் க. சிவநேசன், உறுப்பினர்களானசபா. குகதாஸ், எம். கே. சிவாஜிலிங்கம், இ. ஜெயசேகரன், அ. பரஞ்சோதி, ப. அரியரட்ணம், கே. தர்மலிங்கம், வ. கமலேஸ்வரன், ஆ. புவனேஸ்வரன், து. ரவிகரன், சு. பசுபதிப்பிள்ளை ஆகிய மாகாணசபை உறுப்பினர்கள் அடங்கிய குழு சென்றிருந்தது. (810)

## வடகிழக்கில்...

அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குளத்தில்23ஏக்கரும், முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் 53 ஏக்கரும், திருகோணமலைமாவட்டத்தின் தோப்பூரில் 3 ஏக்கரும் விடுவிக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மோதல் நிலவிய காலப்பகுதியில் முப்படையினரால் கைப்பற்றப்பட்ட தனியார் காணிகளை உரிமையாளர்களுக்கு விடுவிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடற்படையின் பொறுப்பிலிருந்த மன்னார், முள்ளிக்குளத்தில் 23 ஏக்கரும், முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கலில் அமைந்துள்ள 53 ஏக்கர் நிலப்பரப்பும், இராணுவத்தின் 224 ஆவது படைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளதிருகோணமலைதோப்பூரில் 3 ஏக்கர் காணியும் உரிமையாளரிடம் விடுவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் குடியமர்த்தப்படவுள்ள பொதுமக்களுக்குத் தமது வாழ்வாதாரத்தைநிலையான வகையில் முன்னெடுக்கக் கூடிய வகையில் அடையாளம் காணப்பட்டுள்ள மூன்று குளங்களை சீர்செய்து அந்தப்பிரதேசங்களில்அடிப்படைவசதிகளைஅபிவிருத்திசெய்துஅவற்றை உரிமையாளரிடம்கையளிக்கப்பட வேண்டும்.

இதற்கமைவாக தற்பொழுது முப்படையினர் பயன்படுத்தப்படும் காணியை விடுவிக்கக்கூடிய வகையில் இவற்றை மறுசீரமைப்பதற்கும் அந்தப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதி வழங்குவதற்கும் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரத்துக்குஅனுமதிவழங்கப்பட்டுள்ளது. (5)

## வடக்கு...


வீடமைப்பதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 65 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்குஎதிர்ப்பு வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சீன நிறுவனம், நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலிருந்து வெளியேறும் தூசுப் படிமங்களைமூலப்பொருளாகக்கொண்டு வீடு அமைப்பதற்குமுன்வந்திருந்தது. அந்தநிறுவனத்துக்குஒப்பந்தம் வழங்க அமைச்சரவையும் அனுமதிவழங்கியிருந்தது.

இந்தியஅரசு, வடக்குமற்றும்கிழக்கு மாகாணங்களில் சீன நிறுவனம் வீடுகள் அமைப்பதை விரும்பியிருக்கவில்லை. இது தொடர்பில்அரசுடன்சந்திப்புநடத்தப்பட்டிருந்தது. கடந்த செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி அலரிமாளிகையில் நடந்த கலந்துரையாடலில், இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக இந்தியாவைச் சேர்ந்தஎன்.டி.என்ரபிரைசஸ்நிறுவனம், இலங்கையைச்சேர்ந்தயப்கா டெவலப்பேர்ஸ், இலங்கையைச் சேர்ந்த ஆச்சிடியம் நிறுவனக் குழுமங்களுக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் சுவாமிநாதன் சமர்பித்திருந்தார். அதற்குஅமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

முதல்கட்டமாக 28ஆயிரம்வீடுகள் 12 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவுக்கு அமைக்கப்படவுள்ளன. (5)



## தேசியவாசிப்பு மாதத்தை முன்னிட்டு

# கச்சாய் பொதுநூலகத்தினரால் பல்வேறு போட்டிகள் ஆரம்பம்

கொடிகாமம் ஒக். 18
சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய்பொதுநூலகத்தினர்தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பல்வேறுபோட்டிகளைகடந்ததிங்கட்கிழமை ஆரம்பித்துள்ளனர்.
இதன்படி, பாடசாலைகளில் தரம் 4, 5 வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத்தமிழ் வாசிப்பு போட்டியையும், தரம் 6, 7 வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஆங்கில வாசிப்புப் போட்டியையும், தரம் 8 வகுப்புமாணவர்களுக்கு வாசிப்பினால் இனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துவோம் என்னும் தலைப்பிலான பேச்சுப் போட்டியினையும், தரம் 9 வகுப்பு மாணவர்களுக்கு பொது அறிவுப் போட்டியையும் நடத்தியுள்ளனர். (ம-9,159)

# இலவச சித்திர வித்தியாரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 18
ஆத்திசூடி வீதி கந்தர் மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் விஜய தசமி தினமான நாளை சித்திர வித்தியாரம்பம் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. பயில விரும்பும் மாணவர்கள் மாலை 4 மணிக்கு வருகைதரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

# இளங்கலைஞர் மன்றத்தின் விஜய தசமி நாள் வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18
யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள இளங்கலைஞர் மன்றம் விஜய தசமி தினமான நாளையதினம் பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம் ஆகிய துறைகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளவுள்ளது. மாலை 4 மணிக்கு இந்த நாள் வகுப்பு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## புத்தகக்கண்காட்சியும் நூலக சேவையும்

யாழ்ப்பாணம், ஒக். 18
வண்ணாங்கேணி துர்க்கா சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று புத்தகக் கண்காட்சியையும், நடமாடும் நூலக சேவையையும் இடம்பெறவுள்ளன.
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தகக் கண்காட்சியையும், நடமாடும் நூலக சேவையையும் நடத்தி வருகின்றனர். இதன் ஒருபகுதியாகவே வண்ணாங்கேணி துர்க்கா சனசமூக நிலைய மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. (ம)

# வாணி விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 18
**பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை**
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் வாணி விழா இன்று காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் திருமதி செ.தேவராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை இந்து நாகரீகதுறை முன்னாள் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சிறப்பு விருந்தினராக சித்தங்கேணி ஸ்ரீ மகா கணபதி தேவஸ்தான தலைமைக் குரு சிவஸ்ரீ ச.ஸ்ரீ.மதுசூதன குருக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

**சாவகச்சேரி புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையம்**
சாவகச்சேரிகண்டுவில்ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வாணி விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறும். நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் க.வினோஜிதாவும் சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அலுவலர் திருமதி தீபா மஞ்சூரனும் கலந்து கொள்வர்.

**குருசாமி வித்தியாலயம்**
கைதடி குருசாமி வித்தியாலய வாணி விழாவும் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் மதிப்பளிப்பும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.
வித்தியாலய இந்து மாணவர் மன்றத் தலைவர் இ.அனிஸ்ரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளார்.

**பனை தென்னை வள அபி. கூட்டுறவுச் சங்கம்**
யாழ்ப்பாணம் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் வாணிவிழா நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் நெறியாளர்சபை உறுப்பினர்கள், அங்கத்துவ சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
(ம-422,9,159,68)

# டிப்பர் மோதி தம்பதியினர் படுகாயம்

கைதடி, ஒக். 18
மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பதியினரை பின்னால் வந்த டிப்பர் மோதியதில் இருவரும் படுகாயமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் கைதடி கோப்பாய் வீதியில் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் கைதடி மேற்கைச் சேர்ந்த கந்தையா சந்திரன் (வயது 52) என்பவர் தலையில் படுகாயமடைந்த நிலையிலும், அவரது மனைவியான சந்திரன் சிவமலர் (வயது 50) காலில் படுகாயமடைந்த நிலையிலும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.
விபத்து நடைபெற்ற போது மழை பெய்துகொண்டிருந்தது. தம்பதிகள் கோப்பாயிலிருந்து மோட்டார் சைக்கிளில் கைதடிக்கு வந்து கொண்டிருந்த போது கோப்பாய் பாலத்தில் பின்னால் வந்த டிப்பர் வாகனம் திடீரென பிரேக் பிடித்த போது அது கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற மோட்டார்சைக்கிளை மோதியதுடன் லொறி ஒன்றையும் மோதித்தள்ளியது என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். (ம-288)

## குடா நாட்டில்

# தனியாரின் காணிகளில் படையினரின் முகாம்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 18

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொலிசாரின் பிடியில் உள்ள மக்களின் நிலங்களுக்கான மாற்றுக் காணிகளை வழங்கிய பின்னரும்கூட மக்களின் காணிகளை பொலிசார் விடுவிக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்.**

குடாநாட்டில் படையினர் மற்றும் பொலிசார் வசமுள்ள நிலங்களை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி குற்றச்சாட்டு பொலிசாருக்கு எதிராகச் சுமத்தப்பட்டது.
யாழ்ப்பாணக் குடாநாட்டில் தெல்லிப்பழை, சுன்னாகம், காங்கேசன்துறை, கோப்பாய் மற்றும் பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம் உள்ளிட்ட பல பொலிஸ் நிலையங்கள் இன்றும் தனியாரின் வீடுகளையும் நிலங்களையும் அபகரித்தே இயங்குகின்றன. இதனால் அந்த மக்கள் படும் அவலம் மிகவும் கொடியது. அந்த மக்களின் வீடுகள் மற்றும் நிலங்களை பொலிசார் விடுவிக்க வேண்டும்.
இவ்வாறு தனியார் நிலத்தை பிடித்து வைத்துள்ள பொலிசாருக்கு பல இடங்களில் மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டும் பொலிசார் அங்கு பொலிஸ் நிலையங்களை அமைத்துச் செல்லாது தொடர்ந்தும் தனியார் காணிகளிலேயே தங்கியுள்ளனர்.
எனவே விரைவில் அவற்றை விடுவிப்பதற்கு பொலிசார் முன்வர வேண்டும் எனக் கோரப்பட்டது. இதற்குப் பதிலளித்த யாழ்ப்பாண மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணத்தில் தனியார் வீடுகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குப் பதிலாக நிரந்தர பொலிஸ் நிலையம் அமைக்க காணி வழங்கப்பட்டமை உண்மை. இருப்பினும் அங்கே பொலிஸ் நிலையம் அமைப்பதற்கான எந்த நிதியும் கிடைக்காதமையாலேயே எம்மால் இடம்மாறிச் செல்ல முடியாதுள்ளது. எனினும் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்தப்படும் - என்றார்.
(ம-105)

## மண்டபத் திறப்புவிழா

தென்மராட்சி ஒக். 18 (145)
விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கலையரங்க மண்டபத் திறப்பு விழா வும் பரிசில் நாள் நிகழ்வும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் கலையரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய முதல்வர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, தென்மராட்சி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ம-9)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 18
**கிளி. அம்பிகை வித்தி**
நந்தகுமார் நிலாயினி - 194, சசிகரன் பகிர்தன் 178, ரஞ்சிதசாரா அமுதினி - 172, சசிதரன் கலையிசையன் - 170, கிருபாகரன் அபிநயா - 166, ராஜ்குமார் தமிழ்நிலவன் 165.
**கல்வியன்காடு இ.த.க.பா.**
ஜெ.மகிழினி - 188, சி.சோபிகன் - 187, த.திலக்சன் - 183, சு.தமிழ்ப்பிரியன் - 181, க.விஷ்மியா - 179, உ.வேணுசன் - 178, ஜெ.கனிமதி - 177, சிறி.தவனியா - 170, ர.தமிழ்ச்செல்வன் - 168.
**சுழிபுரம் கிழக்கு**
**அ.மி.த.க. பாடசாலை**
ஜெ.புருஷோத் -176, மோ.கீர்த்தனா -175. (ம)

# வளவாளர்கள் விண்ணப்பிக்குக

கொடிகாமம், ஒக். 18
கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கலை மற்றும் மொழி வகுப்புக்களை நடத்திச் செல்வதற்கான வளவாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவின் வரணி பகுதியில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மத்திய மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும், சிங்கள மொழி, ஆங்கில மொழி மற்றும் இசைக் கருவிகள் ஆகிய பாட நெறிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது.
குறித்த பாட நெறிகளை கற்பிக்க ஆர்வமுடையோர், தென்மராட்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வளவாளர்கள் (ஆசிரியர்கள்) தங்களது சுய விபரங்களை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் 'நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், குடமியன் வரணி' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9,159)



## "லிற்றில் எய்ட்" திறன் விருத்தி கற்கைக்கு சான்றிதழ் வழங்கல்

கிளிநொச்சி,ஒக் ,18

கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள லிற்றில் எய்ட் திறன் விருத்தி நிலையத்தில் இலவச கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது

ஆசிரியர் தயாளன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் கிளிநொச்சி மாவட்ட செயலரும், கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலருமான உடுவை எஸ் தில்லை நடராஜா, யாழ் போதான மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், லிற்றில் எய்ட் நிறுவனத்தின் லண்டன் இணைப்பாளர் ஜெயபாலன், ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி யோகநாதன், ஓய்வுப்பெற்ற கரைச்சிப் பிரதேச சபை செயலர் அருள்சோதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது கணனிக் கற்கை நெறியில் பல்வேறு துறைகளில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களும், தையல்ப் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (35)

## வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு

யாழ்ப்பாணம் ,ஒக் .18

பன்னாட்டு வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வளநிலையத்தில் 14ஆம் திகதி நிகழ்வுகள் நடைபெற்றது. கருவி நிறுவனத்தின் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வுக்கு தீவக லயன்ஸ் கழகம் அனுசரணை வழங்கியிருந்தது. இந்த நிகழ்வில் தீவக லயனஸ் கழகத்தின் பொருளாளரும்,ஓய்வு பெற்ற கல்வித் திணைக்களப் பொறியியலாளருமான பு.சிவபாலன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தீவக லயன்ஸ் கழகஉறுப்பினர்கள்,கருவியின் நிர்வாக சபையினர்,அங்கத்தவர்கள்,நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் தீவக லயன்ஸ் கழகத்தினரால் வெள்ளைப் பிரம்புகள், மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் ஆகியன கருவிஅங்கத்தவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. தொடர்ந்து வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்தி சுயமாக நடமாடும் பயிற்சிப் பட்டறை ஒன்றும் நடைபெற்றது. கருவி நிறுவனத்தின் செயலர் து.யசிந்தன், நிர்வாக சபை அங்கத்தவர் இ.கந்தராசா ஆகியோர் இணைந்து பயிற்சிநெறியினை வழங்கியிருந்தனர்.

## வெள்ளைப்பிரம்புடன் வரும் உறவுகளை அனைவரும் நேசிக்க வேண்டும்

### வன்னிமாவட்ட எம்.பி சி.சிவமோகன் வேண்டுகோள்

கிளிநொச்சி,ஒக் .18

கிளிநொச்சியில் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உலக வெள்ளைப்பிரம்பு பாதுகாப்பு நாள் தின நிகழ்வு நேற்றைய தினம் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் வெள்ளைப்பிரம்புடன் வரும் உறவுகளை அனைவரும் நேசிக்க வேண்டும் எனக் கூறினார்.

வெண்பிரம்புடன் ஒருவர் வரும்போது அவருக்கு எவ்வாறு நாம் உதவவேண்டும் எவ்வாறு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் சமுதாயத்தில் வளர்க்கப்பட வேண்டும்.

தமிழரும் சிங்களவரும் இணைந்தே வாழ வேண்டும் என்று அன்று கூறிய அந்த இனம் இன்று எமது உரிமைகளை நாம் பெற்று வாழ எமக்கு இடையூறாக நின்று கொண்டிருக்கின்றது என்பது தான் உண்மை. என்றும் அவர் தெரிவித்தார். (110)

## வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு

வவுனியா,ஒக் .18

பன்னாட்டு வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு வவுனியா வரோட் நிறுவனம் வவுனியாவின் பல்வேறு இடங்களிலும்பாடசாலைகளிலும் நேற்று முன்தினம் விழிப்புணர்வு நிகழ்ச்சியை மேற்கொண்டனர்.

வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்துடன் இணைந்து மேற்கொண்ட இந்த நிகழ்ச்சியில் மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.சிறிநிவாசன் விழிப்புணர்வுரையை நிகழ்த்தினார். (222)

# மன்னார் மனிதப் புதைகுழி வதந்திகளைப் பரப்பாதீர்கள்

### சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ச

**மன்னார்,ஒக் .18**


**மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பான உண்மை விபரங்கள் வெளிவருவதற்கு முன்னர் வதந்திகளை பரப்ப வேண்டாம் என மனித எலும்புக்கூடுகள் அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வு பணியானது 89 ஆவது நாளாக நேற்று புதன்கிழமை இடம் பெற்றது.

இதன் போது ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்:

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த வாரம் இடம் பெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதய சாந்த குணசேகர மன்னார் மனிதப் புதையில் கண்டு பிடிக்கப்படும் மனித எலும்புக்கூடுகள் அனைத்தும் விடுதலை புலிகளின் காலத்தில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சிங்கள மக்களின் எச்சங்களாகவும் இருக்கலாம் என தெரிவித்துள்ளார்.



புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புக்கள் இந்த மனித எலும்பக்கூடுகள் இராணுவத்தினரால் கொன்று புதைக்கப்பட்ட தமிழர்களினுடையது என திரிவுபடுத்தி ஐக்கிய நாடுகள் சபைக்குக் காண்பிக்கின்றனர்.

மனிதப் புதைகுழி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள இலங்கையிலேயே தடையவியல் நிபுணர்கள் இருக்கின்றனர்.

ஆனாலும் திட்டமிட்ட வகையில் குறித்த புதைகுழி தொடர்பான மாறுபட்ட எண்ணக் கருவை தோற்றுவிப்பதற்காக இந்தியாவில் இருந்து தடையவியல் நிபுணர்களை அழைத்துவருவதற்கு மன்னார் நீதிமன்றில் அனுமதி கோரியுள்ளனர்.

தற்போது மனிதப் புதைகுழியினை அகழ்வு செய்யும் பணியும் மனித எலும்புக்கூடுகளை அப்புறப்படுத்தும் பணிகளே நடை பெறுகின்றது.

குறித்த மனித எலும்புக்கூடுகளின் காலப்பகுதி மற்றும் ஏனைய விபரங்களை அறியும் ஆய்வுப் பணி ஆரம்பிக்கப்படவில்லை.

நாங்கள் தற்போது முழுமையாக அகழ்வு பணியையே மேற்கொள்கின்றோம். எனவே யாராக இருந்தாலும் மன்னார் புதைகுழி தொடர்பான உண்மை நிலையை அறியாது எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டாம்.

என்னுடன் இணைந்த குழுவினரின் முழுமையான ஆய்வின் பின்னர் துல்லியமான தகவல்களை வழங்குவோம்.

எனவே அதுவரை பிழையான கருத்துக்கள் , விவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

கடந்த வாரம், மன்னார் மனிதப் புதை குழியைப் பார்வையிடுவதற்காக வந்த இந்திய சிவில் சமூக உறுப்பினர்கள் வெறுமனே நீதிமன்ற அனுமதியுடன் புதைகுழியை பார்வையிடுவதற்கு பார்வையாளர்களாக வந்தார்களே தவிர வேறு எந்த விதமான காரணங்களுக்காகவும் வருகை தரவில்லை.இது வரை 185 மனித எலும்புக் கூடுகள் குறித்த வளாகத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதில் 179 மனித எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (56)



## 100 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கல்

முல்லைத்தீவு ,ஒக் .18

வடக்கு மாகாண சபையின் நிறைவு காலம் அண்மித்த நிலையில் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரனின் ஏற்பாட்டில், துணுக்காய் கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது. இதன் போது ,போரால் பாதிக்கப்பட்ட 100 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன.

இதற்கான செலவினை வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் தமது 2018 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கியிருந்தார். துணுக்காய் கல்வி வலய வலயக்கல்விப் பணிப்பாளர் பொ . ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா , கலந்து சிறப்பித்தார். மதிப்புறு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரான மருத்துவக் கலாநிதி சி .சிவமோகன் கலந்து கொண்டார். மேலும் நிகழ்வில் பல அரசியல் தலைவர்களும், அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இறுதியில் போரால் பாதிக்கப்பட்ட 100 மாணவர்களுக்கான ஈருருளிகள் விருந்தினர்களால் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வின் போது வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் வ . கமலேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்டம் ,மற்றும் துணுக்காய் கல்வி வலயத்திற்கு ஆற்றிய சேவைகள் பற்றி விருந்தினர்கள் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (72)

## கத்திமுனையில் கொள்ளை

முல்லைத்தீவு செம்மலைப்பகுதியில் உள்ள வீடு ஒன்றுள் நுழைந்த கொள்ளையர்கள் கத்தியைக் காட்டி அச்சுறுத்தி பெறுமதியான நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.இந்தச் சம்பவம் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருகையில்:

அன்று காலை 3 மணியளவில் வீட்டுக்குள் புகுந்த ஐந்து பேர், கத்தியினைக் காட்டி வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி கழுத்தில் இருந்த 9 பவுண் நகைகள்45ஆயிரம்ரூபாபணம் மற்றும் இரண்டு உந்துருளிகளை கொள்ளையடித்து சென்றுள்ளதாக முல்லைத்தீவுப்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள். இந்தச்சம்பவத்தினைத் தொடர்ந்து 14 ஆம் திகதி மாலைவேளை கேப்பாபுலவு பகுதியில், வீதி ஒன்றில் இரண்டு உந்துருளிகள் அநாதாரவான நிலையில் நிற்பதைக் கண்ட மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்கள்.

சம்பவ இடத்துக்குச்சென்ற பொலிஸார் செம்மலைப் பகுதியில் கொள்ளையடிக்கப்பட்ட உந்துருளிகளே அவை என இனம்கண்டுள்ளனர். இந்தக் கொள்ளைச்சம்பவம்குறித்துமுல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் பெருங்குற்றப்பிரிவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். (ரி3)

# முன்னாள் போராளியைத் தாக்கிய பொலிஸுக்கு நடவடிக்கை இல்லை

வவுனியா ,ஒக் .18
கடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கடந்தமாதம் கனகராயன்குளம் பகுதியில் உள்ள முன்னாள் போராளி ஒருவர் கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தாக்கபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பொறுப்பதிகாரி மீது உடனடியாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை, என்று தாக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தார்.
குறித்த பொலிஸ்பொறுப்பதிகாரி ஆர்பாட்டம் செய்தமக்களை அச்சுறுத்தி வருவதாகவும், இதனால் அப்பகுதி மக்கள் அச்சத்துடன் இருப்பதாகவும் விசாரணைகளுக்கா சென்றால் சிங்கள மொழியில் மாத்திரமே உரையாடுவதாகவும் தெரிவித்த அவர், தாக்கப் பட்ட குற்றத்திற்காக அவரை இடமாற்றம் செய்திருக்கவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். (110)



## வடமாகாணசபை உறுப்பினரால் உதவி

வவுனியா ,ஒக் .18
வடமாகாணசபை உறப்பினர் மயில்வாகனம் தியாகராசாவின் குறித்தொதுக்கப்பட்ட 2018ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து பம்பைமடு முருகன் ஆலயத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாவும், சிறி ராமபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஐம்துதாயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளும் நேற்று முன்தினம் அமைப்புகளின் தலைவர்,செயலர்,உறுப்பினர்களிடம் வழங்கிவைக்கப்பட்டது இந்த நிகழ்வில் கிராமிய அபிவிருத்தித் திணைக்களமாவட்ட உத்தியோகத்தர் திருமதி.தேன்மொழி மகேஸ்வரனும், அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

## தமிழர் நாகரீக மைய கருத்திட்ட ஆரம்ப நிகழ்வு

முல்லைத்தீவு,ஒக் .18
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்குட்பட்ட அம்பாள்புரம் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள தமிழர் நாகரீக மையத்திற்கான கருத்திட்ட ஆரம்ப நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அழைப்பில் பண்பாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள நிகழ்வு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க. வி விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (72)



## அச்சங்குளம் விளையாட்டு மைதானம் சீரமைப்பு

மன்னார்,ஒக் .18
தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் நிதி ஒதுக்கீட்டில், நானாட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட அச்சங்குளம் விளையாட்டு மைதானம் மூன்று இலட்சம் ரூபா செலவில் சீரமைப்பு செய்வதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நானாட்டான் பங்குத் தந்தை, நானாட்டான் பிரதேச உப தவிசாளர் புவனம், தேசிய இளைஞர்கள் சேவை மன்ற அலுவலர்கள், அச்சங்குளம் கிராமத் தலைவர்கள், மற்றும் விளையாட்டுக்கழக தலைவர்கள், உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (213)



## முல்லைத்தீவு மாவட்டப்படையினரின் கொடி வணக்க வழிபாடு

முல்லைத்தீவு,ஒக் .18
இலங்கைப் படையினரின் 69 ஆவது ஆண்டு நினைவினை முன்னிட்டும், "நாட்டையும், மக்களையும், பாதுகாப்போம்" என்ற தலைப்பில் இலங்கை படைப்பிரிவில் உள்ள 38 வகையான பிரிவு படையினரின் கொடிகள் 16ஆம் திகதி முள்ளியவளை தண்ணீரூற்று ஊற்றங்கரை சித்திவிநாயகர் ஆலயத்தில் வைத்துச் சிறப்பு பூசைகளும் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள படைப்பிரிவின் 38 கொடிகள் படையினரின் பாண்ட்வாத்திய அணியிசைவகுப்புடன் முள்ளியவளை முதன்மை வீதியில் இருந்து ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவில் வரை கொண்டுவரப்பட்டு அங்கு முல்லைத்தீவு மாவட்டப் படைத்தலைமையகத் தளபதி மேஜர்ஜெனரல் ராஜகுரு மற்றும் படைத்தலைமையகத் தளபதிகள் ஆகியோர் ஆலயத்திற்குஎடுத்துசென்றுஅங்குபிள்ளையார்முன்வைக்கப்பட்டு சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
நாட்டில் சாந்தியும் ,சமாதானமும் கிடைக்கவேண்டியும் ,அனைத்து மக்களும் படையினரும் நலம் பெறவேண்டியும் ,மழைகாலத்தில் நல்ல மழைபெய்து மக்களின் பயிர்கள் செழித்து விவசாயம் செழிக்கவும்,சிறப்பு பிரார்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ரி -3)



## மாணவர்களுக்கு பால் பைக்கற்றுக்கள்

கிளிநொச்சி, ஒக்.18
கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தரம் 6 வகுப்பில் கற்கும் 100 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் பால் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன. மாணவர்கள் பால்ப் அருந்தும் பழக்கத்தினை ஏற்படுத்த, கிளிநொச்சி கால்நடை மருத்துவ நிலைய மருத்துவர் கஜரஞ்சன் ,முதற்கட்டமாக 100 மாணவர்களுக்கு பால்ப் பைக்கற்றுக்கள் வழங்கி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் என கல்லூரியின் அதிபர் கி.விக்னராஜா தெரிவித்தார். (159,9)

## கொக்குத்தொடுவாயில் ஒரே இரவில் ஐந்து ஆடுகள் களவு

முல்லைத்தீவு,ஒக் .18
முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் வாழ்வாதாரத்திற்காக வளர்த்து வந்த ஆடுகளில் ஐந்து ஆடுகள் களவு போயுள்ளதாக ஆட்டு உரிமையாளர் முல்லைத்தீவு பெரலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார் கள்.
இந்த விடயம் குறித்து தெரியவருகையில் கடந்த 8ஆம் திகதியன்று இரவு, வீட்டின் பட்டியில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆடுகள் களவாடப்பட்டுள்ளன. இது குறித்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.
அத்தோடு செம்மலை நாயாறுப் பகுதியில் கல்முனையினைச் சேர்ந்த ஆட்டுவியாபாரிஒருவருக்கு ஆடுகள் விற்கமுற்பட்ட நபர் ஒருவரை கைதுசெய்துள்ளார்கள். இவரால் களவாடப்பட்ட இரண்டு ஆடுகளும் மீட்கப்பட்டுள்ளன.
கைது செய்யப்பட்ட நபரை கடந்த 9 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது .
ஆடுகள் களவு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட பெருங்குற்றப்பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர். (ரி 3)

## அனுமதி இன்றி உணவகம் இயங்குவதாகக் குற்றச்சாட்டு

### உரிமையாளர் மறுப்பு

வவுனியா,ஒக்.18
வவுனியா கனகராயன்குளம் பகுதியில் உள்ள தாவுத் உணவகம் பிரதேச சபை மற்றும்,சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியின்றியே செயற்பட்டுவருதாக வவனியா வடக்கின் ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்திற்கு பொது அமைப்புகளால் கொண்டு வரப்பட்டது.
இதன்போது பதிலளித்த வவுனியாவடக்குப் பிரதேச சபை தலைவர் இ.தணிகாசலம், குறித்த உணவகம் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாகவும், அதற்கான நடைமுறைகள் பரிசீலிக்கபட்டு வருவதாகவும்தெரிவித்தார். அனுமதியின்றி வர்த்தக நிலையங்கள் நடத்தமுடியாது என்ற சட்டவிதிகள் சபையில் இருக்கின்றன. அதனடிப்படையில் நாம் நடவடிக்கையை எடுக்கவுள்ளோம். அத்துடன் வவுனியா வடக்கைப் பொறுத்தவரை பல கடைகள் அனுமதியின்றியே நடத்தபடுகின்றன. ஒருகடைக்கு நடவடிக்கை எடுத்து இன்னொரு கடைக்கு நடவடிக்கை எடுக்காமல் விடுவது முறையல்ல, எனவே அதற்குள் இருக்கின்ற நடைமுறைப் பிரச்சினை கள் தொடர்பாக ஆராய்ந்துவருவதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை குறித்த உணவகத்தின் உரிமையாளர் கருத்துக் கூறுகையில்: முறைப்படியான அனுமதிகளைப்பெற்றே தான் உணவகத்தை நடத்துவதாகவும், அவ்வாறு அனுமதிபெறாமல் உணவகத்தை நடத்தவில்லை என்றும் தெரிவித்தார். (110)

## மன்னார் நகர மத்தியில் அம்மாச்சி உணவகம்

### எதிர்பார்ப்பில் மக்கள்

மன்னார்.ஒக். 18
மன்னார் நகர மத்தியில் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான காணி வழங்கப்பட்டு, சில தினங்களுக்கு முன் உணவகத்திற்கான அடிக்கல் நடப்பட்டது.
அம்மாச்சி உணவகம் வடக்கு மாகாண மாவட்டங்கள் தோறும் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று செயற்படுவதுடன், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இதன் மூலம் வேலைவாய்ப்புக்களைப் பெற்று தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்கின்றனர்.
வவுனியா மாவட்டத்தில் இயங்கும் அம்மாச்சி உணவகத்தை ஆரம்பித்து அதை மிகத் திறமையாகச் செயற்பட காரணமாகவிருந்தவர்களில் மிகவும் முக்கியமானவராக கருதப்படும் திருமதி இருதயநாதன் அல்ஜின் குருஸ்சிடம் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் அம்மாச்சி உணவகம் பற்றி மேலதிக தகவல்களை கேட்டபோது:
இந்த அம்மாச்சி உணவகத்தை மன்னாரில் ஆரம்பிப்பதன் நோக்கம் வாழ்வாதார சவால்களை எதிர்நோக்கியுள்ள பெண்களுக்காக மட்டுமே, எனக் கூறிய அவர் மன்னார் மாவட்டத்தில் கணவனை இழந்த பெண்கள், மாற்றுத்திறனாளிகளான பெண்கள், வறுமைக்கோட்டிற்கு கீழ்க் குடும்பத்தை நடத்த போதிய வருமானமில்லாத பெண்கள், முதலானவர்களுக்குப் போதிய வருமானங்களை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியாகவே அம்மாச்சி உணவகம் மன்னாரில் ஆரம்பிக்கப்படுகிறது என்றார் .
இந்த உணவகத்திற்கான அனைத்துவிதமான பணியாளர்களும் மாவட்டம் முழுவதிலும் இருந்து எடுக்கப்படுவார்களா? என்று கேட்டபோது :
மிக தூரப் பிரதேசங்களில் உள்ளவர்களை இதற்கு உள்வாங்குவது சாத்தியமற்றது. மன்னார் நகரினை அண்டிய கிராம மட்டங்களில் உள்ள பெண்கள் அமைப்பு , விவசாய பெண்கள் அமைப்புகளை உள்வாங்கி உண்மையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வாழ்வாதாரத்தை பெற்றுக் கொடுக்க அம்மாச்சி உணவகம் செயற்படும் - என்றார். (213)





யாழ்ப்பாணம் வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்புகடந்த29ஆம்திகதிநடைபெற்றது. முதன்மைவிருந்தினராக இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் சி.தவலிங்கம் கலந்துகொண்டார்.

பதிவாளரை அச்சுறுத்தியமை:

# இருதரப்பு இணக்கமில்லை வழக்கு இனி விசாரணைக்கு

**யாழ்ப்பாணம், ஒக்.18**

**மல்லாகம் நீதிமன்றப் பதிவாளரை தொலைபேசியில் அச்சுறுத்திய வழக்கில், இருதரப்பு இணக்கப்பாடு எட்டப்படாததால் அதனை விசாரிக்க நீதிமன்று திகதியிட்டுள்ளது.**

சட்டத்தரணிசர்மினிவிக்னேஸ்வரன் தன்னை தொலைபேசியில் அச்சுறுத்தினார் என்று மல்லாகம் நீதிமன்றப்பதிவாளர்ஆனந்தராசா நந்தினிதேவி குற்றஞ்சாட்டி தெல்லிப்பளைப்பொலிஸில்முறையிட்டிருந்தார். அந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதும் எதிரியான சட்டத்தரணி நீதி மன்றில் முற்படவில்லை. அதனால் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதனால் சட்டத்தரணி சர்மினி பிறிதொரு சட்டத்தரணி ஊடாக மன்றில் முற்பட்டார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு வந்தது.

நீதிமன்றப் பதிவாளரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மல்லாகம் நீதிவான்நீதிமன்றில்முன்னெடுக்கப்படும் வழக்கை இணக்கப்பாட்டுடன் முடிவுறுத்தும் யோசனைக்கு எதிரி தரப்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மறுப்புத் தெரிவித்தார்.

வழக்கின் சாட்சியான நீதிமன்றப் பதிவாளர்அரசசெலவில்வழக்கின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டமையை துரும்பாக எடுத்துக்குக் கொண்டு தனது குறுக்கு விசாரணையை சுமந்திரன் மன்றில் முன்னெடுத்தார்.

சட்டத்தரணிசர்மினிவிக்னேஸ்வரன்தம்மைதொலைபேசியில்அச்சுறுத்தினார் என்று மல்லாகம் நீதிமன்றப்பதிவாளர்தெல்லிப்பளைப் பொலிஸ் நிலையத்தில் 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் முறைப்பாடு வழங்கினார்.

வழக்கின் சாட்சியான நீதிமன்றப் பதிவாளரிடம் வழக்குத் தொடுநர் தரப்பு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி சுமந்திரன் சாட்சியிடம் குறுக்கு விசாரணைகளை முன்னெடுத்தார்.

வழக்கு விசாரணை தொடர்பில் வழக்கின் சான்றுப்பிரதி ஊடாக அறிந்துகொண்டதனைசாட்சிஒத்துக்கொண்டார். சான்றுப் பிரதி எவ்வாறுபெறப்பட்டதுஎன்றுஎதிரி தரப்புச்சட்டத்தரணிகேள்விஎழுப்பினார். சான்றுப்பிரதியை அரச செலவில் பெற்றுக்கொண்டதாக நீதிமன்றப்பதிவாளர்சாட்சியமளித்தார்.

அந்த விடயத்தை கையிலெடுத்த எதிரி தரப்புச் சட்டத்தரணி, வழக்கின்சாட்சிஎவ்வாறுஅரசசெலவில் எடுக்க முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

மேலும் மன்னார் நீதிமன்றம் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்ட போது, அங்கு பதிவாளராகக் கடமையாற்றியது யார் என்று எதிரி தரப்புச்சட்டத்தரணிகேள்விஎழுப்பினார். அப்போது மன்னார் நீதிமன்றின் பதிவாளராக தான் கடமையாற்றியதாக சாட்சி தெரிவித்தார்.

அந்தக் காலப்பகுதியில் மன்னார் நீதிமன்ற நீதிபதி யார் என்று சட்டத்தரணி கேள்வி எழுப்பினார்.

நீதிபதி அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் கடமையாற்றினார் என்று சாட்சி சாட்சியமளித்தார்.

இலங்கை முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மன்னார் நீதிமன்றம் மீதான கல் வீச்சு தொடர்பில் அங்கு பதிவாளராகக் கடமையாற்றிய நீங்கள் பொலிஸில் முறைப்பாடு வழங்கினீர்களா? என சுமந்திரன் கேட்டார். சாட்சி இல்லை என்று பதிலளித்தார்.

"நீதித்துறைக்கே அச்சுறுத்தலாக அமைந்த அந்தச் சம்பவம் தொடர்பில்உங்களால்அப்போதுமுறைப்பாடு வழங்க முடியவில்லை. தொலைபேசிஊடாகஉங்களுக்கு வந்தஅச்சுறுத்தல்தொடர்பில்அன்றையதினமேபொலிஸில்முறைப்பாடுவழங்கவில்லை.

நீதிவானின் அனுமதியுடன் அப்போதை யாழ்ப்பாண மேல் நீதிமன்றநீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் ஆலோசனையுடன் மறுநாள் தெல்லிப்பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கினீர்கள் என்று எதிரி சார்பில் நான் தெரிவிக்கின்றேன். அதனை ஏற்றுக்கொள்வீர்களா?" என்று சட்டத்தரணி சாட்சியிடம் கேட்டார். சாட்சி இல்லை என்று மன்றுரைத்தார்.

இந்தநிலையில்சட்டத்தரணிக்கும் நீதிமன்றப்பதிவாளருக்கும்இடையிலானஇந்தவழக்கைஇணக்கப்பாட்டுடன் முடிவுறுத்துவோமா? என்றுமன்றுஎதிரிதரப்பிடம்வினவியது. அதற்குஎதிரிதரப்புச்சட்டத்தரணி மறுப்புத் தெரிவித்ததுடன், வழக்கை எதிரி சார்பில் முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக மன்றுரைத்தார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4)

தமிழ் அரசுக் கட்சியின்

## பருத்தித்துறை, உடுப்பிட்டி கிளைகளைச்சீரமைக்கக்குழு

யாழ்ப்பாணம், ஒக். 18

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிக் கிளைகள் விரைவில் சீரமைக்கப்படவுள்ளன. இந்தத் தொகுதிகளில் வட்டாரக் கிளைகளை அமைப்பதற்கு மாகாண சபை உறுப்பினர்களான வே. சிவயோகன், கே.தர்மலிங்கம், ச.சுகிர்தன், கரவெட்டிப் பிரதேச சபைத்தலைவர்த.ஐங்கரன்ஆகியோர் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சீரமைப்புத்தொடர்பாகபருத்தித்துறைத் தொகுதிக்கான ஆலோசனைக் கூட்டம் பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவிலும், உடுப்பிட்டித் தொகுதிக்கான ஆலோசனைக்கூட்டம் கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் உள்ள தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்திலும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

கூட்டங்களில் தமிழ் அரசுக்கட்சியின்யாழ்ப்பாணமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்கள்எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், தமிழ் அரசுக்கட்சியின் பொ.கனகசபாபதிஆகியோர்கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை நகரசபை பிரதேச சபைகளின்வட்டாரங்கள்தோறும் கிளைகளையும், வல்வெட்டித்துறை நகரசபை, கரவெட்டிப் பிரதேச சபைகளின் வட்டாரக் கிளைகளையும் அமைத்து முடித்த பின்னர் இரு தொகுதிகளுக்குமான கிளைகளை அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. (4)

## யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் பொலிஸ் கைது செய்ய முற்பட்டதா?

*திறந்த நீதிமன்றில் ஓடிவந்து பெண் முறைப்பாடு பொலிஸாரின் செயற்பாட்டை நீதிமன்று கண்டிப்பு*



யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் தாக்கியமை மற்றும் கைது செய்ய முற்பட்டமை தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள்

தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன், திறந்த நீதிமன்றில் கடும் அதிருப்தி வெளியிட்டார்.

நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்துசந்தேகநபர்ஒருவரைக் கைது செய்ய முற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரைக் கண்டித்த நீதிவான், அவரை யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் முற்படுத்தி விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றப் பொலிஸ் அலுவலருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம்நீதிவான்நீதிமன்றில் வழக்கு ஒன்றுக்காக சந்தேகநபர்ஒருவர்நேற்றுமுன்தினம் முற்பட்டிருந்தார். சந்தேகநபர் வழக்கு நடவடிக்கை நிறைவடைந்து திறந்த மன்றிலிருந்து வெளியேறியபோது, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் அவரைப் பிறிதொரு வழக்கில் கைது செய்ய முற்பட்டுள்ளார்.

அந்த நேரமே "பொலிஸ் உத்தியோகத்தர் தனது கணவரை நீதிமன்றவளாகத்துக்குள்வைத்துக் கைது செய்ய முற்பட்டார் என்று பெண் ஒருவர் திறந்த மன்றுக்குள் பதற்றத்துடன் ஓடி வந்து முறையிட்டார். பெண்ணின் குற்றச்சாட்டுத்தொடர்பில் ஆராயுமாறு நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர்,நீதிமன்றவளாகத்துக்குள் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை அழைத்து வந்து மன்றில் முற்படுத்தினார்.

"குற்றஞ்சாட்டும் பெண்ணின் கணவரைக் கைது செய்ய முற்பட்டீரா? என்று பொலிஸ் உத்தியோகத்தரிடம் மன்று கேள்வி எழுப்பியது.

"பெண்ணின் கணவர் வழக்கு ஒன்றில் சந்தேகநபராக உள்ளார். அவரைப் பார்ப்பதற்காகவே நீதிமன்ற வளாகத்துக்குள் வந்தேன்" என்றுபொலிஸ்உத்தியோகத்தர் பதிலளித்தார்.

"சந்தேகநபருக்கு இந்த நீதிமன்றில்இன்றுவழக்குஉள்ளது என்று அறிந்து கொண்டுதான் அவரைத் தேடி இங்கு வந்தீரா? என்று மன்று மற்றொரு கேள்வியை எழுப்பியது. அதற்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஆம் என்று பதிலளித்தார்.

"அண்மையில் நீதிமன்ற வளாகத்துக்குள்வைத்துசந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டார். இன்று சந்தேகநபர் ஒருவரைநீதிமன்றவளாகத்துக்குள் வைத்துகைதுசெய்யும்முயற்சி பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகிறது.

நீதிமன்ற வளாகத்துக்குள் இவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்பது தெரியுமா?" என்று நீதிவான் அதிருப்தியை வெளியிட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் செயலைக் கண்டித்த நீதிவான், அவர்மீது சுமத்தப்பட்டுள்ளகுற்றச்சாட்டை விசாரணை செய்யுமாறு யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கினார். அத்துடன், நீதிமன்றவளாகத்துக்குள்நுழைந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்ய முற்பட்டார் என்று குற்றச்சாட்டை முன்வைத்தவர் மற்றும் அவரது மனைவியிடம்வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறுநீதிமன்ற பொலிஸ் அலுவலருக்கு நீதிமன்று கட்டளை வழங்கியது.

இதேபோன்றதொரு சம்பவம் சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. அதனால்கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்டசிலர்சிக்கில்மாட்டினர். (4)

## 4 வாகனங்கள் மோதி விபத்து

ஒரேநேரத்தில்நான்குவாகனங்கள்ஒன்றுடன்ஒன்று மோதிக் கொண்டன. அதனால் உந்துருளியில் வந்தவர் டிப்பர் சாரதி ஆகியோர் காயங்களுடன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இந்தச்சம்பவம்கோப்பாய்கைதடிவீதியில்நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. முன்னால் சென்ற டிப்பர் வாகனத்தை படி வாகனம் முந்த முற்பட்ட வேளையில் எதிரே வந்த உந்துருளி மற்றும்லொறி ஆகியவை ஒரே நேரத்தில் நிறுத்த முற்பட்டபோது ஒன்றுடன்ஒன்றுமோதிவிபத்துஏற்பட்டதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. காயமடைந்தஉந்துருளி மற்றும்டிப்பர்சாரதிகள்யாழ்ப்பாணப்போதனாமருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4.9.159)

## கைதடி குருசாமியில் பரிசளிப்பு நாளை

கைதடி குருசாமி வித்தியாலய வாணி விழாவும் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் மதிப்பளிப்பும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலயமண்டபத்தில்நடைபெறும். வித்தியாலயஇந்து மாணவர் மன்றத் தலைவர் இ.அனிஸ்ரன் தலைமையில்நடைபெறும்நிகழ்வுக்குமுதன்மைவிருந்தினராகவடக்குமாகாணசபைஉறுப்பினர்பா.கஜதீபனும்சிறப்புவிருந்தினராகதென்மராட்சிகல்விவலய ஆரம்ப பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிவதாசனும், மதிப்புறு விருந்தினராக ஓய்வுநிலை அரச அலுவலர் திருமதி ப.செல்லத்துரையும் கலந்துகொள்வர்என்றுஅறிவிக்கப்பட்டது. (4,159,9)

## த.தே.ம.முன்னணியின் சபை உறுப்பினர் உட்பட 6 பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவரூபன் லகிந்தன் உட்பட ஆறு பேரை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் தாக்கியதில் சகோதரர்கள் இருவர் காயமடைந்து தெல்லிப்பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

காயமடைந்தவர்கள் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்டவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்திருந்த சுன்னாகம் பொலிஸார், வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நான்கு பேரையும் காயமடைந்தவர்கள் தரப்பில் இரண்டு பேர் உட்பட ஆறு பேரையும் சுன்னாகம் பொலிஸார் நேற்றுமுன்தினம் காலை கைது செய்திருந்தனர்.

விசாரணை நடத்தி பிற்பகல் மல்லாகம் நீதிவானிடம் முற்படுத்தினர்.

வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நான்கு பேர் சார்பில் அரசதலைவர் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் சட்டத்தரணிகளான சுகாஸ், மணிவண்ணன், சுபாஸ், றோய் ஆகியோரும் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் சார்பில் சட்டத்தரணி சர்மினி விக்கினேஸ்வரனும் முற்பட்டிருந்தனர்.

பிரதேச சபை உறுப்பினர் தலைப்பகுதியில் இரும்புக் குழாயால் தாக்கியுள்ளார் என்பதால் கொலை முயற்சி தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 300 இன் கீழ் வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என்று சட்டத்தரணி சர்மினி விக்கினேஸ்வரன் மன்றில் கோரினார். இதன்போது இது தொடர்பாக ஆராயப்படும் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். இரு தரப்பு சட்டத்தரணிகளின் விவாதங்களையும் பரிசீலித்த நீதிபதி பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட ஆறு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29அம் திகதிவரை 'விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (4)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஆறு மாதங்களாக நடக்கவில்லை

## இணைத்தலைவர்கள் திகதி தருகிறார்களில்லை தந்தால் நடத்தலாம் என்கிறார் பிரதேச செயலர்

சாவகச்சேரி, ஒக். 18

**தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக நடத்தப்படவில்லை. அதனால் சபையின் பல்வேறு அபிவிருத்திவேலைகளுக்கு அனுமதிபெறமுடியவில்லை, அபிவிருத்தி வேலைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.**

சாவகச்சேரி பிரதேச சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஒவ்வொரு பிரதேசசெயலக பிரிவுகளிலும் மூன்று மாதங்களுக்குஒருதடவையாவதுஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்க ளுக்கு அனுமதிவழங்கவும்பிரதேசத்தில் காணப்படும் குறைபாடு களை நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சபையால் மேற்கொள்ளப்படும் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெறப்படல் வேண்டும். கடந்த பெப்ரவரிமாதத்தின் பின்னர் இன்னமும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கூட்டப்படவில்லை. பல்வேறு நெருக்கடிகளை நாம் எதிர்நோக்குகின்றோம். பிரதேசஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை விரைந்து நடத்த பிரதேசசெயலர் விரைந்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று தவிசாளர் தெரிவித்தார்.

இது குறித்துபிரதேசசெயலாளரிடம் கேட்டபோது, கூட்டங்களை நடத்துவதற்குத் தயாராகவே உள்ளோம். ஆனால் இணைத்தலைவர்கள்உரியதிகதியைத்தருகிறார்களில்லை. அவர்கள் ஒன்றித்துத் திகதியை அறிவித்தால் உடனேயே கூட்டத்தை நடத்தலாம் என்று தெரிவித்தார். (4,9,159)



இலங்கைமின்சாரசபையின் சுன்னாகம் பிரதேச பொறியியலாளர்அலுவலகத்தில்மின் பட்டியல் செலுத்துவதற்கான காசுக்கருமபீடம்நேற்றுமுன் தினம்திறந்துவைக்கப்பட்டது. மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் மற்றும்சுன்னாகம்மக்கள்வங்கி முகாமையாளர் இணைந்து அதனைத் திறந்துவைத்தனர். (127)

# திருட்டுப்பேர்வழிகள் இருவர் மறைகாணிகளால்மாட்டினர்

## மின்கம்பத்தில் கட்டிக் கவனித்த பின்னர் பொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் கடந்த இரு நாள்களாக பகல் இரவு வேளைகளில் திருட்டுகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் பிரதேச இளைஞர்களால் மடக்கப்பட்டனர்.

மறைகாணியில்அவர்களதுநடமாட்டங்கள்அவதானிக்கப்பட்டபின்னர் இருண்டுசந்தேகநபர்களும்நேற்றுமுன்தினம்பிடிக்கப்பட்டுமின்கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டனர். நையப்புடைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கந்தர்மடம்பகுதியிலுள்ளஅலைபேசிவிற்பனைநிலையம்முன்பாகவுள்ள வீட்டில் இருந்த நீர் இறைக்கும் இயந்திரம், மணல்தறை ஒழுங்கை, சங்கிலியன் வீதிகளில் களவு, வழிப்பறி நீடித்தது. அதனால் பிரதேச இளைஞர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

மறைகாணியில் ஈருருளிகளில் இருவரும் பயணித்துள்ளனர். இளைஞர்கள் அவர்களை மறித்தபோது பொதிகளுடன் தப்பியோடிவிட்டனர். இந்த நிலையில் மேலும் இரு இளைஞர்கள் அகப்பட்டுக்கொண்டனர். அவ்வாறுஅகப்பட்ட இளைஞர்களின் பொதியைச்சோதனையிட்டபோது கோவில்களில்வைக்கப்படும்இருகுத்துவிளக்குகள், தட்டுகள், தாம்பாளம் என்பன உள்ளிட்ட பல பித்தளைப் பொருள்கள் இருப்பது கண்டறியப்பட்டது. அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியை அண்மித்துள்ளவர்கள் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அவை சுமார் 50 கிலோவுக்கும் மேற்பட்ட நிறையுடையவை. குறித்த பொருள்களின் உடமையாளர்களும் இனங்காணப்பட்டனர்.

இரு நாள்களாக அந்தப் பகுதியில் இடம்பெற்ற களவுகள் தொடர்பில் கேட்டபோது அதில் பலவற்றைத் தாமே திருடினோம் என்று குற்றத்தில் ஈடுபட்டதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். அவர்கள் ஒருபுறம் இளைஞர்களின் விசாரணையில் இருக்க திருடர்கள் இருவர் பிடிபட்டனர் என்று ஊரில் கதைபரவியது. ஏற்கனவே உடமைகளைத்திருட்டுக்கொடுத்தவர்களும் பிரதேசத்திலுள்ள ஏனையோரும் அங்கு குவிந்தனர். இதனால் அந்தப் பகுதிபெரும்பரபரப்பாககாணப்பட்டது. சம்பவம்தொடர்பில்கோப்பாய்ப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் இருவரையும் சான்றுப் பொருள்களுடன் கைது செய்து கொண்டுசென்றனர். அவர்கள்விசாரணையில்உள்ளனர்என்றுபொலிஸார் தெரிவித்தனர். (4,105)



# சிகிச்சைக்கு அழைக்கப்பட்ட பெண் கடத்தப்படுவதுபோன்றுதென்பட்டது

## அதனால் ஏற்பட்டது பரபரப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

உளநலம் பாதிக்கப்பட்ட பெண் சிரமத்தின் மத்தியில் முச்சக்கர வண்டியில்ஏற்றிக்கொண்டுசெல்லப்பட்டார். அந்தப் பெண்ணை சிரமத்தின் மத்தியில் கொண்டு சென்றவிதம் அவர் கடத்தப்படுவது போன்று தென்பட்டதால் அந்த முச்சக்கரவண்டியை நல்லெண்ணம் கொண்ட ஒருவர் பின்தொடர்ந்துள்ளார். பின்னரே அவர் விடயம் என்னவென்று தெரியவந்தது.

சம்பவம்தொடர்பில்மேலும்தெரியவருவதாவது,

முச்சக்கரவண்டி உரிமையாளர் நீர்வேலியைச் சேர்ந்தவர். அவரது மனைவி உளநலம் பாதிக்கப்பட்டவர். மனைவியை அரியாலையில்உள்ளதேவாலயத்துக்கு அழைத்துச் சென்றபோது நோய் தீவிரமாகியுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டது.

அதனால்அவரைத்தெல்லிப்பழை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லமுயற்சித்தனர். நோயைக் கட்டுப்படுத்த முடியாததால் அவரது கையைத் துணியால் கட்டுவதற்கு கணவன் முயன்றுள்ளார். அதன்போது மனைவி கையை விடுவிப்பதற்காக அங்கும் இங்கும் அசைத்து தனது கையைக் கட்டுவதனைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதன்போதே அந்த முச்சக்கரவண்டியின் பின்னால் பயணித்த கைதடியைச் சேர்ந்தவர், பெண்ணின் கை அசைந்தவிதம், கட்டப்பட்டவிதம், அவரது அசைவு என்பவற்றைக் கண்டு அந்தப் பெண் கடத்தப்படுகிறார்என்றுகருதிபின்தொடர்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்துபொலிஸ்விசாரணையிலும் குறிப்பிட்டுள்ளார்.

தனது முச்சக்கரவண்டியில் மகளின்துணிகாணப்பட்டது. மனைவியைக் கட்டும்போது துணி வெளியேவீழ்ந்துவிட்டது. என்று தெரிவிக்கப்பட்டது.

"முச்சக்கர வண்டியில் இருந்த பெண்ணின் கையொன்று வெளியே தெரிந்தது. அந்தக் கை தன்னைக் காப்பாற்றும் படி கூப்பிடுவதாக இருந்தது. ஆகவே நான் அந்த வண்டியைப் பின் தொடர்ந்தேன். உள்ளே மூன்றுபேர் இருந்தனர். இரண்டுஆண்கள்மற்றும் ஒரு பெண் உள்ளடங்குவர். வாயில் துணியால் கட்டியபடி பெண்ணைக் கடத்திச் செல்வதாகவு தெரிந்தது. வண்டியில் உள்ளே இருந்த நபர் மேசன் வேலை செய்பவர். அவரின் காலில்சிமெந்துக்கரைசல்அடையாளம் இருந்தது. கடத்தப்பட்ட பெண்ணின் கை முச்சக்கர வண்டிக்கு வெளியே தொடர்ந்து அசைவது தெரிந்தது. ஆகவே நான் அவர்களைப்பின்தொடர்ந்தேன். இடைவழியே சிலரிடம் விடயத்தைக்கூறினேன். அவர்கள் அதனைக் கண்டுகொள்ளவில்லை. பின் தொடர்ந்து வரும் வழியே ஒரு பொலிஸாரையும் காணவில்லை. திருநெல்வேலி சமிக்ஞை விளக்கில் கூட முச்சக்கர வண்டி நில்லாமல் சென்றது. நானும் பின்னால் சென்றிருந்தேன். மருத்துவ பீடத்துக்கு முன்னால் ஒரு பாவாடை ஒன்றை வெளியேஎறிந்துவிட்டுமுச்சக்கர வண்டி கொக்குவில் பக்கமாகச் சென்றது. அவரசர பொலிஸ் தொலைபேசிஇலக்கம், யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்கும் அலைபேசியில் அழைப்பு எடுத்தேன்" என்றார். சம்பவஇடத்துக்கு யாழ்ப்பாணப் பொலிஸார் வந்தனர். விசாரணை நடத்தினர்.

வீசப்பட்டபாவாடையையும்எடுத்துச் சென்றனர். இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

எனினும் முச்சக்கரவண்டியைப் பின்தொடர்ந்தவரின் செயற்பாடு பாராட்டத்தக்கது என்று பலரும் தெரிவித்தனர். உண்மையிலேயே பெண் கடத்தப்பட்டிருந்தால் அவரே அதைத் தடுத்து நிறுத்தி அல்லது ஏனையவர்களுக்குத்தகவல்வழங்கிவிரைந்து செயற்படக் காரணமாகியிருந்திருக்கலாம். காப்பாற்றியிருக்கலாம். (4,7,26)

## சீருடைக்கான வவுச்சரில் மாற்றமில்லை

*கூறுகின்றார் கல்வி அமைச்சர்*



கொழும்பு, ஒக் 18

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை துணிக்குப் பதிலாக, வவுச்சர் வழங்குவதற்குக் கல்வி அமைச்சு எடுத்துள்ள தீர்மானத்தில் எத்தகைய மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது எனக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு சில தரப்பினர், பழைய முறைப்படி சீருடைத் துணியே வழங்கப்படுமென கூறிவருவதில் எத்தகைய உண்மையும் கிடையாது.

மேலும் இவ்வாறான அறிக்கைகள் பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவதை நோக்கமாகக் கொண்டதாக அமைந்துள்ளது. அத்துடன் வவுச்சர் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் தற்போதைய அரசால் மோசடி, ஊழல் மற்றும் நிதிகளை தவறாகப் பயன்படுத்துவது ஆகியவற்றை முடிவுக்கு கொண்டுவர முடிந்தது - என்றார்.

## மின் கட்டணத்தை அதிகரிக்க இரகசிய நடவடிக்கை ஆரம்பம்

*மின்சார ஊழியர்கள் சேவைச் சங்கம் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஒக். 18

இலங்கை மின்சார சபையினுள் மிகவும் இரகசியமாக மின்சார பட்டியலுக்கான கட்டணத்தை அதிப்பதற்கான சூத்திரமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் படிப்படியாக எடுக்கப்பட்டு வருகின்றன என்று இலங்கை மின்சார ஊழியர்கள் சேவை சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் குற்றம் சாட்டிள்ளார்.

கொழும்பில் உள்ள தேசிய ஊழியர்கள் மத்திய நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அடுத்த மாதம் 16ஆம் திகதிக்கு முன்னதாக இந்தச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறான நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படவில்லை என்று எவராவது கூறமுடியுமா? என நான் பகிரங்கமாக சவால் விடுக்கின்றேன். எனவே இந்தச் செயற்பாட்டினை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (61)

## காதலிகளின் ஒளிப்படங்களைக் காட்டி கப்பம் கோரிய மாணவர்கள் இருவர் கைது

கொழும்பு, ஒக் 18

காதலிகளிடம் ஒளிப்படங்களைக் காட்டி கப்பம் கோரிய மாணவர்கள் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தின் பல்லெகம, மொரகெட்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18 மற்றும் 19 வயதுடைய மாணவர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். எம்பிலிப்பிட்டிய முதன்மை வீதியைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் 50 இலட்சம் ரூபாவையும், அதே பகுதியை சேர்ந்த மற்றுமொருவரிடம் 10 இலட்சம் ரூபாவையும் கப்பமாகப் பெற முயற்சித்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களான, மாணவர்கள் இருவரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை சிறுவர் தடுப்புக்காவலில் வைக்குமாறு எம்பிலிப்பிட்டிய நீதிவான் உத்தரவிட்டார். இவர்கள் கப்பம் கேட்டு அச்சுறுத்திய அலைபேசி இலக்கங்களை, தொழிநுட்ப உதவியின் மூலம் இனங்கண்டு மேற்கொண்ட விசாரணைகளையடுத்து, மறைந்திருந்த இவர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்த மாணவர்கள் இருவரும் பல இளம் பெண்களுடன் காதலில் ஈடுபட்டுள்ளதுடன், அது தொடர்பான ஒளிப்படங்களை காண்பித்து அவர்களை அச்சுறுத்தி கப்பம் கோர முயற்சித்துள்ளதாகப் பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

# நுனிப்புல் மேய்வதாகவே பார்த்தால் தமிழருக்குத் தீர்வு ஒருபோதும் எட்டாது

*ஆழஊடுருவிச் செயற்படுமாறு பொதுச் செயலர் கூறுகிறார்*

**கொழும்பு, ஒக். 18**

**தமிழர் அரசியல் என்பது நுனிப்புல் மேய்ந்த செயற்பாடு அல்ல. வெளி அசைவுகளால் வேகம்கொள்ளலும் அல்ல. அவதானம், நிதானம், நியாயமான மனிதனின் அங்கீகாரமே அது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் தந்தை செல்வா சிலை திறப்பு நிகழ்வு மட்டக்களப்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. அதில் தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கா, கனடா, ஆவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகள் கூட்டாட்சிக்கோட்பாட்டைக் கடைப்பிடித்து உண்மையான வாழ்வு பெறுகின்றன, ஒருங்கிணைந்துவாழ்கின்றன என்பதை தந்தை செல்வா வலியுறுத்தினார். இதனைப் பெறுவதற்கான வழிசாத்வீக வழியே - என்றார்.

பேரினவாதம் அசைந்து கொடுக்கவில்லை. அதனால் தனிநாடு ஒன்றுதான் வழி என்றுவட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றினார். "தமிழீழம் பெறுவதென்பது வில்லங்கமான காரியம் தான். ஆனால், தமிழினம் தப்பிப் பிழைக்க வேண்டும் என்றால்அதைவிட வேறு வழியில்லை" என்றார்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மக்களிடம் விநியோகித்ததற்காகத் தமிழ்த் தலைவர்கள்கைது செய்யப்பட்டார்கள். தந்தை செல்வா 66 சட்டத்தரணிகளுடன் நீதிமன்றில் முன்னிலைப்பட்டார். எதிர்த்து வாதிட்டார். வேறுவழியின்றி அரசு வழக்கைத் திரும்பப்பெற்றது.

குற்றம் சாட்டப்பட்வர்களை நீதிமன்றம் விடுவித்தது. அறவழியிலே தமிழீழம்பெறுவதற்கான வழிவகைகளைச் சிந்தித்துக் கொண்டிருந்தார் தந்தை.

தந்தை வழியில் தான் தமிழருக்கு விடிவு. அப்படியென்றால் அவரது சிந்தையைத் தெரிந்திடவேண்டும். அரவணைத்தல், புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்தல், அடுத்தவரை மதித்தல்,அவர்களுக்குள்ள நெருக்குவாரங்களை அங்கீகரித்தல், அவற்றை சமாளித்துக் கொண்டு அவர்களை வெளியே வரச் சந்தர்ப்பம் அளித்தல், வெளிப்படையாகச் செயற்படுதல் என்றஇன்னோரன்ன விடயங்கள் அவரது வரலாறு எமக்குக் காட்டும் பாடங்கள். அவரை ஊன்றிப்படிக்க வேண்டும். அவர் இருந்தால் எப்படிச் செயற்படுவார் என்பதைக் கண்டுகொள்ளஅதுதான் மார்க்கம்.

தமிழர் அரசியல் என்பது நுனிப்புல் மேய்ந்த செயற்பாடு அல்ல. வெளி அசைவுகளால் வேகம்கொள்ளல் அல்ல. அவதானம், நிதானம், நியாயமான மனிதனின் அங்கீகாரம் இவற்றின்வழிகாட்டியாய் எமது பெருந்தலைவர் எம்மோடு இருந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்.

வீணை சிறப்பானது, வித்துவானும் கெட்டிக்காரன், அதன் தந்திகளும் ஒத்துழைத்தால் தான்நாதம் சிறக்கும் என்று பேரறிஞர் அண்ணா கூறுவார். இந்த வரிகளை மனங்கொள்வோம். அதன் ஆழத்தைப் புரிந்து கொள்வோம் - என்றார்.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்றஉறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா உள்ளிட்ட பல அரசியல்வாதிகள் கலந்து கொண்டனர்.

# ஞானசார தேரருக்கு சட்டத்தில் பாரபட்சம்

பொது மன்னிப்பு வழங்குமாறு சுகத தேரர் கண்ணீருடன் கோரிக்கை




கொழும்பு, ஒக் 18

அரசில் சட்டம் ஒருதலை பட்சமாகவே செயற்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கும் வழங்கப்படுகின்ற சலுகைகள் ஞானசார தேரருக்கு வழங்குவதில் அரசு பாரபட்சம் பார்க்கின்றது என்று ராவணபலய அமைப்பின் பொதுச்செயலாளர் இத்தானந்தே சுகத தேரர் தெரிவித்தார்.

ஞானசார தேரரது விடுதலை தொடர்பில் கடந்த காலங்களில் நாங்கள் பெரியளவில் முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனால் அவற்றில் எவ்விதமான தீர்வும் இதுவரையில் எட்டப்படவில்லை . ஆகவே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இவருக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் எனக் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தார்.

பொதுபல சேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஞானசார தேரர் அன்று நீதிமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் நீதி மன்றத்தை அவமதித்ததாகக் காணப்படவில்லை. இராணுவப் புலனாய்வு அதிகாரிகளைச் சிறை வைப்பதற்கு எதிராகவே அவர் கருத்துத் தெரிவித்தார். எனினும் அவ்வாறு கருத்துக்களைத் தெரிவித்ததன் பின்னர் தான் தெரிவித்த கருத்துக்களில் ஏதேனும் தவறுகள் காணப்பட்டால் மன்னிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தி ருந்தார்.

இருப்பினும் அவருக்குக் கடூழியத் தண்டனை பௌத்தமத கோட்பாட்டுக்கு முரணாக விதிக்கப்பட்டது. இவரது கருத்துக்கள் முரணாகக் காணப்பட்டாலும் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதே அவரது நோக்கமாகக் காணப்பட்டது எனவே தான் பொது பல சேனா அமைப்பு அவருடைய விடுதலையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. நாட்டில் இனவாதம் பேசி வடக்கையும், தெற்கையும் பிரிக்கும் விதமாக அரசின் ஆதரவுடன் செயற்படும் தமிழ்தேசிய கூட்டமைப்பினருக்கு எதிராக இதுரையில் எவ்விதமான நடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படவில்லை , மறுபுறம் மீண்டும் விடுதலை புலிகளின் இயக்கம் தோற்றம் பெற வேண்டும் அதுவே எமது நோக்கம் என்று பகிரங்கமாக அறிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு பிணையில் செல்லக் கூடிய அளவுக்குச் சட்டம் செயற்படுமாயின் ஏன் ஞானசார தேரரின் விவகாரத்தில் இவ்வளவு இறுக்கமாகக் காணப்படுகின்றது .இதன் பின்னணியும் அறிய முடியாமலே காணப்படுகின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், அரச அமைச்சர்களும் குரல் கொடுப்பதை போன்று ஏன் நாடாளுமன்றத்தில் உள்ள அமைச்சர்கள் ஞானசார தேரருக்கு ஆதரவாகச் செயற்பட முன்வர மறுக்கின்றனர். இவரது கைது அரசின் நெடுநாள் விருப்பமாகவே காணப்பட்டுள்ளது என்ற சந்தேகம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

ஞானசார தேரரின் விடுதலை தொடர்பில் அவரது தாயார் அரச தலைவருக்கு உருக்கமான கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளார். இவ்விடயத்தில் அரச தலைவர் தனது நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்த வேண்டும்.

இவரது தண்டனை தொடர்பில் மீள் பரிசீலனை செய்து பொதுமன்னிப்பு வழங்க வேண்டும். இவ்விடயத்தில் அவருக்கும் பல தடைகள் ஏற்படும் ஆகவே அவர் தன்னிச்சையான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் எனக் கண்ணீர் மல்கத் தெரிவித்தார். (61)

## ஆட்சிமாற்றத்தில் மக்களுக்கு ஆர்வம் இல்லை ஊழல்வாதிகளே புதிய அரசை உருவாக்க முயற்சி

*அமைச்சர் நளின் பண்டார தெரிவிப்பு*

கொழும்பு, ஒக் 18
பொதுமக்கள் தற்போது ஆட்சி மாற்றத்தில் ஆர்வம் காட்ட வில்லை. மோசடிகள் மற்றும் ஊழல்களில் ஈடுபட்டவர்களே புதிய அரசை உருவாக்க முயற்சிக்கின்றனர். என்று சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா வில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பதவி விலகுவது தொடர்பில், எந்தவொரு அறிவித்தலும் இதுவரை, எனக்கோ எமது அமைச்சுக்கோ கிடைக்கப்பெறவில்லை.

அத்துடன், பொலிஸ்மா அதிபர் பதவி விலகிய பின்னர் அவரை வெளிநாடொன்றின் தூதுவராக நியமிக்க அரசு முனைவதாக தெரிவிக்கப்படும் கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை. பொதுமக்கள் தற்போது ஆட்சி மாற்றத்தில் ஆர்வம் காட்டவில்லை மோசடிகள் மற்றும் ஊழல்களில் ஈடுபட்டவர்களே புதிய அரசை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்கு எதிராக மகிந்த ராஜபக்சவின் முன்னிலையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் மகிந்த ராஜபக்சவின் சம்மதத்துடன் இடம்பெற்றவையே. இவை அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உள்வீட்டுப் பிரச்சினையையே எடுத்துக் காட்டுகின்றது.

மகிந்தானந்த அலுத்கமகே, திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்த ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ச மேடையில் வீற்றிருக்கையில், குமார வெல்கமவைத் திட்டித் தீர்த்தனர்.

இந்தக் கருத்துக்கள் இவர்களின் வாயிலிருந்து வந்த போதிலும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கூற விரும்பிய கருத்துக்களே இவையாகும். குமார வெல்கம எம்.பி. கோத்தபாய ராஜபக்ச தொடர்பிலும், பசில் ராஜபக்ச தொடர்பிலும் தெரிவித்து வரும் கருத்துக்களை நிறுத்திக் கொள்ளுமாறு மகிந்த ராஜபக்ச வழங்கியுள்ள சமிக்ஞையே இவர்களின் பேச்சுக்களாகும். அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் பொதுஜன பெரமுனவில் பெரியளவிலான கருத்து முரண்பாடு உருவாகியுள்ளமையையே இது காட்டுகின்றது. என்றார்.

*இடைக்கால அரசு சாத்தியமற்ற விடயம்*

# ரணில் - மைத்திரிபால கூட்டு 2020க்குப் பின்னரும் தொடரும்

*கூறுகின்றார் பிரதி அமைச்சர் அஜித் மன்னப்பெரும*

**கொழும்பு, ஒக் 18**

**இடைக்கால அரசை அமைத்தல் என்பது சாத்தியமற்ற விடயம். அத்துடன் 2020ஆம் ஆண்டில் மாத்திரம் அல்ல அதனைத் தொடர்ந்தும் அரச தலைவர் மைத்திரிபால சிறி சேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இருவரும் இணைந்து கூட்டாட்சி அரசை அபிவிருத்திப் பாதையில் இட்டு செல்வார்கள் என்று சுற்றாடல் பிரதி அமைச்சர் அஜித் மானபெரும தெரிவித்துள்ளார்.**

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டாட்சி அரசானது நாட்டில் பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங்களினூடாக நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கின்றது. அதற்குச் சாதகமான வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் ஒன்றிணைந்து நாட்டை அபிவிருத்தி பாதைக்கு இட்டு செல்ல ஒத்துழைக்க வேண்டும். கடந்த மாதம் இடம் பெற்ற மக்கள் பலம் போராட்டத்தை நோக்கும்போது அரசைக் கவிழ்ப்பதற்கான போராட்டம் என்ற கருத்துடன் இடம் பெற்றது. ஆயினும் என்ன நேர்ந்தது? கூட்டாட்சி அரசின் அபிவிருத்திப் பணிகள் மற்றும் நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டு செல்லும் பணிகளும் தொடர்ந்த வண்ணமாகவே உள்ளன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட அதிகாரத்தைக் கொண்டு நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்கின்றார். அதற்கமைய அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டை அபிவிருத்திப் பாதையிலிட்டு செல்ல கட்சி பேதமின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடப்போகும் வேட்பாளர் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பிலா அல்லது பொது வேட்பாளராகவா தேர்தலில் போட்டியிடுவர்? என்பன தொடர்பான விடயங்களில் தேர்தலை அண்மிக்கும் காலப்பகுதியில் ஆராயப்பட்டு முடிவுகள் எட்டப்படும் - என்றார். (31)

## பணியில் இருந்து நீக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் மீண்டும் பணியில்

கொழும்பு, ஒக் 18
அண்மையில் தெபுவன நகரத்தில் எதிர்ப்பில் ஈடுபட்டதாக கூறப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் சனத் குணவர்த்தன மீண்டும் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் பரிந்துரைப்படி நேற்றுமுன்தினம் தொடக்கம் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

தெபுவன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தெபுவன நகரத்தில் எதிர்ப்பில் ஈடுபட்டதனால் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்

இந்நிலையில் சனத் குணவர்த்தன அரச தலைவர் மைத்ரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் அரச தலைவர் செயலகத்தில் சந்தித்துள்ளார். சனத் குணவர்த்தன எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அவரது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு அரச தலைவர் 10 இலட்சம் ரூபா நிதியுதவியை அவருக்கு வழங்கினார்.





## ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ உள்ளிட்ட மூவருக்கு விடுதலை

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ உள்ளிட்ட மூவரை விடுதலை செய்யுமாறு குருணாகல் மேல் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. உள்நாட்டு வர்த்தக அமைச்சராக ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ இருந்த காலப்பகுதியில் சதொச நிறுவனத்தில் முறையற்ற பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்று குருணாகல் மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சம்பவம் தொடர்பாக போதிய சாட்சி இல்லாமை காரணமாகப் பிரதிவாதிகளை விடுதலை செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வெகுஜன அமைப்புக்கள் ஒன்றிணைந்து கோரிக்கை

*சம்பந்தனிடம் கடிதமும் கையளிப்பு*

கொழும்பு, ஒக் 18
தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுவிப்பதற்காக வெகுஜன அமைப்புக்கள் ஒருங்கிணைந்து கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வடக்கு ,கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமானதாகவே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வண.பிதா.சக்திவேல் இந்தக் கோரிக்கைகள் உள்ளடங்கிய கடிதத்தை கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைமையகத்தில் கையளித்துள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கூட்டாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் 5 தடவைகளுக்கு மேலாக தமிழ் அரசியல் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை நடத்தியுள்ளதுடன் தற்போது ஆறாவது தடவையாகவும் உண்ணாவிரத போராட்டத்தை நடத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதி மாவை சேனாதிராஜாவின் வாக்குறுதிக்கு அமைய தற்காலிகமாகப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

அத்துடன், அரசியல் கைதிகளின் விடுதலைகான போராட்டம் நடைப்பெறும் ஒவ்வொரு தடவையும் அரசதரப்பினராலும் தமிழ் அரசியல் தலைவர்களாலும் அரசியல் கைதிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. போராட்டத்தை நிறுத்த வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் சக்தியற்றவர்களாகவே தமிழ்த் தலைவர்கள் காணப்படுகின்றனர். அவ்வாறு இல்லாமல் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும்.

இதற்கமைய பாதீட்டில் வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அழுத்தம் தெரிவிப்பதற்கான ஒரு தருணமாகப் பயன்படுத்த வேண்டும். மேலும் அரசதலைவருடனான பேச்சின் போது அரசியல் கைதிகளை தரம் பிரிக்காது அனைத்து அரசியல் கைதிகளுக்குமான விடுதலையை அரச தலைவரிடமும் அரசிடமும் வலியுறுத்த வேண்டும்.

அரச தலைவரும், அரசும் இந்த நிபந்தனையை ஏற்காதவிட்டத்து பாதீடுக்கு எதிராக வாக்களிப்பது என்ற ஒரு அரசியல் தீர்மானத்தை தமிழ் தலைவர்கள் எடுக்கவேண்டும். இந்தத் தீர்மானத்தை பொதுமக்களும் அறிந்து கொள்ளுமாறு வெளிப்படையாக அறிவிப்பதுடன் தற்போதைய ஆட்சியாளர்களுக்கும் தமிழ்த் தலைமைகளும் மேற்படி விடயத்தில் தகுந்த தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. (61)

## மாவீரர் நாள் நிகழ்வுக்கான துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக் 18
மாவீரர் நாள் நிகழ்வுக்கான ஆரம்பகட்ட துயிலுமில்லங்களின் துப்புரவுப்பணி மட்டக்களப்பு மாவடிமுன்மாரி துயிலுமில்லத்தில் நேற்றுமுன்தினம் தேசத்தின் வேர்கள் போராளிகளினால் முன்னெடுக்கப் பட்டது.

இதன் போது மாவடிமுன்மாரி பனிச்சையடிமுன்மாரி ஆகிய கிராமங்களில் உள்ள மாவீரர் குடும்பங்களின் பெற்றோர்கள் தேசத்தின் வேர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இங்கு கருத்துத் தெரிவித்த பொதுமக்கள் மாவடிமுன்மாரி துயிலுமில்லத்தில் முதற்கட்டத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ளோம் அந்தவகையில் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் சகலதும் பூர்த்தி யாகியுள்ளன என்று தெரிவித்தனர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கொழும்பு அரசியலில் கருக்கட்டும் சூறாவளி

கூட்டு அரசு மீண்டும் ஒரு தடவை ஆட்டம் காணும் நிலைமை ஏற்பட்டுள்ளது. மைத்திரி–ரணில் மோதல் மீண்டும் வெடித்திருக்கின்றது. இந்த இரண்டு தரப்புகளுக்கும் இடையில் மோதல் வெடிப்பது இதுவொன்றும் முதல்முறையல்ல. உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் அடிக்கடி பகிரங்கமாகவே மோதல் மூண்டிருந்தது. ஒவ்வொரு தடவையும், இந்தக் கூட்டு அரசை ஆட்சியில் இருத்திய வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடுகளால் அவை தற்காலிகமாகத் தணிக்கப்பட்டிருந்தன.

தற்போது அந்த வெளிநாட்டுச் சக்திகளைத் தீண்டும் விதமாகவே, மைத்திரி–ரணில் மோதல் வெடித்துள்ளது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், இந்தியாமீது பகிரங்கமாகவே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தன்னைக் கொலை செய்வதற்கு முயன்ற சதியில் இந்தியாவின் உளவுப் பிரிவான 'றோ'வுக்குத் தொடர்பு இருப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். மேலும், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன்முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விருப்பம் தெரிவித்தபோதும், அரச தலைவர் மைத்திரிபால திட்டவட்டமாக அதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

சீனாவின் பக்கம் சார்ந்து செயற்பாடுகளை முன்னெடுத்த மகிந்தவை அகற்றவேண்டிய தேவை மேற்குலகுக்கும், இந்தியாவுக்கும் இருந்தது. இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தவேண்டிய தேவை எழுந்தது. அதை இந்தியாவும், மேற்குலக நாடுகளும் இணைந்து கனகச்சிதமாகச் செய்து முடித்திருந்தன. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, இந்தியாவின் புலனாய்வு அமைப்பான 'றோ' தன்னை ஆட்சியிலிருந்து அகற்றியதில் முக்கிய பங்கு வகித்தது என்புதைப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

ஆனால் கடந்த மாதம், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அவரது புதல்வர் நாமல் ராஜபக்ச ஆகியோர் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். இந்தியாவுடனான சந்திப்புத் திருப்தி என்று மகிந்த ராஜபக்ச அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருந்தார். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இந்த வாரம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்கள் இராஜதந்திர மொழியில் மைத்திரிபால சிறிசேனவுக்குச் செய்தியைச் சொல்லி நிற்கின்றன என்பதும், இந்தியா மீதான மைத்திரியின் கோபத்துக்குக் காரணமாக இருக்கலாம். இதனால்தான் என்னவோ, வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடித்து ரணில் தலைமையிலான அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று மைத்திரிபால சிறிசேன கணக்குப் போடுகின்றார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவதற்கும் கடுமையான முயற்சிகளை மேற்கொள்கின்றார். 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டின் தலைமைப் பதவியில் தொடர்வதற்கும் அவர் விரும்புகின்றார். இதற்காக அவர் முன்னெடுக்கும் காய் நகர்த்தல்கள் கூட்டு அரசின் பிணைப்பை அறுப்பதாகவே உள்ளன.

2020ஆம் ஆண்டு வரையில் கூட்டரசு தொடரும் என்று சொல்லிக் கொண்டாலும், தற்போதைய நிலையில் அதுவும் இந்தியாவுடன் நேரடியாக அரச தலைவர் மைத்திரிபால மோதத் தொடங்கிய பின்னர், அது நீடிக்குமா என்பது சந்தேகமே. கொழும்பு அரசியலில் சூறாவளி கருக்கட்டத் தொடங்கியதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன.

ஏற்கனவே தமிழ் மக்களின் பிரச்சினைகளில் அக்கறையற்றுச் செயற்பட்ட ஆட்சித் தரப்பு, தற்போதைய அரசியல் நெருக்கடியான சூழலில் அவற்றைத் தீர்க்கும் என்று நினைப்பது கல்லில் நார் உரிப்பதற்குச் சமனானதே. அதை அரசுக்கு முண்டு கொடுக்கும் கூட்டமைப்பு விளங்கிக் கொள்வது காலத்தின் தேவை.

# உள்நோக்கம் கொண்டது விஜயகலாவின் உபதேசம்

சேரலாதன்




தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்தியைக் காணவேண்டுமென்றால் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதே ஒரே வழியென ஆலோசனை கூறியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி விஜயகலா மகேஸ்வரன். சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிடுவதில் அவர் அண்மைக் காலமாக ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகிறது. புலிகள் மீண்டும் உருவாக வேண்டுமென அவர் தெரிவித்த கருத்துக் காரணமாகச் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் அவர் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தின் முன்னிலையாக்கப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்த வியடமாகும்.

**அரசியல் தீர்வும், அபிவிருத்தியும் சமாந்தரமாகப் பயணிக்க வேண்டியன**

நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்று ஆட்சியும் அமைக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கழிந்த நிலையில் திருமதி விஜயகலா எதற்காக இந்தக் கருத்தைக் கூறினார் என்பது ஆராயப்படவேண்டிய விடயமாகும். தற்போது ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கூட்டு அரசொன்றை நிறுவியுள்ள நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முதன்மை எதிர்க்கட்சியாக விளங்குகின்றது.

கூட்டமைப்பின் தலைவரே எதிர்க்கட்சித் தலைவராகவும் உள்ளார். ஆனால் அரசுக்கு ஆதரவான நிலைப்பாடொன்றைக் கூட்டமைப்புக் கொண்டுள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் உண்டு. இதன் காரணமாக அதற்கு



எதிர்ப்புக்களும் வலுப்பெற்றுள்ளன. அரசுடன் கூட்டமைப்பு இணைந்திருந்தபோதிலும் அதனால் எதையுமே சாதிக்க முடியவில்லையென்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வும், தமிழர் பகுதிகளின் அபிவிருத்தியும் சமாந்தரமாகக் பயணிக்க வேண்டிய விடயங்களே. அரசியல் தீர்வு என்பது தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினையாகும். அபிவிருத்தி என்பது சுபீட்சமான வாழ்வுக்குத் தேவையானது. இவையிரண்டும் இணையும்போதுதான் எந்தவொரு மக்கள் கூட்டமும் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

**தொடர்ந்தும் போரைக் காரணம் கூற முடியாது**

அரசியல் தீர்வும் கிடைக்காமல், அபிவிருத்தியும் ஏற்படாமல் தமிழர்கள் நிர்க்கதியான நிலையிலேயே இன்று வாழ்கின்ற அவலமே ஈழத் தமிழர்களினுடையது என்பது அனைவரும் அறிந்ததே. நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. இதற்குப் போரையே தொடர்ந்தும் ஒரு காரணமாகக் கூறிக்கொண்டிருக்க முடியாது. போர் ஓய்ந்து சுமார் 10ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், போரைத் தொடர்ந்தும் நினைவுபடுத்திக் கொண்டிருக்க முடியாது.

**அடுத்தவர்களைச் சாடுவதை விடுத்து ஆளுங்கட்சியினர் செய்திருக்க முடியும்**

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு எதையுமே குறிப்பிடாமல் அபிவிருத்தி பற்றியே தற்போது பேசுகின்றார். வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கென அரச தலைவரின் சிறப்புச் செயலணியொன்று ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. இதில் கூட்டமைப்பும் அங்கம் வகிக்கின்றது. இதைவிடத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் வடக்குக் கிழக்கின் அபிவிருத்தியில் ஆர்வம்காட்டியிருந்தார். இந்த நிலையில் தமிழர் பிரதேசங்களிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள விஜயகலா உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக அக்கறையுடன் செயற்பட்டிருந்த அபிவிருத்தியைக் கண்டிருக்க முடியும். ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களால் எதையுமே எளிதாகச் சாதிக்க முடியும். இதைவிடுத்து இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்குமாறு கோரிக்கை விடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே கருதவேண்டியுள்ளது.

**உயிர் மாய்ப்பதை ஒத்த செயல்**

விஜயகலாவின் கோரிக்கையானது கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துகின்றதொரு முயற்சியாகவும் கருதவேண்டியுள்ளது. ஏற்கனவே அரசுக்கு ஆதரவு வழங்குகின்ற கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக மக்கள் மத்தியில் அதிருப்தி கிளம்பியுள்ளது. கூட்டமைப்புக்கு எதிராக இதையே ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி அதைப்பலவீனப்படுத்தும் முயற்சிகளும் குறைவின்றி இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் அரசில் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்வதென்பது தவறான முடிவை எடுத்து உயிர் மாய்ப்பதற்கு ஒப்பானதொரு செயலாகும்.

**கூட்டமைப்பின் செல்வாக்கில் சரிவை ஏற்படுத்தும் எண்ணம்**

திருமதி விஜயகலா புதிய அரசமைப்பின் உருவாக்கம், இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆகியன தொடர்பாக அரசுக்கு அழுத்தம் எதையும் இதுவரைக் கொடுத்ததாகத் தெரியவில்லை. அதற்கான காரணமும் புரியவில்லை. ஆனால், தெற்கில் அரசைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்றுவரும் நிலையில் அரசைக் காப்பாற்றுகின்ற தந்திரோபாய முயற்சியாகவே விஜயகலாவின் கோரிக்கையைப் பார்க்கவேண்டியுள்ளது. அத்துடன் கூட்டமைப்பின் செல்வாக்கில் சரிவை ஏற்படுத்துகின்றதொரு முயற்சியாகவும் இதைக் கருதலாம்.

கூட்டமைப்பினர் விஜயகலாவின் தந்திர வலையில் வீழ்வார்களாயின் அவர்களின் அரசியல் எதிர்காலம் அழிந்துவிடுமென்பதை அவர்கள் புரிந்து செயற்பட வேண்டும். இன்றுவரை கூட்டமைப்பின் ஓர் அரசியல் எதிரியாகவே பார்க்கப்படுகின்ற விஜயகலா ஏதோவொரு உள்நோக்கத்துக்காகவே கூட்டமைப்புக்கு இந்த ஆலோசனையை வழங்கியிருக்கிறார் என்றும் கருதலாம்!

இந்துமதி

# சிங்கள அரசுகளால் தொடர்ந்து ஏமாற்றப்படும் தமிழர் தரப்பு

மைத்திரி-ரணில் இணைந்த கூட்டு அரசு தமிழர்களைப் பொறுத்தவரையில் அலட்சியமாக நடந்துகொள்கின்றது. போர் காரணமாக நாடு முழுவதும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தாலும் அதில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்தான். போர் ஓய்ந்து நீண்ட காலம் சென்றுவிட்ட நிலையிலும் இன்னல்களுடனேயே அவர்கள் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சியமைத்தபோது தமிழர்கள் எதிர்கொண்டு வருகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கை தமிழர்களிடத்தில் எழுந்தது. முன்னர் இந்தக் கட்சிகள் இரண்டும் எதிரும் புதிருமாகச் செயற்பட்டதால் தமிழர்களின் விவகாரத்தில் ஒரு முடிவை எட்ட முடியவில்லை. ஆனால் இந்தமுறை இந்தக் கட்சிகள் இணக்கப்பாட்டுக்கு வந்ததால் நல்லதொரு முடிவு கிடைக்குமென்ற நம்பிக்கை தமிழர்களிடத்தில் துளிர்விட்டது. ஆனால் அந்த நம்பிக்கை பொய்த்துப்போன நிலையில் காணப்படுகின்றது.



**இனப் பிரச்சினைக்கு இன்னமும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை**

எந்த நோக்கத்துக்காகத் தமிழர்கள் ஆயுதமேந்திப் போராடினார்களோ அந்த நோக்கம் இன்னமும் நிறைவேறாத நிலையிலேயே காணப்படுகின்றது. அந்த நோக்கம் நிறைவேறும்போதுதான் தமிழர்களின் அரசியல் உரிமைகள் மற்றும் ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு அறுதியும் இறுதியுமான ஒரு முடிவு கிடைக்கும். அதுவரைக்கும் அரசியல் ரீதியாகவோ. ஆயுத ரீதியாகவோ தமிழர்களின் போராட்டம் நீடிப்பதற்கான சந்தர்ப்பங்களே அதிகம். ஆனால் அரசு இது பற்றிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இனப் பிரச்சினை இந்த நாட்டைப் பிடித்துள்ளதொரு கொடிய நோயாகவே மாறிவிட்டது. இதற்குரிய மருந்து இதுவரை கண்டுபிடிக்கவில்லை. அதற்குரிய முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. இந்த இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுவிட்டால் ஏனைய பிரச்சினைகள் தாமதாகவே மறைந்துவிடுமென்பதைக் கூறத் தேவையில்லை.

> "சிங்கள ஆட்சியாளர்கள் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதிலேயே குறியாக இருக்கின்றனர். அரசைக் கவிழ்த்துவிட்டு மாற்று அரசொன்றை அமைப்பதில் மகிந்த தரப்பு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மகிந்தவுடன் கைகோர்த்துச் செயற்படுவதற்கு மைத்திரியும் தயாராக இருப்பதை அவதானிக்க முடிகின்றது."

**தந்தை செல்வா தொடங்கி இன்றுவரை சமஷ்டி வலியுறுத்தப்பட்டு வருகிறது**

தமிழர்கள் அதிகாரப் பகிர்வைக் கோரி நிற்கின்றனர். இதன் மூலமாகவே இந்த நாட்டில் தன்மானத்துடன் வாழ முடியுமென்பது அவர்களின் நம்பிக்கை. ஆனால் தற்போது நடைறையில் உள்ள அரசமைப்பின் கீழ் அதிகாரப் பகிர்வுக்கு இடமேயில்லை. ஆட்சியாளர்கள் ஒற்றையாட்சி என்ற ஒன்றையே பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து விடுபடுவதற்கு அவர்களால் முடியவில்லை. மாகாண சபைகள் அதிகாரமில்லாத சபைகளாக இருப்பதற்கும் இதுதான் காரணமாகும். இதனால்தான் தந்தை செல்வா அன்றே கூட்டாட்சி என்கின்ற சமஷ்டியை வலியுறுத்தினார். கூட்டாட்சி முறையின் கீழ் தமிழர்கள். ஓரளவு சுயாட்சியைப் பெறமுடியும். ஆனால். தென்பகுதி அரசியல்வாதிகள் சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற சொற்களைக் கேட்டாலே கிலிபிடித்து ஆடுகிறார்கள். கூட்டாட்சி வழங்கப்பட்டால் நாடு பிளவு பட்டுவிடுமெனத் தென்பகுதி அரசியல்வாதிகள் அஞ்சுகின்றனர். மக்களுக்கும் அதைக் கூறி அவர்களையும் குழப்புகின்றனர்.

**கூட்டமைப்பின் பொறுமை தகாதது**

அரசியல் கைதிகள் என்ற பெயரில் விசாரணைகள் எதுவுமின்றித் தமிழர்களைச் சிறைகளில் தடுத்து வைத்திருப்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இவர்களில் சிலர் முன்னாள் புலிகளாக



இருந்தாலும் அவர்களும் இந்த நாட்டு மக்களே என்பதை மறுக்க முடியாது. தமிழர்கள் என்பதால் நீதி மறுக்கப்படுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாதது. இந்த நாட்டின் நீதித்துறை அனைவருக்குமே பொதுவானது. இதில் எந்தப் பாகுபாட்டுக்கும் இடமில்லை. தமிழர்களின் முதன்மைக் கட்சியாகக் கருதப்படும் கூட்டமைப்பின் தலைமை இந்த விடயத்தில் தொடர்ந்தும் பொறுமைகாத்துக் கொண்டிருப்பது அரசுக்குச் சாதகமாகிவிட்டது. அரசுக்கு ஆதரவை வழங்கிக்கொண்டு அரசு செய்வதையெல்லாம் அது வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதை மக்கள் தொடர்ந்தும் ஏற்க மாட்டார்கள்.

**தமிழர்களின் பிளவு ஏற்றதல்ல**

இக்கட்டான இந்த நேரத்தில் தமிழர்கள் தமக்குள் பிளவுபட்டு நிற்கின்றமை நல்லதல்ல. வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி தனிக்கட்சி ஆரம்பிக்கவுள்ளதாகவும் விக்னேஸ்வரன் தனது எதிர்கால அரசியல் தொடர்பாக அறிவிப்பு விடுவித்திருந்தமையும் தமிழர்களைப் பொறுத்தவரையில் நல்லதாகத் தெரியவில்லை. இவையெல்லாம் எதிரிகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும்.

சிங்கள ஆட்சியாளர்கள் தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதிலேயே குறியாக இருக்கின்றனர். அரசைக் கவிழ்த்துவிட்டு மாற்று அரசொன்றை அமைப்பதில் மகிந்த தரப்புத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மகிந்தவுடன் கைகோர்த்துச் செயற்படுவதற்கு மைத்திரியும் தயாராக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் இருவரும் இணைவதால் தமிழர்களுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படப்போவதில்லை.

மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற சிங்கள அரசுகள் தொடர்ந்தும் தம்மை ஏமாற்றி வருவதைத் தமிழர் தலைமைகள் அனைத்தும் இனியாவது புரிந்துகொண்டு இராஜதந்திரத்துடன் செயற்பட வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. சிங்கள அரசுகளின் ஏமாற்று வேலைகளுக்குப் பதிலடி வழங்குவதற்குத் தமிழர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவது அவசியமாகும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# இருதலைக் கொள்ளி எறும்பு நிலை

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி காலமானபோது அஞ்சலி செலுத்தவும் இயலாமல் தவிர்க்கவும் இயலாமல். நம்மில் பலரும் சஞ்சலப்பட நேர்ந்தமை காலத்தின் கோலமே.

இந்திய அளவில் என்று சொல்வதைக் காட்டிலும் உலக அரசியல் வரலாற்றில் மிக நீண்ட கால அரசியல் பணிசெய்த ஒரே தலைவராக தி.மு.க.தலைவர் கருணாநிதி கணிக்கப்படுகிறார். நீண்டகாலம் அரசியலில் இருப்பதுவேறு. நீண்டகாலம் தேர்தல் ஊடான வெற்றிகண்டு பதவியில் இருப்பது வேறு. அந்த வகையில், தான் போட்டியிட்ட முதல் தேர்தலில் இருந்து கடைசித் தேர்தல் வரை வெற்றிபெற்றுச் சுமார் அறுபது வருடகாலம் சட்டமன்ற உறுப்பினர் பதவியும், இருபது வருடகால முதல்வர் பதவியும் வகித்த வரலாற்றுப் பெருமை கலைஞரையே சாரும். முடியாட்சிக்குப் பின்னர் முடிசூடா மன்னனாக அரை நூற்றாண்டுக்கும் மேல் தமிழக-இந்திய ஆட்சிப் பீடங்களில் அவர் கோலோச்சினார்.

அரசியலுக்கு அப்பால் அடித்தட்டு இந்திய-தமிழ் நாட்டு மக்களைக் காலங்காலமாகப் பற்றியிருந்த மூடநம்பிக்கைகளில் இருந்து குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியதிலும் கலைஞரின் பங்கு கணிசமானது.

இதைவிடத் தமிழ்மொழிக்குக் கலைஞர் ஆற்றிய பங்கு அளப்பரியது. திரைப்படத் துறையூடாகவும். கவிதை. உரைநடை என இலக்கியத்தையும் பேச்சு வன்மையையும் கொண்டதுடன் வள்ளுவர் மீதான அளவற்ற அன்பை வள்ளுவர்கோட்டம், வள்ளுவர் கடல் சிலை எனப் பிரமிப்பான கட்டடக் கலைகளையும் நிறுவியவர் கலைஞர். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தால் போல் தமிழ்மொழிக்கு உலக அங்கீகாரமாக "செம்மொழி" மதிப்புக் பெற்றுக் கொடுத்தார்.

இத்தனைச் சாதித்தும் இலங்கைத் தமிழர் விடயத்தில் காலமுணர்ந்து செயற்படத் தவறியதால் உலகத் தமிழ் மக்கள் மனதில் கறைபடிந்த மனிதராகக் காலம் அவரை மாற்றிவிட்டது. இறுதிப்போர் நடந்தபோது இந்திய மத்திய அரசை அசைக்கக்கூடிய சக்தியாக இருந்தவர் கலைஞர். ஒட்டுமொத்த தமிழினமும் கலைஞர் ஏதாவது செய்வார் என்று எண்ணிய வேளை, ஏமாற்றம் தந்ததால் இன்று உலகத் தமிழினத்தின் தலைவர் என்ற பெரும் பதவியைத் தவறவிட்டுவிட்டார் என்றே கூறவேண்டும். உள்ளுக்குள் அழுதாலும் அஞ்சலிப்பதற்குப் பலரும் விரும்பியிராமை காலத்தின் கோலமே.

*ஓர் அன்பர்.*

# YouTube

## முடங்கியது 'யூரியூப்' ஒரு மணிநேரம் பரபரப்பு

கலிபோர்ணியா.ஒக்.18
இணையவழிக் காணொலிச் சேவையான 'யூரியூப்' ஒரு மணிநேரத்துக்கும் மேலாக முடங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. தொழில்நுட்ப வல்லுநர்கள் வேகமாகப் பணியாற்றி அதை மீண்டும் செயல்பட வைத்துள்ளனர். 'யூரியூப்' வழங்கியில் (சேவர்) திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இப்படி நடந்திருக்கிறது. இதனால் 'யூரியூப்'செயல்படாமல் முடங்கியி ருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள 'யூரியூப்' பயனாளர்கள் பல கோடிபேர் அதைப் பயன்படுத்த முடியாமல் தவித்துள்ளனர். இதையடுத்து அந்த நிறுவனத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் மிக வேகமாகப் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டு ஒரு மணிநேரத்தில் மீண்டும் 'யூரியூப்'பைச் செயல்பட வைத்துள்ளனர். இந்தத் தகவலை 'யூரியூப்' தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளது.



## ஆஸ்திரேலியத் தூதரகமும் ஜெருசலேமுக்கு மாற்றம் தலைமை அமைச்சர் ஸ்கோட் மொறிசன் அறிவிப்பு

கன்பெரா.ஒக்.18
அமெரிக்காவைப் பின்பற்றி ஆஸ்திரேலியாவும் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.
தனது தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்றுவதற்கு ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் பரிசீலித்து வருகிறார்.
கிறிஸ்தவர்கள், யூதர்கள், இஸ்லாமியர்கள் என 3 மதத்தினருக்கும் புனித நகரமாகத் திகழக்கூடிய ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு வெளியிட்டார். இது உலகளாவிய எதிர்ப்புக்கு வழிவகுத்தது. ஆனாலும், அடுத்த கட்டமாக மே மாதம், ஜெருசலேம் நகரில் அமெரிக்கத் தூதரகம் திறக்கப்பட்டது.
இந்த நிலையில் அமெரிக்காவைப் பின்பற்றி ஆஸ்திரேலியாவும் இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரிக்கவும், தனது தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்றவும் பரிசீலித்து வருகிறது. இதை ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் ஸ்கொட் மொறிசன் அறிவித்துள்ளார்.

## காணாமல்போன பத்திரி[...]

# கொலையை ஏற்[...] தயாராகிறது[...]

ரியாத்.ஒக்.18
சவூதி மன்னர் சல்மானை அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ சந்தித்துப் பேசியுள்ளார். இரண்டு தலைவர்களும் பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி காணாமல்போனது பற்றி விரிவாக விவாதித்துள்ளனர். இந்தச் சந்திப்பின் பின்னர் வெளியான செய்தியின்படி ஜமாலின் கொலையை ஏற்பதற்கு அது தயாராகுவது உணரப்பட்டிருக்கிறது.




சவூதி மன்னர் சல்மானின் முடியாட்சி பற்றிக் கடுமையாக விமர்சித்து வந்தவர், அந்த நாட்டின் பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி (வயது 59). அவர் சமீபத்தில் துருக்கி நாட்டுக்குச் சென்றார். அங்கு இஸ்தான்புல் நகரில் உள்ள சவூதி அரேபியத் துணைத் தூதரகத்துக்குள் கடந்த 2ஆம் திகதி சென்றிருந்த அவர், காணாமல் போயிருந்தார். அவர் அந்தத் தூதரகத்துக்குள் வைத்து சவூதி அரேபியப் புலனாய்வுத் துறையினரால், கொல்லப்பட்டு விட்டார் என்று துருக்கியின் தரப்பில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டை இதுவரை சவூதி அரேபியா மறுத்து வருகிறது. இது ஆதாரமற்றது. தவறானது என அது திட்டவட்டமாகக் கூறுகிறது.
பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி சவூதி அரேபியாவால் கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த நாட்டின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்திருந்தார். அதைத் தொடர்ந்து பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி மாயம் ஆனது தொடர்பாகச் சவூதி மன்னர் சல்மான் விசாரணைக்கு உத்தரவிட்டார். இதற்கிடையே சவூதி அரேபிய அதிகாரிகளின் அனுமதி பெற்று, துருக்கிப் பொலிசார் இஸ்தான்புல் துணைத்தூதரகத்துக்குள் சென்று விசாரணை நடத்தினார்கள். இதற்கிடையே அமெரிக்க அதிபர் ட்ரம்ப், சவூதி அரேபிய மன்னர் சல்மானைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டுபேசினார். அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் அயலுறவு



அமைச்சர்
அரேபியாவுக்[...]
நேற்றுமுன்[...]
ரியாத்தைச் [...]
சவூதி மன்[...]
பேசினார். ப[...]
காணாமல்போ[...]
ஆலோசனை[...]
முகமது பின் [...]
சந்தித்து விட்[...]
ணித்துள்ளா[...]
யாளர் ஜமால்[...]
நடந்தது என்[...]
அரேபியாவுப[...]
வேண்டும் [...]
உரிமைகள் [...]
பசேலெட் வ[...]

**பிந்திக் கிடை[...]**
ஜமால், சாவ[...]
உண்மைக[...]
தற்கான ஆ[...]
மேற்கொள்வ[...]
தகவல்கள் [...]
தொடர்பான[...]
ஆரம்ப கட்ட[...]

## சீனாவில் நிலநடுக்கம்




பீஜிங்.ஒக்.18
சீன நாட்டின் ஜிங்கே மாகாணத்தில் 5.4 ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. சீனா நாட்டின் ஜிங்கே மாகாணத்தில் நேற்று முன்தினம் இந்த நிலநடுக்கம் உருவானதாகச் சீனாவின் நிலநடுக்க ஆய்வு மையம் கணித்துள்ளது. ஜிங்ஜியாங் மாகாணத்தில் கடல் மட்டத்தில் இருந்து பத்துக் கிலோமீற்றர்கள் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
இந்த நிலநடுக்கத்தின் எதிரொலியாக மாகாணத் தலைநகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நில அதிர்வு உணரப்பட்டிருக்கிறது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. ஆனால், வீடுகளில் தொங்கிக் கொண்டிருந்த மின்விளக்குகள் அதிர்வில் கடுமையான ஆட்டம் கண்டதாகவும், சுவர்களில் விரிசல்கள் ஏற்பட்டதாகவும் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. வீடுகளில் விரிசல் ஏற்பட்டதாலும் வீடுகள் குலுங்கியதாலும் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.
சின்ஜியாங் மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ள பகுதியில் தொடருந்து சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மாகாணத்தில், நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிக்கு மீட்புப் பணிகள் எதாவது தேவைப்பட்டால் உடனுக்குடன் செயல்படுவதற்காக நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகச் 'சினுவா' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது

## இருக்[...] ஆப்[...]



## ...ரிகையாளர் விவகாரம்

# ...ற்றுக்கொள்ள ...து சவூதி

...சர்
...ம்
...க
...படி



ஜமால்



சவூதி மன்னர்

அமைச்சர் மைக் பாம்பியோவை சவூதி அரேபியாவுக்கு அனுப்பியிருந்தார்.

நேற்றுமுன்தினம் சவூதியின் தலைநகர் ரியாத்தைச் சென்றடைந்த மைக் பாம்பியோ, சவூதி மன்னர் சல்மானைச் சந்தித்துப் பேசினார். பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி காணாமல்போனது பற்றி இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தினர். பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானையும் மைக் பாம்பியோ சந்தித்து விட்டு அவர் துருக்கிக்குப் பயணித்துள்ளார். அத்தோடு பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி விவகாரத்தில் நடந்தது என்ன என்பது பற்றி சவூதி அரேபியாவும், துருக்கியும் தெரிவிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் மிச்செல்லி பசேலெட் வலியுறுத்தி உள்ளார்.

**பிந்திக் கிடைத்த தகவல்**

ஜமால், சாவடைந்துவிட்டார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கான ஆயத்தங்களைச் சவூதி மேற்கொள்வதாகப் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான அறிக்கை இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கிறது.

தகவல் பரிமாற்றத்தின்போது ஏற்பட்ட குளறுபடிகள், மற்றும் தெளிவான விவரங்கள் இல்லாமை ஆகிய காரணங்களால் தவறான ஒருவர் தண்டனை பெறவேண்டியதாயிற்று என மழுப்புவதான பதில் சவூதி அரசின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றம் இழைத்தவர்கள் கண்டு பிடிக்கப்பட்டுக் தண்டிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.நா.ஆணையர்


## ...நக்கையின் கீழே குண்டுவெடிப்பு ...ஆப்கனில் வேட்பாளர் சாவு



காபூல்.ஒக்.18

ஆப்கானிஸ்தானின் தென் பகுதியில் நடந்த குண்டுவெடிப்பில் தேர்தலில் போட்டியிட்டிருந்த வேட்பாளர் ஒருவர் சாவடைந்துள்ளார். பலர் காயமடைந்துள்ளனர். ஆப்கானின் தென் பகுதி மாகாணமான ஹெல்மெண்டில் இருக்கையின் கீழே பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததிலேயே இந்த வேட்பாளர் கொல்லப்பட்டிருக்கிறார். அவருடை பெயர் அப்துல் ஜாபர். அவர் வருகின்ற அந்த நாட்டில் நடக்கவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட இருந்தவர்.

இந்தத் தாக்குதல் அந்த வேட்பாளரின் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக விசாரணைகள் நடந்து வருகின்றன. இந்தத் தாக்குதலுக்குத் தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். வரும் சனிக்கிழமை ஆப்கனில் தேர்தல் நடத்தப்படும் சூழ்நிலையில் இந்தத் தாக்குதலைத் தலிபான்கள் நடத்தியுள்ளனர். இதற்கு முதலில் ஆப்கனில் பேரணி ஒன்றில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் 22பேர் சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# சோமாலியாவில் அமெரிக்கா வான்வழித் தாக்குதல்; 60க்கு மேற்பட்ட ஆயுததாரிகள் சாவு!

மொகடிசு.ஒக்.18

சோமாலியாவின் தலைநகர் மொகடிசுவுக்கு அருகே நிலைகொண்டிருந்த ஆயுததாரிகளின் முகாம் மீது அமெரிக்க இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 60க்கு மேற்பட்ட ஆயுததாரிகள் கொல்லப்பட்டுள்ளனர். சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா ஆதரவு பெற்ற உள்நாட்டுப் போராளிக்குழுக்களாக அல் ஷபாப் குழுக்கள் ஏராளமாக இயங்கி வருகின்றன. சோமாலியா அரசைக் கவிழ்த்து விட்டு மிகவும் கண்டிப்பு நிறைந்த இஸ்லாமியச் சட்டங்களின் அடிப்படையிலான ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது இவர்களின் நோக்கமாக உள்ளது. அந்த நாட்டு இராணுவச் சிப்பாய்கள் மீது அவ்வப்போது அதிரடியாகத் தாக்குதல் நடத்திவரும் இந்தப் போராளிக் குழுக்கள் மத்திய ஆபிரிக்காவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவரும் பன்னாட்டு அமைதிப் படையினரையும் கொன்று குவிக்கின்றனர்.

இந்த நிலையில், சோமாலியா நாட்டின் தலைநகர் மொகடிசுவுக்க அருகேயிருந்த இவ்வகை ஆயுததாரிகளின் முகாம் மீது நேற்றுச் சோமாலியா அரச படைகளுடன் இணைந்து அமெரிக்கா இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியிருக்கிறது. இந்தத் தாக்குதலில் 60க்கும் மேற்பட்ட ஆயுததாரிகள் சாவடைந்திருப்பதைப் பெண்டகனில் இருந்து வெளியாகும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

# கனடாவிலும் கஞ்சா விற்பனை சட்டபூர்வமாக்கப்பட்டது!



ஒட்டோவா.ஒக்.18

கனடாவிலும் கஞ்சா விற்பனை சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள மருந்துக் கடைகளில் கஞ்சா விற்பனைக்கு வந்துள்ளது. உருகுவேயில் ஏற்கனவே கஞ்சா விற்பனை சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. உருகுவேயைத் தொடர்ந்து கனடாவிலும் கஞ்சா விற்பனை சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே சட்டபுர்வமாக போதை மருந்தைப் பயன்பாட்டுக்காக மருந்து கடைகளில் விற்க அனுமதித்த முதல் நாடாக தென் அமெரிக்க நாடாக உருகுவே இருந்து வருகிறது.

உருகுவே நாட்டில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் கஞ்சா விற்பனை சட்டபூர்வமாக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கனடாவும் கஞ்சா விற்பனையைத் தற்போது சட்டபூர்வமாக்கியுள்ளது. இதனால் பயன்பாட்டுக்காகக் கனடாக் கடைகளில் கஞ்சா விற்பனைக்கு வந்துள்ளது. இதன் மூலம் கஞ்சா விற்பனை யைச் சட்டபூர்வமாக்கிய 2ஆவது நாடு என்ற பெயரைக் கனடா பெற்றுள்ளது.

அரசின் அங்கீகாரம் பெற்ற தயாரிப்பாளர்கள் மற்றும் சில்லறை வியாபாரிக ளிடம் இருந்து பொதுமக்கள் கஞ்சா எண்ணெய், விதை, தாவரம் மற்றும் உலர்ந்த கஞ்சா ஆகியவற்றை இனி வாங்கிக்கொள்ளலாம். ஒருவர் 30 கிராம் வரையிலான உலர்ந்த கஞ்சாவை வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாகாணங்கள் மற்றும் மாநிலங்கள் அவர்களது அதிகார வரம்புக்குள் கஞ்சா வாங்கப்படும் இடங்கள் குறித்த தெளிவான புள்ளி விவரங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், கனடாவின் நியூபவுண்ட்லேண்ட், லேப்ராடார் ஆகிய மாகாணங்களில் அதிகாரபூர்வமாகக் கஞ்சா விற்பனை தொடங்கியுள்ளது.



## இன்றைய நாள்

**மேடம்:** தியாக குணத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் விரிவாக்கம் செய்யப் பணவசதி கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**இடபம்:** முக்கிய பணியை அவசர கதியில் நிறைவேற்றும் நிலை ஏற்படலாம். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். பணவரவு ஓரளவுக்கு இருக்கும். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்ளவும்.

**மிதுனம்:** திட்டமிட்ட செயல்கள் எளிதாக நிறைவேறும். அரசு சார்ந்த உதவி பெற அனுகூலம் உண்டாகும். தொழிலில் உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரிக்க நவீன மாற்றம் செய்வீர்கள்.

**கடகம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். தாமதமான பணிகள் நிறைவேற வாய்ப்புண்டு. தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**சிங்கம்:** பணிகள் நிறைவேற முன்னேற்பாடு அவசியமாகும். கொடுத்த வாக்குறுதியை ஓரளவு நிறைவேற்றலாம். தொழில், வியாபாரத்தில் தடைகள் உருவாகலாம்.

**கன்னி:** முக்கியபணியைஅடுத்தவரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். புதிய வகைகளில் திடீர் செலவு ஏற்படலாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** கடந்த கால நற்செயலுக்கான நன்மை தேடி வரும். புதியவர்கள் நட்பு பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணவரவால் சேமிப்பு கூடும். பணியாளர்கள் செல்வாக்குடன் திகழ்வர்.

**விருச்சிகம்:** தகுதியறிந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். பணவிஷயத்தில் விழிப்புடன் செயற்படவும்.

**தனுசு:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகியிருக்கவும். தொழிலில் நிலுவைப் பணிகளை நிறைவேற்ற கூடுதல் முயற்சி தேவை. அளவான வருமானம் கிடைக்கும்.

**மகரம்:** பேச்சால் சிலரது அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** எதிர்கால வாழ்வில் புதிய நம்பிக்கை ஏற்படும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மீனம்:** பிறருக்கு உதவிக்கரம் நீட்டுவீர்கள். தொழிலில் அபிவிருத்திக்கான பணவசதி கிடைக்கும். இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர்.



# தனுஷ்டன் போட்டி தொடரும்!

### சிம்பு அறிவிப்பு

வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள திரைப்படம் 'வடசென்னை' உலக முழுவதும் வெளியாகி உள்ளது. ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்தப் படத்துக்கு சிம்பு வாழ்த்து தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், "நண்பன் தனுஷ், வெற்றிமாறனுக்கு எனது சார்பாகவும், எனதுரசிகர்கள்சார்பாகவும்மனமார்ந்தவாழ்த்துக்கள், சினிமாவில் எமக்கிடையேயான போட்டிகள் தொடரும்" என்று குறிப்பிட்டுள்ளார்.







## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 7 | | | | | | |
| | | | 2 | | | | | 6 |
| | | | | 5 | | | 3 | 9 |
| | 6 | 5 | 7 | 1 | | | 2 | |
| | | 8 | | | | 6 | | |
| | 1 | 4 | | 9 | | | | |
| | | | 4 | | | | 7 | |
| 5 | | | | | | 9 | | |
| | 7 | 6 | | | 3 | | 1 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 5 | 8 | 6 | 3 | 7 | 1 | 4 |
| 3 | 6 | 1 | 5 | 7 | 4 | 8 | 2 | 9 |
| 7 | 4 | 8 | 9 | 2 | 1 | 3 | 5 | 6 |
| 5 | 9 | 4 | 6 | 1 | 8 | 2 | 7 | 3 |
| 2 | 7 | 6 | 3 | 5 | 9 | 4 | 8 | 1 |
| 8 | 1 | 3 | 7 | 4 | 2 | 9 | 6 | 5 |
| 1 | 8 | 2 | 4 | 9 | 5 | 6 | 3 | 7 |
| 4 | 5 | 7 | 2 | 3 | 6 | 1 | 9 | 8 |
| 6 | 3 | 9 | 1 | 8 | 7 | 5 | 4 | 2 |

நேற்றைய விடை

சிலருக்குக் கிடைத்தது.
சிலருக்கு
கிடைக்கவில்லை. சிலர்
கிடைத்ததை சரியாக
அல்லது தவறாக
பயன்படுத்தினர்.
சிலர் பயன்படுத்தத்
தவறுகின்றனர்.

**சந்தர்ப்பம்**

## கொடும் திரை



"சைனீஸ் உணவகத்துக்குப் போன தலைவர் எதுக்குத் தகராறு பண்றார்?"

"சீனாவுக்குப் பதிலடி கொடுக்கிறாராம்..."





twitter.com/HAJAMYDEENNKS

பெண்கள் ஒரு சேலை எடுக்கும் நேரத்துக்குள் ஆண்கள் சட்டைத்துணி எடுத்து தைத்து சட்டையையே போட்டுவிடலாம்...!



twitter.com/Kozhiyaar

தன் குழந்தையின் பெருமை பற்றி பேசுகையில், தந்தை சிறிது அடக்கி வாசிப்பார் தாயோ நிறைய அடித்து விடுவார்!!!



## கோபம் தவிர்ப்போம்

**1.பொருட்படுத்தாதீர்கள் :**
உங்களைப் பற்றி யூராவது அவதூறாகவோ அல்லது மட்டமாகவோ எவர் பேசினாலும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதீர்கள். அதைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுங்கள். எதிரிகள் ஏமாந்து விடுவார்கள்.

**2. எதையும் யாரிடமும் எதிர்பார்க்காதீர்கள்**
ஒருவரிடம் நாம் ஒன்றை எதிர்பார்த்து அது கிடைக்கவில்லையென்றால், அவர் மீது கோபம் எமக்கு வருவது இயற்கை தான். எனவே, யாரிடமும் எதையும் எதிர்பார்க்காதீர்கள்.

**3. எதிரிகளை அலட்சியம் செய்யுங்கள்**
தனக்குப்பிடிக்காத மனிதர்களைப்பற்றி நினைத்துக்கூடப் பார்க்கக்கூடாது. அதனால், எமக்கு ஆத்திரமும், கோபமும் அடிக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கலாம். தன்னம்பிக்கை உள்ளவனை ஒரு போதும் அவதூறுகளும் கடுமையான வார்த்தைகளும் பாதிப்பதில்லை.



# அடக்கத்தில் சிறந்தோர்

கோவில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு சுத்தமாக வந்து கொண்டிருந்தது. ஒரு ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது, எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி வாலை ஆட்டிக் கொண்டே வந்தது.

பன்றியின் செயலைக் கவனித்த யானை ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று அந்தப் பன்றிக்கு வழிவிட்டது. யானையின் செயலைக் கண்ட பன்றி பெருமிதம் அடைந்தது. அப்போது அதன் பக்கத்தே ஒரு பன்றி வந்து கொண்டிருந்தது. அதனிடம் "பாத்தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்துவிட்டது" என்று சொல்லிச் சிரித்தது.

அப்போது பன்றியை விட்டு விலகிச் சென்ற யானையைப் பார்த்து இன்னொரு யானை, "அப்படியா? பன்றி சொன்னது போல் நீ அதைப் பார்த்துப் பயந்துவிட்டாயா? அதுதான் அதனைவிட்டு விலகி நின்றாயா?" என்று கேட்டது. அதற்கு கோவில் யானை , "நான் தவறி இடறிவிட்டால் என் பெரிய மேனியால் பன்றி நசுங்கிவிடும்.மேலும் நான் குளித்து சுத்தமாக இருக்கிறேன்.

பன்றியின் சேறு என்மேல் விழுந்து நானும் அசுத்தமாகிவிடுவேன். இந்தக் காரணங்களால் தான் நான் பன்றியை விட்டு ஒதுங்கிக் கொண்டேன்" என்று பதில் கூறியது.

தன் பலம், பலவீனம் தெரிந்தவர்கள் அடக்கத்தில் சிறந்தவர்களாக இருப்பார்கள்

## மாணவர்களாகிய நாம் பின்பற்ற வேண்டியவை


- நல்லதை நினையுங்கள்.
- நல்லதைச் செய்யுங்கள்.
- எல்லோரையும் நேசியுங்கள்.
- நண்பர்கள், உடன் பிறந்தவர்களுக்கு விட்டுக்கொடுங்கள்.
- ஆரோக்கியமான உணவைச் சாப்பிடுங்கள்.
- நன்றாகத் தூங்குங்கள்.
- தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தைக் குறைத்துக்கொண்டு, பாடம் அல்லாத புத்தகங்களைப் படியுங்கள்.
- விளையாடுங்கள்.
- அன்றைய பாடத்தை அன்றே படித்துவிடுங்கள்.
- எந்த விஷயத்தையும் இன்னொரு நாள் செய்யலாம் என்று தள்ளிப் போடாதீர்கள்.


# பாட்டி மொழிகள்




- தங்கச் செருப்பானாலும் தலைக்கு ஏறாது.
- தீயில் இட்ட நெய் திரும்பவராது.
- நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகாது.
- தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது
- செத்த பிணத்திற்கு அருகே இனி சானும் பிணம் அழுகிறது.
- கரும்பு கசப்பது வாய்க்குற்றம்.
- காட்டிலே செத்தாலும் வீட்டிலேதான் தீட்டு.
- அடிநாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமுமா?
- ஆனை இருந்து அரசாண்ட இடத்தில் பூனை இருந்து புலம்பி அழுகிறது.
- அறப்படித்தவன் அங்காடி போனால் விற்கவும். மாட்டான். வாங்கவும் மாட்டான்.
- எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.
- செய்த புண்ணியம் பலனில் தெரியும்.

## வித்தியாசங்களைக் காண்போம்





# பெப்ரவரி மாதத்துக்கு மட்டும் ஏன் 28 நாள்கள் ?



பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வரும் காலமே ஓர் ஆண்டு. பூமியின் அச்சு சாய்வாகச் சுற்றுவதால் பருவ கால மாற்றங்கள் ஏற்படுகின்றன. வானியல், பருவ காலம் ஆகியவற்றோடு ஆண்டை இணைத்து மாதங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அதில் பெப்ரவரி மாதத்தில் மட்டும் குறைவான நாள்கள் வருகின்றன.

ஓர் ஆண்டுக்கு 365 நாள்களாக இருக்கும்போது பெப்ரவரி மாதத்தில் 28 நாள்கள் வருகின்றன. லீஃப் ஆண்டில் 366 நாள்கள் வரும்போது பெப்ரவரி மாதத்தில் 29 நாள்கள் வருகின்றன.

இது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே வரும். ஒருவர் லீஃப் ஆண்டில் வருகின்ற பெப்ரவரி மாதத்தின் 29ஆம் திகதி பிறந்தால், அவருக்கு 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பிறந்தநாள் வரும்!



சரியான **வழி** காட்டுவோம்

# தென் கொரியா





1. கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு நாடு.
2. 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.
3. பெரும்பாலான மக்கள் பேசும் மொழி ஹாங்குல். இந்த நாட்டின் உத்தியோக பூர்வ நாணயம் வோன்.
4. 1988ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் இந்த நாட்டில் நடைபெற்றன. இந்த ஆண்டின் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளையும் இந்த நாடே நடத்தியது.
5. ஆண்டுக்கு இரண்டு புத்தாண்டுகளைக் கொண்டாடும் நாடு இது.
6. சைபீரியப் புலி இந்த நாட்டின் தேசிய விலங்கு.
7. இந்த நாட்டின் தலைநகரம் சியோல்.
8. சியோராக்சன் தேசியப் பூங்கா முக்கியமான சுற்றுலாத் தலங்களில் ஒன்று. இங்கே பிரம்மாண்டமான புத்தர் சிலை இருக்கிறது.
9. பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை அதிகம் நடை பெறும் நாடு.
10. இந்த நாட்டின் தேசிய விளையாட்டு டைக்வாண்டோ. இது ஒரு தற்காப்புக் கலை.

# தமிழர்கள் எதிர்கொண்டுள்ள உளசமூகப் பிரச்சினைகள்

ஸ்ரீ நதிபரன்

பரபரப்பும் போட்டியும் நிறைந்துள்ள நவீன உலகில் தகவல் தொழில் நுட்ப விஞ்ஞானத்தின் அபரிமித மான வளர்ச்சி ஒருபுறம் மக்களது நாளாந்த வாழ்வியல் நகர்வை இலகுவா னதாக்கினாலும், மறுபுறம் மனவியல் சார்ந்த பிரச்சினைகள் முனைப்புப் பெற் றுள்ளன. அவை சமூகத்தைப் பீடை போல் கருவறுத்து வருவதைக் காணமு டிகின்றது. தற்கால வாழ்வியற் சக்கரத்தின் வேகமான சுழற்சிக்கு அமைவாக, எமது வாழ்வில் கடந்து போகின்ற ஒவ்வொரு மணித்துளியையும் பயனுடையதாகவும் பெறுமதியானதாகவும் மாற்றுவதில் காலம் கழிகின்றது.

**வாழ்வியல் பண்புக்கூறுகளின் உடைவு**

இந்தநிலையில் மனம் சார் மகிழ்ச்சியைத் தரவல்ல உறவுச் சங்கிலிப் பிணைப்பா னது மெல்ல மெல்ல விடுபட்டுப் போயுள் ளது. இந்தப் பிணைப்புக்கு வலுச்சேர்க் கும் அன்பு, பாசம், கருணை, பக்தி, ஜீவகா ருண்யம், மானிட நேயம், சகோதரத்து வம், நாட்டுப் பற்று, மொழிப்பற்று, இனப் பற்று முதலான இத்தியாதிப் பண்புக் கூறுகளின் நிலைத்திருப்பு சிதைவடையத் தொடங்கியுள்ளது. பணம், பதவி, மோகம் தரும் கவர்ச்சிகளால் எமது மனிதத்துவத் தின் பெறுமதியை இழந்து வருகிறோம். மேற்கத்தேய நாட்டு நாகரிகக் குப்பைகள் எமது சமூகத்துக்குள் ஊடுருவி, காலம் காலமாக பேணி வளர்க்கப்பட்டு வந்த பண்பாட்டுக்கூறுகளில் உடைவுகளை ஏற்ப டுத்தி வருகின்றமை கவலைக்குரியது.

முன்னோர்களால் வகுத்தளிக்கப்பட்ட வாழ்வியல் பண்புக்கூறுகளை புறமொ துக்கிவிட்டு நவீன ஆடம்பரங்களுக்குள் அமிழ்ந்து அதிலிருந்து விடுபட முடியாது தவிக்கிறோம். இதனால் பல்வேறு வித மான பிரச்சினைகள் நம் வாழ்க்கையை சிறைப்படுத்திவிட முயற்சிக்கின்றன. அத் தகைய பிரச்சினைகளுள் உள, சமூக ரீதியான பிரச்சினைகள் முதன்மை யான வையாக அமைகின்றன.

இந்தப் பிரச்சினைகள் நம் சமூகத்தில் ஆழப் புரையோடியிருப்பதனால் குடும்ப, சமூகக் கட்டமைப்பானது தகர்க்கப்பட்டு பாரிய சமூகப் பிறழ்வுகளுக்கும், பண்பாட் டுச் சீரழிவுகளுக்கும் ஊற்றுக்கண்களாக இவை விளங்குகின்றன. ஆகவே உள, சமூகப் பிரச்சினைகள் என்றால் என்ன?, எத்தகைய பிரச்சினைகள் உளசமூகப் பிரச்சினைகளாக கொள்ளப்படுகின்றன?, இவை மூலம் சமூகமானது எவ்வாறான பாதிப்புகளை சந்திக்கின்றது? என்பது தொடர்பில் விரிவாக நோக்குவோம்.

**மூன்று தசாப்த காலப் போரும் அவை தந்த உளப்பேரதிர்வும்**

கடந்த 30 வருட காலமாக முடிவற்றுத் தொடர்ந்த போர் முள்ளிவாய்க்கால் பேர வலத்துடன் முற்றுப்பெற்று பல வருடங் கள் கடந்தோடிவிட்டன. இந்தநிலையில் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ள உடல், உள ரீதியான ரணங்கள் ஆற் றொணா வலிசுமந்தவையாக அமைகின் றன.

உடலியல் சார் பிரச்சினைகள் வெளிப்ப டைத்தன்மை பொருந்திய வகையினால் அவற்றை இனங்கண்டு ஆற்ற முடியும். ஆனால் உளம் சார்ந்த பிரச்சினைகளும் சமூகத்தினுள் ஆழ வேரோடியிருக்கின் றன. இந்தப் பாதிப்புக்களை இலகுவில் இனங்காண்பதோ அல்லது குண மாக்குவதோ கடினமான கைங்கரியம். இவற்றை நிவர்த்திக்கக் கூடியள வுக்கு மக்களிடத்தில் சாதகமான பிரதிபலிப்பு கள் காணப்படுவ தில்லை. காரணம் உளப் பாதிப்படைந்த ஒருவர் மருத் துவரிடம் சிகிச்சை பெறும் போது, சமூகத்தின் மத்தியில் அவ ருக்குள்ள அந்தஸ்து தவறான கற்பி தத்தினால் அதி தாழ்ந்து போகக் கூடிய நிலை காணப்படுவ தால் இலகுவில் இனங்காட்ட முன்வரமாட்டார். குடத்துள் விளக்குப்போல் மனதிலே அடர்ந்து அமிழ்ந்திருக்கும் வடுக்கள் கொந்தளித்து, இறுதியில் மனித ஆளுமை களில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் அபா யங்களை தவிர்க்க முடியாது போகிறது.



போரின் போது ஏற்பட்ட உளப்பேரதிர்வின் காரணமாக பிற்காலத்தில் பாரியளவு எதிர் மறையான விளைவுகளையும் சமூகப் பிறழ்ச்சிகளையும் எதிர்கொள்ள நேரிடும். சாதாரணமாக உளசமூகப் பிரச்சினைக ளாக உருவெடுக்கும் போர் வடுக்கள் பின் னர் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் அழிவுநிலைக்கு உட்படுத்திவிடும். இன்று வேகமாக ஊடுருவிக் கொண்டிருக்கும் கொலை, கொள்ளை, பாலியல் வன்பு ணர்வு குறிப்பாக சிறுமிகள் மீது பலவந்த மாகத் திணிக்கப்படும் பாலியல் வன்மு றைகள் இளையோரிடத்தில் தலையெடுத் துள்ள மதுசாரப் பாவனை, போதைவஸ்து மற்றும் புகைத்தல் பாவனைகள் அதன் வழியான இன்னபிற சமூக விரோதச் செயற்பாடுகள் அனைத்துமே உளசமூகப் பாதிப்புகளின் நீட்சியாகவே பார்க்க வேண்டும்.

**உளசமூகப் பிரச்சினைகள்**

எனவே இத்தகைய உளசமூகப் பிரச்சி னைகள் என்றால் என்ன?, அவை எவை?, இந்தப் பிரச்சினைகளால் தனிந பர், குடும்பம், சமூகம், நாடு என்ற மட்டங் களில் எத்தகைய பாதிப்புகளை சந்திக்க வேண்டிவரும்? என்பது பற்றிய விளக் கத்தை சுருக்கமாக நோக்குவோம்.

உளசமூகப் பிரச்சினைகள் எனும் போது, மனிதன் நெருக்கடியான அல்லது அசாதா ரணமான சூழலுக்குள் பிரவேசிக்கும் சந்தர்ப்பத்திலே மன ரீதியாக ஏற்படும் எதிர் வினைகள் அவனது அன்றாட வாழ்வி யல் நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத் தும் தன்மை உள சமூகப் பிரச்சினைக ளாக கொள்ளப்படும். இந்தப் பிரச்சினைகள் மிதமான உளக் கோளாறுகள் என்ற வகுதிக்குள்ளும் அடக் கம் பெறும். அதாவது, 'பரீட்சை, வேலையில் ஏற்படும் நெருக்கீடு கள், அன்புக்குரியர் கள் அல்லது உறவு கள் சாவடைதல், குடும்பவன் முறை கள், வறுமை மற்றும் போர்க்கால நெருக்கடிகள், சடுதியான சாவு, சொத்திழப்புக்கள், சித்திர வதை, கைது நடவடிக்கை, காணாமல்போ தல், பெண்கள் பாலியல் வன்கொடு மைக்கு உட்படல்' போன்ற பல்வேறு நிலமைகளால் உளரீதியாக ஏற்படும் கோளாறுகள் மனவடுவை ஏற்படுத்தும். இதன் விளைவாக ஏற்படும் சிக்கல் நிலை கள் மிதமான உள நோய்கள் ஏற்படுவ தற்கு ஊக்கிகளாகவும் அமைகின்றன. மன நெருக்கீடு, பதகளிப்பு, எதிர்வினை மனச்சோர்வு, மெய்ப்பாடு, உளம் சார் உடல் நோய்கள், பாலியல் ரீதியான கோளாறுகள், நெருக்கீட்டுக்குப் பின்ன ரான மனவடு, ஆளுமைக் கோளாறுகள், உளமாய நோய் மற்றும் மதுசாரப் பாவனை, புகைத்தல், போதைவஸ்துக்கு அடிமையாதல் போன்றவை மிதமான உளநோய்களாக கொள்ளப்படுகின்றன.



**பாதிப்பு**

இத்தகைய பாதிப்புகளால் சமூக, பொருளா தார, பண்பாடு ஆகிய தளங்களில் ஏற்படும் பாதகமான விடயங்கள் பற்றி நோக்கி னால், தனி நபர் என்ற ரீதியில் ஒருவருக்கு உளரீதியான பாதிப்புகள் நீண்ட காலத் துக்கு தொடரும்போது குணப்படுத்தவே கடினமான பாரிய உளத்தாக்கத்துக்கு உட்பட்டு எதிர்காலமே சூனியமாக மாறக் கூடிய அபாயமுண்டு. அத்துடன் உடல் சார் நோய்களின் தாக்கமும் அதிகரித்து ஆயுளும் சுருங்கக்கூடிய ஏதுநிலைகளும் காணப்படுகின்றன.

போர்ச் சூழ்நிலைகள் பெரிதும் இளைய தலைமுறையினரையே அதிகமும் பாதித் திருக்கிறது. அதாவது தொழிற்படையில் (நாட்டின் அபிவிருத்திக்கு) அதிகம் பங்க ளிப்பு செய்துவருகின்ற இளைஞர் யுவதி களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் சமூக வடுவைச் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள் ளப்படுகின்றனர். உதாரணமாக போர்க் காலத்தில் கைது செய்யப்பட்டு விடு விக் கப்பட்டோர் (முன்னாள் போராளிகள்) தொடர்பில் தமிழ்சமூகம் கரிசனை கொள் ளவில்லை. அவர்களுக்கோ அல்லது அவர்களது குடும்பத்தினருக்கோ எந்தவி தமான மதிப்பளிப்பையும் தர மறுக்கி றோம். மாறாக அவர்களை தீண்டத்தகா தவர்களாகவே பார்க்க முனைகிறோம். இதன் காரணமாக அவர்களும், அவர்கள் சார்ந்த குடும்பங்களும் சொல்லொணாத் துயரங்களை போர்க்காலத்தின் பின்பும் அனுபவித்து வருகின்ற னர்.

**அதிகரித்துவரும் உளநிலை சார்ந்த ஊனம்**

பொருளாதார ரீதியாகப் பார்த்தால், உளநிலை சார்ந்த ஊனமானது இளை யோரிடையே அதிகரிப்பத னால் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியில் பாதிப்பு ஏற்படு கின்றது. அத்தோடு பண்பாட்டு நிலையிலும் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக சமய கலாசார விழாக்கள் மற்றும் சடங்குக ளில் பாதிப்புற்றோர்களது பங்களிப் பென்பது குறைவாகவே காணப்படும்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் இளையோ ரின் பங்களிப்பு முதன்மையானது. ஆனால் போர்ச் சூழ்நிலையின் எதிர்வி ளைவுகள் இளைஞர் யுவதிகளின் பங்க ளிப்பை வெகுவாக பாதித்திருக்கிறது. எனவே தனி நபரில் ஏற்படும் பாதிப்பானது அவரது எல்லையைக் கடந்து அவர் சார்ந்த குடும்பம், சமூகம், நாடு என்ற ரீதி யில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என லாம். கடந்தகால போர்க்காலத்தில் ஏற் பட்ட உளக்காயங்கள் இன்றும் மக்களிடத் தில் இலைமறை காயாக நெருப்பாகக் கனன்று வேதனைப்படுத்துகிறது. அவற்றை ஆற்றுவதற்கான எத்தனங் களை சில அரச, அரச சார்பற்ற நிறுவனங் கள் முன்னெடுத்த போதும், அவை எதிர் பார்த்த பிரதிபலனைத் தரவில்லை என லாம்.

ஏனெனில் மக்களிடத்திலிருந்து சாதக மான வெளிப்படுத்தல்கள் எழவில்லை. குறிப்பாக, 'தூண்டலுக்குரிய பிரதிபலிப்பு இன்மை, நிறுவனமயப்படுத்தப்பட்ட பொறிமுறையிலுள்ள குறைபாடுகள், வினைத்திறன் மிகுந்த தேர்ச்சிபெற்ற உளசமூகப் பணியாட்தொகுதியினர் இன்மை' போன்ற காரணங்களால் உளக் காயங்களை மக்களிடத்திலிருந்து அகற் றுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

**ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோம்!**

இறுதிப்போர் தந்துவிட்டுச்சென்ற வலிசு மந்த ரணங்களும் அதனால் ஏற்படும் உளக் குமுறல்களும் மக்கள் மனங்களில் ஓயாது வலித்துக்கொண்டிருக்கையில், உளப்பேரதிர்வால் உண்டான மனவ டுவை ஆற்றுவதற்கான வழிவகைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இல் லையேல் எதிர்காலத்தில் ஆக்க சக்தி குறைந்த ஆரோக்கியமற்ற சமூகத்தின் தோற்றத்தையும், ஆளுமை முதிர்ச்சியற்ற உளக்குறைபாடுள்ள குழந்தைகளின் பிறப்பையும் தடுக்க முடியாது போய்விடும் என்பதை எல்லோரும் உணர்ந்துகொள் ளத் தலைப்பட வேண்டும்.

எனவே இவர்களது ஆக்க சக்திகளை நிர் மூலமாக்காது சுயேச்சையான உண்மை யான உணர்வுகளை உணரத்தலைப்ப டுவதுடன், புறவயமாகவும் சுதந்திரமாக வும் சிந்திப்பதற்கான வெளியைத் தோற் றுவிக்க-வேண்டும். இதனூடே தமிழ்ச் சமூகம் எதிர்காலத்தில் புத்துயிர்ப்புப் பெறும்.

# மணிவிழா வாழ்த்து

## திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன்

**இல. கல்வி நிர்வாகசேவை வகுப்பு - I**

**(வலயக்கல்விப்பணிப்பாளர் - மன்னார் கல்வி வலயம்)**



## Congratulations!



**கல்விப்பணி :**

26.04.1982 - 20.01.1985 - மன்/ சிலாவத்துறை G.M.M.S
21.01.85 - 31.12.86 - பலாலி ஆசிரியர் கலாசாலை (கணிதம்)
01.01.87 - 30.04.91 - மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி
01.05.91 - 31.12.95 - யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
01.01.96 - 10.11.96 - கிளி/ கனகபுரம் ம.வி
11.11.96 - 04.06.98 - மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி
05.06.98 - 03.01.99 - மன்/ பற்றிமா ம.ம.வி
04.01.99 - 20.06.2002 - பிரதி கல்விப்பணிப்பாளர் மன்னார் வலயம்
21.06.2002 - 30.09.2006 - மன்/ முருங்கன் ம.வி
01.10.2006 - 10.04.2011 - வலயக்கல்விப்பணிப்பாளர், மடு வலயம்
11.04.2011 - 13.01.2013 - மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் (வன்னி)
14.01.2013 - 26.11.2015 - பிரதி செயலாளர் (கல்வி அமைச்சு வடமாகாணம்)
27.11.2015 - 17.10.2018 - வலயக்கல்விப்பணிப்பாளர், மன்னார் வலயம்.

**மன்னார் கல்வி வலயத்தை பொறுப்பேற்று தேசிய மட்டத்திலும் வடமாகாணத்திலும் கல்வியிலும், விளையாட்டிலும் முதன்மை நிலைக்கு இட்டுச்சென்று தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெறும் எமது கல்விப் பணிப்பாளருக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு அவர் சிறந்த தேக ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**அதிபர்கள், வலயக்கல்விப்பணிமனை பணியாளர்கள், ஆசிரியர்கள், மன்னார் கல்வி வலயம்.**

---

# என்ன செய்யப் போகிறீர்கள் ?



### 01 க.பொ.த உயர்தரத்தின் பின்னரான வாழ்க்கையை எவ்வாறு திட்டமிட்டுள்ளோம்.?

சிறு வயது மாணவர்கள் தாம் எவ்வாறு வரவேண்டும் என்ற உயர்ந்த கனவுகளுடன் கற்று வருகின்றார்கள். அவர்களின் கனவிற்கு க.பொ.த உயர்தரப்பரீட்சை என்பது மிக உயர்ந்த தடைக்கல்லாக அமைகின்றது.

உண்மையில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் தோற்றும் இப்பரீட்சையில் சுமார் முப்பதினாயிரம் பேர் மாத்திரமே பல்கலைக்கழக அனுமதியை பெறுகின்றனர். சுமார் இரண்டு லட்சத்து இருபதினாயிரம் மாணவர்கள் தாம் எவ்வாறான நிலையை அடைவது என்பதில் தெளிவின்மை காணப்படுகின்றது. இவர்களில் அனேகம் பேர் தோல்வி மனப்பாண்மையுடனும், அனுமதி பெற்றவர்கள் கூட தாம் விரும்பிய துறையை அடையவில்லை என்ற ஆதங்கத்துடனும் காணப்படுகின்றனர். இவர்களிற்கு எம்மால் இயன்ற வழிகாட்டுதல்களை புரியவேண்டியது எமது கடமையாகும்.

### 02 க.பொ.த உயர்தரத்தின் பின்னரான காலம் ஏன் முக்கியமானது?

ஒவ்வொரு மாணவனிடத்தும் மிகுந்த மாற்றத்தை கொண்டுவரும் காலம் இதுவாகும். 14 வருடங்கள் ஒரே மாதிரியாக அமைந்த பாடசாலைக்கல்வி முடிவடைந்து உண்மையான திறந்த உலகத்தில் பிரவேசிக்கும் காலம். மாணவருக்கும் மட்டுமல்லாது பெற்றோருக்கும் பாடாசாலை செல்லாது வீட்டில் நிற்கும் மாணவனின் எதிர்காலம் தொடர்பாக மிகுந்த மனஅழுத்தத்தையும் கொடுக்கும் காலம். அவர்களின் எதிர்காலப்பயணத்தை தீர்மானிக்கக்கூடிய தொழில் பற்றியதும் அது தொடர்பான கற்கைகளையும் பயிற்சிகளையும் சிந்திக்கும் காலம்.


### 03 தமது பிள்ளைகள் தொடர்பாக அனேகமான பெற்றோர்களின் எதிர்பார்ப்பு எவ்வாறு உள்ளது?

அனேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இவ்வாறுதான் வரவேண்டும் என தமது மனதில் ஓர் திட்டத்தை வைத்துள்ளார்கள். இது ஓர் நல்ல விடயம். ஆனால் அவர்கள் தற்போதைய கால மாற்றத்திற்கமைய எவ்வாறான தொழில்சார் கற்கை நெறிகளிற்கு வரவேற்பு என்பதைப்பற்றி அறிந்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

### 04 உயர்தரத்தின் பின்னர் எவ்வாறான துறைகளை கல்வியை கருத்தில் எடுக்கலாம்.?

ஒருமாணவன் உயர்தரப்பாடத்தில் கற்ற விடயத்தை தான் பின்னர் கற்கவேண்டும் என்றில்லை. தொழில் தொடர்பான தேடலுக்கேற்க அவன் கற்கை நெறியை பயில முடியும். உதாரணமாக விஞ்ஞானத்துறையை பயின்ற ஓர் மாணவன் சி.ஐ.எம்.ஏ போன்ற கணக்கியல் துறையில் பிரகாசிக்க முடியும். இவ்வாறே கலைத்துறையை பயின்ற மாணவன் தகவல் தொழில்நுட்பத்துறையில் உயர்ந்த வேலையை பெறமுடியும்.





### 05 எவ்வாறு இதை தீர்மானிப்பது?

சரியான ஆலோசனைகளிற்கு அமைய பெற்றோர்கள் சில தெரிவுகளை மேற்கொண்டு தமது பிள்ளைகளின் விருப்பத்தினையும் கருத்தில் எடுத்து தீர்மானிக்க முடியும்.

### 06 எவ்வாறு தெரிவுகளை மேற்கொள்வது?

10 ஆண்டுகளிற்கு முன்னர் ஓர் குறிப்பிட்ட சில தெரிவுகளே இருந்தன. இன்று ஒரு மாணவனின் விருப்பத்தினை கருத்திலெடுக்கும் போது ஏராளமான துறைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு துறையினதும் தொழில் வாய்ப்பு, செலவு, காலம் என்பவற்றை கருத்திலெடுத்து முடிவுக்கு வரமுடியும். பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் கூட இன்று வேலைவாய்ப்பு கருதி ஏனைய கற்கை நெறிகளினையும் பயின்று வருகின்றனர்.

மாணவர்களுக்கு நாம் வழங்கும் சில தெரிவுகள் க.பொ.த உயர்தரத்தின் பின்னரும் பல்கலைக்கழக அனுமதி வரையுமான காலத்தில் பயன்தரும் வகையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட அனுசரனையுடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழக்கழகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள எம்.சி.எஸ் நிறுவனம் பின்வரும் தெரிவுகளை உங்கள் முன்மொழிந்து அதற்குரிய புலமைப்பரிசிலினையும் வழங்குகின்றது.

1. CIMA –UK
2. CMA- Sri Lanka
3. BIT-University of Colombo
4. Network Computer Engineering –USA
5. Software Engineering – USA

மேற்படி கற்கை நெறிகளை க.பொ.த உயர்தரம் சித்தியடையாதவர்களும் அடிப்படைப்பயிற்சியினைப் பூர்த்தி செய்வதன் மூலம் பயில முடியும்.

இதன் தொழில் வாய்ப்பு சம்பந்தமான விபரங்களை எமது நிறுவனத்தில் பார்வையிட முடியும்.

விஜய தசமியை முன்னிட்டு புதிய பிரிவுகள்
**Dip in Ms office  Dip in English**
**Dip in Web Designing & Developing**
**Dip in Hardware & Networking**
**Dip in Multimedia & Auto CAD**
**Dip in Programing Java, C, Python**
**Dip in Accounting Packages**
**ICT classes for OL  AL  Kids**

**புலமைப்பரிசிலிற்கான வினா**

The inventor, founder, & chairman of Twitter is…?
A. Jack Dorsey.  B. Mark_Zuckerberg
C. Hoffman  D. Billgates

**Type <KAL><NAME>Ans & send to 772395895**

## MCS IT CAMPUS

34,Sir.Pon.Ramanathan Road, Thirunelvely, Jaffna
TP : 021 222 6373

British BUSINESS COLLEGE
Where Students Come First

## விஜயதசமி அன்று வித்தியாரம்பம்

BBC பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் விஜயதசமியன்று (19.10.2018 வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணிமுதல் ஏடுதொடக்கி வைக்கப்படும்

BBC
Early Learning Schools

சர்வதேச தரத்திலான Canada கல்லூரியின் ஆசிரிய பயுற்றுவிப்பாளர்களினால்பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

விஜயதசமி அன்று புதிய அனுமதிகள்

NO ADMISSION FEES
NO MONTHLY FEES

❖ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம் ❖ ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள் ❖ தமிழ் கட்டாய பாடம் ❖ மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள் ❖ விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

❖ 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3 வரை | 3+ முதல் 4 வரை | 4+ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |



❖ வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
❖ கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை | அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 31 . 07 . 1933



மறைவு 18 . 09 . 2018

### செல்வி பரிமளாதேவி அம்பலவாணர்

(தேவி ரீச்சர்)

உங்கள் வாழ்வின் சுடர் மூலம்
எங்கள் வாழ்வுக்கு ஒளி தந்தீர்கள்
விண்ணில் இருந்தும் - என்றும்
எங்கள் மேன்மைக்காய் ஆசிகள் வேண்டி
அஞ்சலித்து உம்மைப் போற்றுகின்றோம்

குறிப்பு:- அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அவரது இல்லத்தில் 20.10.2018 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், செம்மலை வாழ் அவரின் அன்புக்குரியவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.


ஆயாக்கடவை
பிள்ளையார் கோயிலடி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்

சகோதரி, பெறாமக்கள்.
077 129 8159,
021 224 0950

(CS/20649)(11.17)

## மரண அறிவித்தல்

மலரன்னை மகவாகி 06 . 05 . 1963



புவியன்னை உறவாகி 16 . 10 . 2018

### செல்வஸ்ரீ சிறீதரன் (றஞ்சிற்)

(தொழில்நுட்ப உதவியாளர் - புகையிரத திணைக்களம், வவுனியா)

காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய விடுதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வஸ்ரீ சிறீதரன் 16.10.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வஸ்ரீ மற்றும் மலர்நாயகி (பேபி) தம்பதிகளின் மூத்த மகனும், சிறீதர் (றமேஸ்), காலஞ்சென்ற சிறீதாஸ் ஆகியோரின் பாசமிகு அண்ணனும், புவனேஸ்வரியின் (சங்கரத்தை) அன்புத் துணைவரும், பிரசாத் (சேகர் - வ/வவுனியா தமிழ் ம.ம.வி) இன் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராசா கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி (சுங்கரத்தை) தம்பதிகளின் மூத்த மருமகனும், சே.விமலாதேவி (சங்கரத்தை), க.சந்திரலிங்கம் (பிரதேசசபை - காங்கேசன்துறை), பு.பராசக்தி (கனடா), செ.திலகராணி (பிரான்ஸ்), க.கயிலைநாதன் (யா/ அராலி சரஸ்வதி ம.வி), க.செந்தில்நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மைத்துனரும், சி.ஸஸிலதா (சுதுமலை), சேனாதிராஜா (கனடா), ச.இராஜேஸ்வரி (உப அதிபர் - யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்., நல்லூர்), புனிதராசா (கனடா), செல்வராசா (பிரான்ஸ்), க.கார்த்திகா (அஞ்சல் அதிபர் - பிரதம அஞ்சலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் நேசமிகு சகலனும், சி.சந்தோஷ் (மாணவன் - யா/ பரியோவான் கல்லூரி), சே.ஜதுசனா (சங்கரத்தை), பு.கீர்த்திகா, பு.நிவேதா, பு.கமல்ராஜ் (பிரான்ஸ்), செ.கீர்த்தனா, செ.சாருஜன், செ.சஞ்ஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் பிரியமுள்ள பெரியதந்தையும், ச.திருக்குமரன், ச.திருவரங்கன், க.ஆரபி ஆகியோரின் பிரியமான மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2018) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் (சங்கரத்தை) இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr.செல்லத்துரை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

(CS/206447(11,17)

தகவல்
குடும்பத்தினர்.

கயிலைநாதன் - 077 790 0397, சிறீதர் (றமேஸ்) - 075 049 2044,
புவனா - 077 754 6875, மலர்நாயகி - 077 617 5312, ஸஸிலதா - 077 617 5311

## மரண அறிவித்தல்



### மேரிஅன்ரனிதாஸ் (மனோ) கீர்த்தனா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பாங்சால் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி அன்ரனிதாஸ் (மனோ) கீர்த்தனா 15.10.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மனோ - அமலேஸ் தம்பதிகளின் பாசமிகு மகளும், தனோச்சனாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னய்யா டேவிற் மற்றும் சின்னாச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற லோறன்ஸ் மற்றும் எட்விஸ் தம்பதிகளின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற அஞ்சலோ மற்றும் அன்ரனி ஜோய் (றொபின்) - பவுண் (யாழ்ப்பாணம்), ஸ்ரீ - றோசனா (சுவிஸ்), அருள்நேசன் - சுபா (பிரான்ஸ்), லீனஸ் - ஜெயா (இத்தாலி), ஏராஸ் - பௌசி (இத்தாலி), மோகன் - பெலிசியா (கொழும்பு), சுரேஸ் - கமலா (பிரான்ஸ்), ஜெறோம் - சர்மிலா (பிரான்ஸ்) மனோ ஸ்ரீபன் - டெல்சியா (கொழும்பு), யூச்சின் - சசிகலா (யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான பாலு - மேரி அஞ்சலி (சிலோசனா) ஆகியோரின் பாசமிகு மகளும், மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (18.10.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ்.மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (18.10.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ்.மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.327, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

(AKN/5697(11,17)

தகவல்
குடும்பத்தினர்.

# சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்

**01.01.2019 முதல் 31.12.2019 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், களஞ்சிய அறைகள், பொது மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2019**

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 18.10.2018–31.10.2018 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 01.11.2018 மு.ப 10.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 01.11.2018 மு.ப 10.30 மணி

கேள்விஅறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்தகேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | கச்சாய் உப அலுவலகம் | | | |
| 01 | கொடிகாமம் மத்தியமரக்கறிச் சந்தை, வண்டி வாகனதரிப்புநிலையம் | 10,577,100.00 | 105,800.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் மீன் சந்தை | 1,497,700.00 | 15,000.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தைமாட்டிறைச்சிக்கடை | 924,960.00 | 9,200.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் சந்தைகோழி இறைச்சிக்கடை | 1,261,500.00 | 12,600.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 78,200.00 | 800.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 67,200.00 | 700.00 | 750.00 |
| 07 | களஞ்சியஅறை இல - 01 | 36,400.00 | 500.00 | 750.00 |
| 08 | களஞ்சியஅறை இல - 02 | 34,700.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 11,900.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 01 | 16,500.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 16,500.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 16,500.00 | 500.00 | 750.00 |
| | வரணி உப அலுவலகம் | | | |
| 13 | வரணிபொதுச்சந்தை | 113,200.00 | 1,100.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலைபொதுச்சந்தை | 7,790.00 | 500.00 | 750.00 |
| | கைதடி உப அலுவலகம் | | | |
| 15 | கைதடிமாட்டிறைச்சிக்கடை | 188,670.00 | 1,900.00 | 750.00 |
| 16 | கைதடிகோழி இறைச்சிக்கடை | 220,600.00 | 2,200.00 | 750.00 |
| 17 | கைதடிப் பொதுச்சந்தை | 17,955.00 | 500.00 | 750.00 |
| | மிருசுவில் உப அலுவலகம் | | | |
| 18 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 323,040.00 | 3,200.00 | 750.00 |
| 19 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 61,275.00 | 600.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 44,000.00 | 500.00 | 750.00 |
| 21 | மிருசுவில் பொதுச்சந்தை | 5,000.00 | 500.00 | 750.00 |
| 22 | மிருசுவில் வடக்குபொதுச்சந்தை | 20,900.00 | 500.00 | 750.00 |
| 23 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 5,400.00 | 500.00 | 750.00 |
| | நாவற்குழி உப அலுவலகம் | | | |
| 24 | நாவற்குழி பொதுச்சந்தை | 3,300.00 | 500.00 | 750.00 |
| 25 | நாவற்குழி மீன்சந்தை | 3,300.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் குறித்த18.10.2018 தொடக்கம் 31.10.2018 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக் கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்கவேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டுவருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றுடன் Vat 15%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. 01.11.2018 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதாரபரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும். அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒருவார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்தவேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் குத்தகை விவரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"செயலாளர் சாவகச்சேரிபிரதேசசபை,கொடிகாமம்"** என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விவரங்களைப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமைநேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**சாவகச்சேரிபிரதேசசபை,**
**கொடிகாமம்.**
**18.10.2018**

(C32129)(11,17)


# தணிகா நுண்கலைக்கல்லூரி

**விஜயதசமியை முன்னிட்டு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 19.10.2018**



பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சித்திரம், வயலின் ஆகிய நுண்கலைகளுக்கான வகுப்புக்கள் தலைசிறந்த நுண்கலை ஆசான்களால் கற்பிக்கப்படுகின்றது மற்றும் தரம் 1 - 5 வரையான அனைத்து வகுப்புக்களும் குழு வகுப்புக்களாக சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது. மற்றும் Makeup, Icing Class போன்ற வகுப்புக்களும், தரம் 6 இற்கான குழு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**தணிகை மஹால்**
151 /1, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
077 762 4475



# MASSIVE VEHICLES AUCTION SALE

All Types Of Vehicles Including Two Wheel Tractors, Four Wheel Tractors, Harvesters, Motor Bikes, Lorries, Trucks, Three Wheelers In Excellent Condition

**23rd of October**

LOLC Vehicle Facility Centre
STATION ROAD, VAIRAVAPULIYANKULAM,
**VAVUNIYA**

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

**On View - 20th,21st & 22nd October**

(Please refer the Udayan On 19th of October 2018 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME
*One Country. One Auctioneer. Celebrating 126 Years of Service Excellence.*

D.ads

Head Office & Showroom: 24, Torrington Road, Kandy. Tel: 081 2227593, Fax: 081 2224371, Email: schokmankandy@sltnet.lk
City Office & Showroom: No.6A, Fairfield Gardens, Colombo 8. Tel: 011 2502680, 2585408, Tel / Fax: 011 2588176, Email: schokman@samera1892.com
Web: www.sandslanka.com



# அறிமுகமாகின்றது

இலங்கையில் முதல் முறையாக இமேஜன்சி LED பெனல் லைட்



- மின்சாரம் இல்லாதபோது ஆகக்குறைந்தது 1 மணிநேரம் சிறப்பாக ஒளி தரும்.
- சாதாரண பெனல் லைட்டைப் போல் பாவிக்கலாம்
- ரீசார்ஜ் செய்யக்கூடிய பெட்ரியைக் கொண்டுள்ளது
- பல வடிவங்களில் கிடைக்கின்றது
- 1 வருட உத்தரவாதம்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
**0773 788 654**

அ.சி.விலை ரூபா. 1,725/- தொடக்கம்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

WUSLEY
**Wusley Lanka (PVT) Ltd**
# 117, 1st Cross Lane, off Parakum Mw, Attidiya, Dehiwala
email: info@wusleylk.com

## MINISTRY OF HOUSING AND CONSTRUCTION
## DEPARTMENT OF BUILDINGS
## INVITATION FOR BIDS

**Rehabilitation & Renovation of Quarters for the Department of Fisheries at Thalaiyady**

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Department of Buildings now invites sealed bids from eligible and qualified bidders for "Rehabilitation & Renovation of Quarters for the Department of Fisheries at Thalaiyady" as described below and estimated to cost Rs. 4.98 million. (Excluding VAT)
   The construction period is 60 Days
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and
   Shall be registered in the field of building construction for Grade C7 or above with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, and inspect the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs.
   Contact numbers are: Phone: 021 2222781, Facsimile: 021 2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna from 18.10.2018 until 01.11.2018 from 9:00hrs to 15:00 hrs upon payment of a non refundable fee of Rupees Two thousand & Five hundred only (Rs. 2,500/).
6. Bids shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna to reach on or before 10.00 hrs on 02.11.2018. Bids will be opened soon after closing at the Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 91 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of Director General of Buildings
   - for an amount of Rs. 95,000.00
   - valid up to 03.03.2019
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data

**Eng. A. Nawas Atham**
**Director (R2)**
**Department of Buildings**
**2nd Floor, "Sethsiripaya", Battaramulla.**




## பகிரங்க ஏல விற்பனை
## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்


மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

**காலம் - 24.10.2018 மு.ப. 9.00 மணி**
**இடம் - மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில்**
**ஏலத்தில் விடப்பட உள்ள பொருள்கள் :**
**விறகு, பலகைகள், பழைய ஓடுகள், பழைய இரும்புகள்**

ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் 23.10.2018 ஆம் திகதி பி.ப. 6 மணிக்கு முன்னர் ஆலய முகாமையாளரிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பெறுநர் குழு, மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.**

## மரண அறிவித்தல்
## கதிரவேலு நல்லையா



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நல்லையா நேற்று (17.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற திலகரத்தினத்தின் அன்புக் கணவரும் சுசீலாதேவி, ஆனந்தமோகன், சிவானந்த குணசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு த்தந்தையும் ஏகாம்பரநாதன், கமலாம்பிகை, கேசினி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற கௌரிசங்கர், தினேஷ்சங்கர், மௌலீசன், சந்திரவதனி (கனடா), சுபாஜினி (கனடா), மயூதரன், அபிலாஷ், லஹிதா, பவதாரணி ஆகியோரின் அன்புப் பேரனும் சயான், நிஷானி, சானியா ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2018) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**
**தகவல் : குடும்பத்தினர்.**
**070 205 0007**

## பெயர் மாற்றம்

**சுப்பையா குருஸ்** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **சுப்பையா கணேசன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் **கணேசன்** என்றே கையெப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**சு. கணேசன்**

(cs - 14684) (11.17)

## தேவை

K.V. பிறின்டேசின் தலைமைக் காரியாலயத்தில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. (தலைமைக்காரியாலயம் - இல.58, கிறின்லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13)


**077 729 1927, 021 720 0237**
K.V.பிறின்டேஸ், யாழ்ப்பாணம். (C9743) (11,17)

## வேலையாள்கள் தேவை

விவசாய பண்ணையில் மாடு, ஆடு, கோழி ஆகியவற்றை தங்கியிருந்து பராமரிப்பதற்கு ஆள்கள் தேவை.

**தொடர்பு - 077 773 0567**

**இப்பொழுது திரையில்**
**A Cinema Entertainments (Pvt) Ltd Release**




## வடக்கு, கிழக்கு

| | |
|---|---|
| Majestic Jaffna | 10.30/1.30/4.15/7.00 pm |
| Raja Jaffna | 10.30/2.30/6.30 |
| Saru Cinema Point Pedro | 10.30/2.30/6.30 |
| Vijaya Batticaloa | 10.30/2.30/6.30 |
| Vasanthi Vavunia | 10.30/2.30/6.30 |
| Archana Akkaraipattu | 10.30/2.30/6.30 |
| SARASWATHY Trinco | 10.30/2.30/6.30 |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

### நாளாந்த வாடகை அறவீட்டுடன் இறைச்சிக் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான இடைக்காலக் கேள்வி அறிவித்தல் 2018

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளுக்கான 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதி வரை நாளாந்த வாடகைக்கு விடுவதற்கான கேள்வி கோரப்பட்டுள்ளது.

**கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 29.10.2018 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 29.10.2018 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00**
**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 29.10.2018 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00**
**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகம்.**

| இல | இறைச்சிக்கடைகளின் விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக் கடை இல - 01 | 500.00 | 5,000.00 | 400.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக் கடை இல - 02 | 500.00 | 5,000.00 | 400.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 1 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 2,000.00 |
| 2 | கோண்டாவில் ஸ்ரேஷனடி ஆட்டிறைச்சிக்கடை இல - 01 | 500.00 | 5,000.00 | 500.00 |
| 3 | கோண்டாவில் ஸ்ரேஷனடி ஆட்டிறைச்சிக்கடை இல - 02 | 500.00 | 5,000.00 | 500.00 |

கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**திரு.தா.தியாகமூர்த்தி,**
**தவிசாளர், நல்லூர் பிரதேசசபை,**
**திருநெல்வேலி.**

(IN/8083)(11,17)

**17.10.2018**

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 41/04, சங்கரத்தை வீதி, முதலாம் ஒழுங்கை, வட்டாரம் - 04

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 04 சங்கரத்தை வீதி, முதலாம் ஒழுங்கை வீதியிலுள்ள இல.41/04 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் மருதன் முருகன் என்றே காணப்படுகின்றது.

பெயர்மாற்றத்துக்குட்படும் ஆதனத்தினை **செல்லத்துரை கருணானந்தமும் பெண் அருந்தவமும்** ஆகியவர்கள் **சோமசுந்தரம் அருணாசலமும் பெண் மரகதமும்** ஆகியவர்களிடமிருந்து பிரசித்த நொத்தாரிசு மு.க.சிவசுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14806/07.12.1988 இலக்க உறுதியால் குறித்த ஆதனமானது ஆரம்பத்தில் அரியகுட்டி பெண் சின்னத்தங்கத்துக்கு உரியதாகவிருந்து அவரால் அவரது இரண்டாவது மகள் தம்பிப்பிள்ளை பெண் சிவபாக்கியத்துக்கு கொடுபட்டு பின்னர் குறித்த சோமசுந்தரம் அருணாசலம் பெண் மரகதம் 1950 ஆம் ஆண்டளவில் வாய்ச்சொல் நன்கொடையாக பெற்று சொந்தக்காரர் ஆனார் என வெளிப்படுத்தப்பட்டு அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

இராசரத்தினம் கபிலன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4901/24.06.2013 ஆம் இலக்க உறுதியால் குறித்த செல்லத்துரை கருணானந்தமும் பெண் அருந்தவமும் ஆகியவர்களிடமிருந்து நிபந்தனை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த செல்லத்துரை **கருணானந்தமும் பெண் அருந்தவமும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5517/25.06.2017 ஆம் இலக்க உறுதியால் குறித்த இராசரத்தினம் கபிலன் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று மீண்டும் சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை **பரசுராமன் ரமேஸ்வரன் பெண் காமினி** பிரசித்த நொத்தாரிசு சரண்யா ஜோசப்குமார் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 35/15.07.2018 ஆம் இலக்க உறுதியால் செல்லத்துரை கருணானந்தமும் பெண் அருந்தவமும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பரசுராமன் ரமேஸ்வரன் பெண் காமினி ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ்ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பரசுராமன் ரமேஸ்வரன் பெண் காமினி ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(J/9744) (11,17)

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

**வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்**

Student Visa Migration visa மூலமாக U.K. செல்பவர்களுக்கு

**IELTS (Academic General)**

Settlement Visa மூலமாக U.K. செல்பவர்களுக்கு

**IELTS Life Skills**

மாணவர்கள், தொழில்புரிவோர், தொழில் தேடுபவர்கள், பல்கலைக் கழகம் செல்வோர், செல்லவுள்ளோர் அனைவருக்கும் அமைவான

Diploma in English 2 ½ Months
Spoken English With Grammar (Quick Learning)

விஜய தசமியை முன்னிட்டு
புதிய பிரிவுகள் 19.10.2018 காலை 11 மணிக்கு ஆரம்பம்
பதிவுகள் ஆரம்மாகிவிட்டன.

புதிய தொழில் நுட்பத்திற்கு அமைவாக Audio, Video Visuals மூலமாக Reading, Writing, Speaking, Listening எனப்பிரிக்கப்பட்டு

சிறந்த விரிவுரையாளர்கள் மூலமாகவும் Skype மூலமாகவும்

பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
வடக்கு மாகாணத்தில் அதிகமான மாணவர்களை பயிற்றுவித்து 100% அனைவரையும் வெற்றி பெறச் செய்த ஒரே நிறுவனம்!

BCHS

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane off Stanley Road, Jaffna.

Tele: 021 222 4550
Hot Line: 076 138 0212

# கம்சப்பிரியா இசைக்கல்லூரி



வட இலங்கை சங்கீதசபை பரீட்சையில் (2018) சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டுகின்றோம்.

விஜயதசமி நாள் வகுப்பு - வெள்ளி மாலை (19.10.2018) 4 மணி

இல. 30, கிருஸ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை.

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!*

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம்



பருத்தித்துறை வீதி, நல்லூர், 2ஆம் குறுக்குத்தெருவினைப் பிறப்பிடமாகவும் வரணி இடைக்குறிச்சியை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவிலில் வசித்தவருமாகிய திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (17.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பொன்னையாப் பத்தர்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சாந்தகுமாரி, சிவயோகநாதன் மற்றும் தவயோகநாதன், சண்முகநாதன், ஜெயநாதன், வசந்தகுமாரி (ஆசிரியை - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் நற்குணராசா, வசந்தகுமாரி, செல்வாம்பிகை (ஆசிரியை), தவநேசன் (கிராம அலுவலர் - கந்தர்மடம் J/103) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாளினி (ஆசிரியை), வரகாஷ்மன், குகதீஸ், நாகலோஜினி, மிஜேஸ், ரிஷாங்கி, டினோஜிதன், திவ்யா, கிருஷிகா, காருண்யா, மயூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 55, பூநாறி வீதி, வண்ணார்பண்ணை, கொக்குவிலில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் (18.10.2018) வியாழக்கிழமை பி.ப. ஒருமணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
(மருமகன் ந.தவநேசன் G.S. J/103)
077 892 5845

55, பூநாறி வீதி,
வண்ணார்பண்ணை, கொக்குவில்.

(CS 20660/15/17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



நிகழும் விளம்பி வருடம் புரட்டாதி மாதம் 4 ஆம் நாள் (20.09.2018) வியாழக்கிழமையன்று சிவபதமெய்திய எமது குடும்பத்தலைவர்

## அமரர் பாலசிங்கம் லிங்கநாதன்

**(உரிமையாளர், வசந்தம் பார்மசி யாழ்ப்பாணம்)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் ஐப்பசி மாதம் முதலாம் நாள் (18.10.2018) வியாழக்கிழமையன்று காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியம் எதிர்வரும் ஐப்பசி மாதம் 3 ஆம் நாள் (20.10.2018) சனிக்கிழமையன்று காலை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்று அதனை தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மகேஸ்வரபூஜையும் (மதியபோசனம்) நடைபெறும். இந் நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

50/45, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6268

**குடும்பத்தினர்.**

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18
10
1942



இறப்பு
10
10
2016

## திருமதி கமலாம்பிகை இராசலிங்கம்

குடும்பத்தின் ஜீவனாகி குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவே கொண்டும்மை சென்றதுவே இரு வருடங்கள் பகலும்
இரவுமாய் கடந்த நாள்களின் நினைவுகள் மனதில் ஈரமாய்
இல்லை என்பதை உணர மறுத்து வாழ்க்கை கடல் எதிர் நீச்சலடித்து
தொடர்கின்றது மீளாத் துயரோடு கண்ணீரில் தான் நனைந்து கரைகின்றோம்
எம் வாழ்வை மண் மீது உமை என்றும் மனதோடு வாழ்கிறோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

27/6, துரையப்பா வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

# 8 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

18.10.2018




HAPPY BIRTHDAY சிவறாஜகுமார் மதிவதனி தம்பதியரின்

செல்வப் புதல்வர்கள்

## சிவடனுஷன், சிவடனுஷிகன் அவர்கள்

தங்கள் பிறந்தநாளை இன்று (18.10.2018) வியாழக்கிழமை இல.50/3. பிரதேசச் செயலக ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் கொண்டாடுகிறார்கள். இவர்களை அப்பா,அம்மா, பெரியப்பா குடும்பம், அத்தை மாமா குடும்பம், வசந்தா அத்தை, கனடா பெரியப்பா குடும்பம், பிறேமா அத்தை, தண்ணிமாமா குடும்பம், சித்தா, குட்டி மாமா, குட்டி அத்தை அனைவரும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

'சிவபதி'
14/1, விதானை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

சித்தா குடும்பம்

(cs.20648) (13.17)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3097 திகதி:2018.10.17 புதன்கிழமை ஊதா

SATURDAY FORTUNE

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 20 | 37 | 49 | 51 | C
போனஸ் இலக்கம்: 74
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 46,595,625/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நேரடி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 406
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.10.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,968,560/-

வெற்றி இலக்கங்கள்: 10 25 30 65
ஆங்கில எழுத்து: C

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நேரடி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## நியத ஜய

நியத்த ஜய Niyatha Jaya

சீட்டிழுப்பு வாரம் : 711 வர்ணம் : ஆரஞ்சு
திகதி : 2018.10.16

வெற்றி இலக்கங்கள்: 10 20 44 50
ஆங்கில எழுத்து: S

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 16,701,028/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நேரடி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்



### கனகசபாபதி பூரணம்

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது அச்செழுவில் வசித்து வந்த கனகசபாபதி பூரணம் நேற்று (17.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபாபதியின் அன்பு மனைவியும் தவக்குமார், தவராஜி (ஆசிரியை - யா/ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), தவச்செல்வி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானேஸ்வரி, கணேஸ்வரன் (C.E.B. சுன்னாகம், I.S.G.), ஜெயபாலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெலாதீபன், ஜெலானி, ஜெலாஅஞ்சலி, ஜெலாறுயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்செழுவில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (18.10.2018) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## விற்பனைக்குண்டு மோட்டார் சைக்கிள்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | NP | BEY-XXXX | SUZUKI | GIXXER |
| 2. | NP | BFJ-XXXX | BAJAJ | DIC |
| 3. | WP | BGK-XXXX | YAMAHA | RAY-ZR |
| 4. | NP | BFT-XXXX | SUZUKI | GIXXER |
| 5. | NP | BGG-XXXX | HERO | HUNK |
| 6. | NP | BGD-XXXX | BAJAJ | V15 |
| 7. | NP | BFE-XXXX | HONDA | DIO |
| 8. | NP | BFT-XXXX | TVS | METRO |
| 9. | NP | BFI-XXXX | TVS | XL |
| 10. | NP | BFJ-XXXX | HERO | DASH |
| 11. | NP | BFR-XXXX | TVS | WEGO |
| 12. | NP | BGA-XXXX | TVS | WEGO |
| 13. | NP | BFZ-XXXX | HERO | PASON PRO |
| 14. | NP | BGQ-XXXX | BAJAJ | PULSAR-150 |
| 15. | NP | BEB-XXXX | TVS | APA-150 |
| 16. | NP | BGL-XXXX | HONDA | DIO |
| 17. | NP | BFR-XXXX | SUZUKI | GIXXER |
| 18. | NP | BFH-XXXX | TVS | XL |
| 19. | NP | BGR-XXXX | BAJAJ | V12 |
| 20. | NP | BFY-XXXX | TVS | WEGO |
| 21. | NP | BFO-XXXX | HONDA | ACTIVA3G |
| 22. | NP | BEE-XXXX | BAJAJ | PULSARNS |
| 23. | NP | BEL-XXXX | TVS | APPACHE 180 |
| 24. | NP | BFQ-XXXX | HONDA | DIO |
| 25. | NP | BEM-XXXX | BAJAJ | PULSAR AS |
| 26. | NP | BFN-XXXX | HERO | PLEASURE |
| 27. | NE | BEE-XXXX | HERO | GLAMOUR |
| 28. | NP | BFC-XXXX | BAJAJ | DISCOVER 125 |
| 29. | NP | BFB-XXXX | HERO | DOWN |
| 30. | NP | BFP-XXXX | HONDA | SHINE |
| 31. | NP | BFB-XXXX | HERO | I SMART |
| 32. | NP | BFX-XXXX | YAMAHA | FAZEER |
| 33. | NP | BFA-XXXX | HERO | PLEASURE |
| 34. | NP | BFA-XXXX | BAJAJ | PULSAR-150 |

தொடர்புகளுக்கு : மேனகாந் - 077 060 8074, 077 364 4409

TRADE FINANCE AND INVESTMENTS PLC
No. 233, Stanley Road, Jaffna. 0212219997, 0212221898

## ராசி அதிர்ஷ்டம்

திகதி: 17.10.2018 | வெற்றி வாரம்: 2384 | வர்ணம்: பச்சை

மீனம்

வெற்றி இலக்கங்கள்: 41 46 55 61

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 27, 05, 292/=

2018.10.19 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது நேரடி அழைப்பு 1919

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### தரம் - 06 மாணவர் அனுமதிக்கான விண்ணப்பம் கோரல் -2019

**2019 ஆம் ஆண்டு தரம் - 6 இல் இணைய தகுதியுள்ள மாணவர்களின் அனுமதிக்கான விண்ணப்ப படிவங்களை கல்லூரியின் மாணவர் நலன்புரிச் சங்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.**

**இம் மாணவர்களுக்கான பாடசாலையால் வழங்கப்படும் மேலதிக சலுகைகள்**

01. எமது கல்லூரியில் விசேடமாக நடைமுறைப்படுத்தும் புலமைப்பரிசில் நிதியத்தின் புலமைப்பரிசில் தரம் 6 தொடக்கம் 13 வரை மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும் (J.C.C Edu.care Trust)
02. தரம் - 6 இல் இருந்து விசேட கணினிப் பயிற்சி
03. இலவச கரம், சதுரங்கம், மேசைப்பந்து பயிற்சி
04. இலவச கராத்தே தற்காப்பு கலைப்பயிற்சி

குறிப்பு: புலமைப்பரிசில் பரீட்சையில் 110 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுமதி விசேட பரீட்சையில் தெரிவு செய்யப்படும்.
விண்ணப்ப முடிவுதிகதி : **30.10.2018**

அதிபர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(cs. 145384) (13.17)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆன் ஞானமணி தேவதாசன்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 1A, சோமசுந்தரம் அவனியூ, யாழ்ப்பாணம் எனும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆன் ஞானமணி தேவதாசன் நேற்று (17.10.2018) புதன்கிழமை அதிகாலை 3.00 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல்பிள்ளை - செல்லமணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பீற்றர் செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் பீற்றர் தேவதாசன் (பாபு - அன்ரோ எலக்ரிக்கல்ஸ்) இன் அன்பு மனைவியும் ஜெஸ்லின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, கிளிநொச்சி), ஜொய்ஸ்லின், ஜெனிஸ் (கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரொனி பிக்சன் (சவுதி) இன் அன்பு மாமியாரும் அக்கேஷ், அக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யேசுகாவலன் (கனடா), சாந்தமணி (கனடா), மனோவேதகாவலன், ஞானகாவலன் (தயா - கனடா), ஜெயமணி (கனடா), காலஞ்சென்ற ஜோதிகாவலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாவதி (கனடா), காலஞ்சென்ற அருள்பிரகாசம் மற்றும்சுஜீபா(கனடா), யோசப்தணிநாயகம்(கனடா), தேவநேசன்(கனடா), தயாவதி, தேவராஜ் (கனடா), தேவசுந்தர் (கனடா), அருள்ராஜ் (கனடா), சுகந்தி (கனடா), சந்திரராஜ் (கனடா), காலஞ்சென்ற தேவசுரேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.10.2018) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஏழாலை புனித இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

1A. சோமசுந்தரம் அவனியூ,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 729 6999

(CS 16480/15/17)

## அவசரமாக...

இதேவேளை, அமைச்சரவைக் கூட்டத்தில், அரச தலைவர் மைத்திரிபால எந்த இடத்திலும், 'றோ' என்ற பதத்தைப் பாவிக்கவேயில்லை, என்றும், இந்தியப் புலனாய்வு சேவை என்றே குறிப்பிட்டார் எனவும், அரச தலைவரின் மூத்த ஆலோசகர் சிறிரால் லக்திலக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தம்மைக் கொலை செய்யும் சதித் திட்டத்துக்குப் பின்னால், இந்தியாவின் 'றோ' புலனாய்வுப் பிரிவு இருந்தது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் கூறவில்லை என்றும், படுகொலைச் சதித் திட்ட குற்றச்சாட்டுடன், றோ தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாகத் தான் அவர் குறிப்பிட்டார் என்றும், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசதலைவர்ஊடகப்பிரிவுஇதுதொடர்பில்நேற்று மாலை சிறப்பு ஊடக அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமையன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தியப் புலனாய்வு சேவையொன்றுடன் தொடர்புபடுத்தி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாக வெளியிடப்பட்ட உள்ளூர் மற்றும் ஊடக செய்திகள் தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு கவனம் செலுத்தியுள்ளது.

அரச தலைவர் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சதி முயற்சியில் இந்திய உளவுத்துறையின் எந்தவொரு ஈடுபாடு குறித்தும் அரச தலைவர் இதன்போது கருத்துத் தெரிவிக்கவில்லை என்பதை ஊடகப் பிரிவு தெளிவுபடுத்த விரும்புகின்றது.

அமைச்சரவைக் கூட்டத்தில், அரச தலைவர் படுகொலை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கும் சதித்திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. படுகொலை சதி முயற்சி தொடர்பில் விரிவான விசாரணை யொன்று நடத்தப்படவேண்டியதன் அவசியத்தை அரச தலைவர் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தியுனார்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட ஏனைய விடயங்களுள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையைத்தின் அபிவிருத்தி பற்றிய கலந்துயாடலும் உள்ளடங்குகின்றது. இதன்போது தேசிய பொருளாதாரத்தின் நன்மைக்கு இலங்கை, ஆழ் கடல் துறைமுக முனையம் ஒன்றினை கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அரச தலைவர் விளக்கினார்.

தற்போதுள்ள அரசு ஆட்சிக்கு வந்தது முதல் இந்தியாவும் இலங்கையும் மிக நெருங்கிய நல்லுறவையும் ஒத்துழைப்பையும் பேணிவருகின்றன. பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்குக் காரணமாக அமையும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு உயர்மட்டப் பயணங்களும் இடம்பெற்றுள்ளன. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நேற்றுக் காலை அரச தலைவரை சந்தித்தபோது இதனுடன் தொடர்பான அனைத்து விடயங்களும் தெளிவுபடுத்தப்பட்டதுடன் இருதரப்பு உறவுகளும் உறுதிப்படுத்தப்பட்டன.

இந்த சூழ்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையில் இருந்து வரும் நல்லுறவுகளுக்கும் இரு தலைவர்களுக்கும் இடையிலான சிறந்த தனிப்பட்ட தொடர்புகளுக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் சில உள்நோக்கம் கொண்ட தரப்புகளால் இத்தகைய திரிபுபடுத்தப்பட்ட விடயங்கள் பரப்பப்படுதல் மிகவும் கவலைக்குரியதாகும் என்றுள்ளது. (5)

## மைத்திரியை...

இந்த விவகாரத்தால் கொழும்பு ஆட்சிபீடம் ஆட்டம் கண்டிருந்தது. தனது கொலை முயற்சி யில் 'றோ' தொடர்புபட்டுள்ளது என்கிற கருத்தை நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் கூறினார் என்று இந்தியாவில் இருந்து வெளியாகும் நாளிதழான 'தி ஹிண்டு' நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

"இந்திய -இலங்கை உறவை மோசமாக முடக்கிவிடக்கூடிய நகர்வாக, தன்னைக் கொல்வதற்கான சதியைப் பின்னியது இந்தியாவின் உளவுப் பிரிவான 'றோ'தான் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார் இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. 'றோ' தன்னைக் கொல்ல முயற்சித்தது என்றும் இந்தத் திட்டம் தொடர்பில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றும் மைத்திரி கூறினார் என்று அந்தக் கலந்துரையாடலில் இருந்த சில வட்டாரங்கள் தி ஹிண்டுவிடம் தெரிவித்தன. இதனைக் கேட்டு தாம் அதிர்ச்சியடைந்துவிட்டன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன" என்று ஹிண்டு செய்தி வெளியிட்டது.

தன்னை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி குறித்து அரசுத் தரப்பில் நடத்தப்படும் விசாரணைகளில் ஆட்சியாளர்கள் மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்வது குறித்த தனது கரிசனையை வெளிப்படுத்தியபோதே அவர் 'றோ'வின் பங்களிப்புத் தொடர்பில் தெரிவித்திருந்தார் என்றும் ஹிண்டு தனது தகவல் வட்டாரங்களை மேற்கோள்காட்டித் தெரிவித்திருந்தது.

இந்தச் செய்தி நேற்றுக் காலை வெளியானதைத் தொடர்ந்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அரச தலைவரின் ஊடகப் பிரிவு அவசரமாக மறுப்புச் செய்தி ஒன்றை வெளியிட்டது.

"அரச தலைவரைப் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சதி முயற்சியில் இந்திய உளவுத்துறையின் எந்தவொரு ஈடுபாடு குறித்தும் அரச தலைவர் கருத்துத் தெரிவிக்கவில்லை என்பதை அரச தலைவர் ஊடகப் பிரிவு தெளிவுபடுத்த விரும்புகின்றது" என்று அந்த மறுப்பில் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவரைப் படுகொலை செய்வதற்கான முயற்சி குறித்துக் கலந்துரையாடப்பட்டது என்றும் அது தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அரச தலைவர் வலியுறுத்தினார் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (உ-5)

## எல்லோரையும்...

கூட்டமைப்புக்கும் அரச தலைவருக்கும் இடையில் நேற்றுப் பேச்சு இடம்பெற்றது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அரசியல் கைதிகள் எல்லோரையும் விடுவிக்கவேண்டும். இந்த விடயத்தில் வேறு விவகாரங்களைக் கலக்கக்கூடாது என்று கோரியுள்ளார். அதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த சந்திப்பின்போது எல்லோரையும் விடுவிக்க வேண்டும் என்று சிரித்துக் கொண்டே கூறியிருந்தார். அவர் எல்லோரையும் என்று அர்த்தப்படுத்தியது, தமிழ் அரசியல் கைதிகளையும், இராணுவத்தினரையுமா என்பது தொடர்பில் அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியிருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே, அரசியல் கைதிகள் விடயத்தில் வேறு விடயங்களைப் போட்டுக் குழப்பக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கோரியுள்ளார்.

மேலும் அரச தலைவருடனான பேச்சுத் தொடர்பில் கூட்டமைப்பு ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசியல் கைதிகளின் விடயம் சட்ட ரீதியாக மாத்திரம் பார்க்கப்பட வேண்டிய ஒன்றல்ல. இது தமிழ்த் தேசியப் பிரச்சினையுடன் தொடர்புடைய விடயம். ஆதலால் இது அரசியல் ரீதியாக எதிர்நோக்கப்பட வேண்டும். இதுவரையில் இது அரசியல் ரீதியாக அணுகப்பட்டிருக்கவில்லை. அரசியல் ரீதியாக அணுகப்படவேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம். போர் முடிவடைந்து 9 ஆண்டுகள் கடந்து விட்டன. போர் முடிவடைந்தவுடன் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. அரசியல் கைதிகள் நீண்டகாலமாக சிறையில் இருக்கிறார்கள். அவர்களை தொடர்ந்து சிறையில் தடுத்து வைத்திருப்பது மனிதாபிமானமற்றது. அவர்களுக்கு எதிராக தாமதம் இல்லாமல் தண்டனை வழங்கியிருந்தால் தற்போது தண்டனைக்காலம் நிறைவேறி வெளியே வந்திருப்பார்கள்

இவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் பலருக்குப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலமே அவர்களுக்கெதிரான சாட்சியமாக இருக்கிறது. அரசு பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு புதிய சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது. இந்தப் புதிய சட்டத்தில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சாட்சியமாக முடியாது. இந்தச் சூழலில் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

1971ம் ஆண்டும் 88,89ஆம் ஆண்டுகளிலும் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடிய பலர் விடுவிக்கப்பட்டார்கள். போர் முடிவடைந்த பின்பு முன்னைய அரசின் தீர்மானத்தின் படி அரசுக்கு எதிராக ஆயுத மேந்தி போராடிய 12 ஆயிரம் போராளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள். ஆகையால் இந்த கைதிகளை தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருப்பது நியாயமற்றது அவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

சிறைக்கைதிகள் சிறையில் உணவுஒறுப்புப்புப் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். எமது வேண்டுகோளுக்கு இணங்க அந்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியுள்ளார்கள். பொது அமைப்புக்களும், மக்களும், பல்கலைக்கழக மாணவர்களும் பலவித போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இவையெல்லாம் தமிழ் மக்களுடைய உணர்வுகளை பிரதிபலிக்கின்றன.

தமிழ் மக்களின் கருத்து, கைதிகள் தமிழர்களாக இருக்கிற காரணத்தினால்தான், அரசு போதிய அக்கறை செலுத்தாமல் இருக்கிறது என்பதாகும். இது நல்லிணக்கத்துக்குப் பாதகமானது என்பதனையும் நாம் வலியுறுத்தினோம்.

இவை அனைத்தையும் கேட்டு அரச தலைவர், வருகிற வாரம் தலைமை அமைச்சர், சட்டமா அதிபர், மற்றும் தேவையான அனைவரையும் அழைத்து இந்த விடயத்தை சாதகமாக அணுகி கைதிகளின் விடுதலையை எவ்விதமான முறையில் நிறைவேற்றலாம் என்பதை முடிவு செய்வதாக தெரிவித்தார் என்றுள்ளது.

(5)

## அரசியல்...

என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் நேற்று மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரையில் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது,

அரசியல் கைதிகள் தொடர்பில் நாம் முன்வைத்த நியாயங்களை ஏற்றுக் கொள்வதாக அரச தலைவர் தெரிவித்தார். இந்த விடயம் ஆரம்பத்திலேயே செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் அது இழுத்தடிக்கப்பட்டுள்ளதையும் ஏற்றுக் கொண்டார். இனியும் இழுபடாமல் விரைந்து இந்த விடயம் தீர்க்கப்பட வேண்டும் என்று இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

சட்டஆலோசனை இல்லாமல் இதனைச் செய்ய முடியாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். இந்த விடயத்தில் சட்டரீதியான தீர்மானம் தேவையில்லை. அரசியல் ரீதியாகவே தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

அரசியல் ரீதியான தீர்மானத்தை தான் தனித்து எடுக்க முடியாது என்றும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்து பேசியே எடுக்க முடியும் என்றும் அரச தலைவர் கூறினார். தலைமை அமைச்சர் இந்தியாவிலிருந்து திரும்பிய பின்னர் அவருடன் பேசி அடுத்த வாரம் மீண்டும் சந்திப்போம் என்றார். இதன்போது சம்பந்தன், அடுத்த வாரமே சந்திக்க வேண்டும். மீண்டும் தவணையிட முடியாது என்று வலியுறுத்தியுள்ளார். அடுத்த வாரம் நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது, பேச்சு நடத்தலாம் என்று அரச தலைவர் உறுதியளித்தார் என்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சோ.சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிவமோகன், க.கோடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5)

## மோடியும்...

இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' தன்னைக் கொலை செய்ய முயன்றதாக அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இருப்பினும் அரச தலைவர் ஊடகப் பிரிவு அதனை மறுத்திருந்தது. மேலும், கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு கையளிக்கவேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டபோதும், அதற்கு அரச தலைவர் இணங்கவில்லை.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர், அரச தலைவர் மைத்திரியை நேற்றுக் காலை அவசர அவசரமாகச் சந்தித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே, இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் அலைபேசியில் பேசியுள்ளார். இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரு நாட்டுத் தலைவர்களும் நட்பு ரீதியான கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடினர். இதன்போது இலங்கையின் சுபீட்சத்துக்கும் அபிவிருத்திக்கும் தேவையான அனைத்துவித உதவிகளையும் வழங்குவதாக இந்தியத் தலைமை அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவு தொடர்ந்தும் வலுவுடன் காணப்படுமென தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அயல் நாடுகளுடனும் ஏனைய உலக நாடுகளுடனும் நட்புறவையும் நெருக்கமான தொடர்புகளையும் பேணி பாதுகாப்பதற்காக மைத்திரிபால சிறிசேனவால், முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் மோடி தெரிவித்தார்.

நெருங்கிய நண்பனாகவும் அயல்நாடு என்ற வகையிலும் இலங்கையின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் இந்தியாவிடமிருந்து கிடைக்கப்பெறும் ஒத்துழைப்புகளை மைத்திரிபால சிறிசேன பாராட்டினார் - என்றுள்ளது. (5)

## இந்தியாவால்...

கடும் வாக்குவாதம் இடம்பெற்றதாக, கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. துறைமுக அபிவிருத்தி தொடர்பான, அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் மகிந்த சமரசிங்க சமர்ப்பித்ததை அடுத்தே, வாக்குவாதம் ஏற்பட்டது.

கிழக்கு முனையத்தின் மீது இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தினார்.

அப்போது, எல்லாவற்றிலும் வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பாக, அரச தலைவர் மைத்திரிபால தனது தீவிரமான கவலையை வெளிப்படுத்தினார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தை வழங்க முடியாது என்று தாம் ஏற்கனவே இந்தியாவுக்கு கூறி விட்டதாகவும், அவர்களுக்கு ஒரு முனையம் தேவைப்பட்டால், மேற்கு முனையத்தில் பார்த்துக் கொள்ள முடியும், அதற்கு முதலீடு செய்ய வேண்டும் என்றும் மைத்திரி தெரிவித்துள்ளார்.

தேசிய பொருளாதார சபைக் கூட்டத்துக்கு முன்னதாக இந்த அமைச்சரவைக் கூட்டம், இடம்பெற்றது.

அரச தலைவர் செயலகத்தில் நடந்த தேசிய பொருளாதார சபைக் கூட்டத்துக்கு அரச தலைவர் தலைமையேற்றிருந்த நிலையில், அந்தக் கூட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## 'றோ'வின்...

யாழ்ப்பாணம் ஒக் 18

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் படுகொலைச் சதி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இந்தியப் பிரஜை இந்திய புலனாய்வு அமைப்பான ரோ வின் உறுப்பினர் எனவும் அதற்குரிய சான்றுகள் உள்ளதாகவும் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் கருத்து வெளியிடுகையில் மேலும் தெரிவித்ததாவது,

மைத்திரி , மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மீதான படுகொலைச் சதி சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள இந்தியப் பிரஜை அந்நாட்டு புலனாய்வு அமைப்பான ரோவின் உறுப்பினராவார். அவருடைய ரோ அமைப்பின் பெயர் ராஜேந்திர குமார். இவர் இலங்கையில் குறிப்பிட்ட பெயர் வேறொன்றாக உள்ளது. இவருடைய ரோ அமைப்பின் இலக்கம் சுனு317217/ஏது என்பதாகும். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாகவே அரசியல் தஞ்சம் கோருபவராக இலங்கைக்குள் இவர் நுழைந்துள்ளார். இவ்வாறான ஒருவர் தான் அவராவார் - எனத் தெரிவித்தார். (8-61)

## தொழில்...

அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி புதிய தொழில் வாய்ப்பு மற்றும் வருமான வழியை ஏற்படுத்தி வடக்கு மாகாணத்தில் நிலையான அபிவிருத்தியை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக ஏற்றுமதிச் சந்தையில் ஈடுபடக்கூடிய தொழில் சேவைத் திட்டங்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் மிகவும் இலகுவாகவும் பயனுள்ள வகையிலும், தேவையான சேவைகளை வழங்குவதற்காகப் புதிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் மைய நிலையத்தை இலங்கை, இந்திய அரசுகளின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டது. அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (5)

## காணிகளை...

அமைச்சரவை ஆலோசனைக் குழுக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றுப் பி.ப. நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த அரச தலைவர் மைத்திரிபால, கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு கிழக்குச் செயலணிக் கூட்டத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் தனியார் காணிகளை விடுவிக்குமாறு பணித்துள்ளேன். அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்ன என்று கேட்டுள்ளார்.

முப்படையினரும் தம்வசம் எவ்வளவு காணிகள் இருந்தன? எவ்வளவு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன? என்ற விவரங்களை அரச தலைவருக்குத் தெரியப்படுத்தினர். இதன்போது இரா.சம்பந்தன், விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். எப்படியாயினும் காணிகள் விடுவிக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்துள்ளார்.

'காணிகள் விடுவிப்பில் இராணுவத்தினர் சில சிக்கல்கள் இருப்பதாக, மாவட்டச் செயலகத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) நடந்த கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்கள். தமக்கு மாற்றுக் காணி தேவை என்பதையும், அந்தக் காணிக்கு முகாமை இடமாற்றுவதற்குப் பணம் தேவை என்றும் குறிப்பிட்டார்கள்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புத் தரப்பினர் மாற்றுக் காணிகளை அடையாளப்படுத்தி தமது திட்டங்களைச் சமர்பிக்கட்டும். பணம் வழங்கலாம் என்று கூறியுள்ளார்.

மேலும், அடுத்த மாதம் 8ஆம் திகதி வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் சிறப்புச் செயலணியின் கூட்டம் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக, காணி விடயங்கள் தொடர்பில் தனியான கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கோரிக்கை முன்வைத்துள்ளார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதனை ஏற்றுக் கொண்டுள்ளார். (5)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 18

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம்கால்பந்தாட்டலீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலையமைதானத்தில்இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை4.45மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிமோதவுள்ளது.

**யாழ். மத்தியின் கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபையினால் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்றுபிற்பகல்3மணிக்குஇடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில்மகளிர்கல்லூரிஅணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ்கல்லூரிஅணியைஎதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

**கிளிநொச்சி இந்துவின் கால்பந்துத் தொடர்**

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் கிளிநொச்சிமாவட்டபாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கால் பந்ததாட்ட தொடரின் அரையிறுதியாட்டம் மற்றும் இறுதியாட்டம் என்பன கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

காலை9மணிக்குஇடம்பெறும்முதலாவது அரையிறுதியாட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பூநகரி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெறும் அணிகள் பிற்பகல் ஒரு மணிக்குஇடம்பெறும்இறுதியாட்டத்தில்மோதவுள்ளன. (ம-23)



# இந்து இளைஞர் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக். 18

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணம் வென்றது.

காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில்நேற்றுமுன்தினம்நடைபெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:23, 25:18, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

ஆட்ட நாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணியின் ஜெனகன் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

# வலைப்பாடு மெசியா வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 18

சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வேலுப்பிள்ளை சோமசுந்தரம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவு செய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் மெசியா அணி வெற்றி பெற்றது. (ம-23)



# நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் அசத்தலாட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலையமைதானத்தில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதியது.

2:0 என்ற கோல் கணக்கில் நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

இந்தியாவுக்கு எதிரான


# தோல்வியை சகிப்பதற்கு முடியவில்லை

கோல்டர் வெளிப்படை


இந்திய அணிக்கு எதிராகக் கிடைத்த டெஸ்ட் தோல்வியைச் சகிக்க முடியவில்லை என்று தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் அணித் தலைவர் கோல்டர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை இந்திய அணி 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. ஒன்றில் இந்தியா இன்னிங்ஸாலும் மற்றொன்றில் 10 இலக்குகளாலும் வெற்றிபெற்றது. இதையடுத்து இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோல்டர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தத் தொடரில் எங்களது துடுப்பாட்டம் மோசமாக இருந்தது.



இந்தத் தோல்வியை சகிப்பது மிகமிகக் கடினம். நேர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால் இதை ஏற்றுக் கொள்வது மிகவும் கடினம். ஏன் இந்தத் தோல்வி ஏற்பட்டது என்பதை புரிந்து கொள்ள முயன்று வருகிறேன். இந்தத் தோல்விக்கு அனைத்து வீரர்களுமே பொறுப்பு. வெற்றி காண்பதற்கான வழிகளை நாங்கள் தேடினோம். ஆனால் அதற்கான தீர்வு எங்களுக்குக் கிடைக்கவில்லை. இது ஒரு மிகவும் கடினமான தொடராக அமைந்தது. நாங்கள் எங்களது சிறந்த ஆட்டத்தை இங்கு வெளிப்படுத்தவில்லை. இந்திய அணியானது தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் அணியாகும், அந்த அணிக்கு ஈடு கொடுத்து நாங்கள் விளையாடவில்லை. இந்திய வீரர்கள் தரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இது அவர்களுக்கு சொந்த மைதானம் என்றாலும் அவர்களது ஆட்டத்திறன் அபாரம் என்று கோல்டர் மேலும் தெரிவித்தார். (ம)



# தீவுகளின் பயிற்சியாளருக்கு இரண்டு ஆட்டங்களில் தடை

## நடுவர்களின் முறைப்பாட்டை அடுத்து பன்னாட்டு கிரிக்கெட் சபை அதிரடி

**மேற்கிந்தியத் தீவுகளின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்ருவேட் லா, நடுவர்களுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்தமைக்காக அவருக்கு இரண்டு ஆட்டங்களில் தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை.**

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின்போது மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பவல், அஸ்வினின் பந்துவீச்சில் ரகானேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இந்தப் பிடியெடுப்பு சர்ச்சையானது. பந்து நிலத்தில் பட்டது என்று லா வாதிட்டார்.

இது தொடர்பில் தொலைக்காட்சி நடுவரின் அறைக்குச் சென்று அவர் முறையிட்டார். நடுவரை நோக்கி தகாத சொற்களைப் பயன்படுத்தினார். இந்த விவகாரங்கள் தொடர்பில் நடுவர்கள் முறையிட்டதை அடுத்து பன்னாட்டுக் கிரிக்கெட் சபை விசாரணை நடத்தியது.

லாவின் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு 2 ஆட்டங்களில் தடை விதிக்கப்பட்டது.

இதனால் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களிலும் லா பங்குபற்றமாட்டார் என்று (வீரர்களின் ஓய்வறையில் இருக்கமாட்டார்) கருதப்படுகிறது. (ம)



ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நாளைமறுதினம் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பார்சிலோனாவும் செவில்லாவும் மோதவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. (ம)

# மகிழ்ச்சியோடு விடைபெறுவேன்

கம்பீர் உருக்கம்



நான் ஓய்வு பெறும் நாளன்று நிச்சயம் என் கண்களில் கண்ணீர் வராது, மகிழ்ச்சியுடனே எனது துடுப்பு மட்டையையும், கால் கவசத்தையும் ஒதுக்கிவைப்பேன் என்று மூத்த வீரர் கவுதம் கம்பீர் உருக்கமாகத் தெரிவித்தார்.

டெல்லியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கம்பீர் இவ்வாறு தெரிவித்தார்.

“இப்போதுவரை நான் பங்கேற்கும் அனைத்து ஆட்டங்களிலும் ஓட்டங்களைச் சேர்க்க வேண்டும் என்ற சிந்தனையுடன் விளையாடுவதே என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறது. இதைத் தொடர்ந்து செய்வேன். என்னைப் பொறுத்தவரை ஓட்டங்களைச் சேர்ப்பதும் வெற்றி பெறுவதும் ஓய்வறையில் மகிழ்ச்சியாக இருப்பதும் தான் என்னை மேலும் உற்சாகப்படுத்தும். இந்த நேரம் வரை எனக்குள் கிரிக்கெட் உணர்வு இருந்து கொண்டிருக்கிறது. எப்போதும் மகிழ்ச்சியான சூழலில் ஓய்வறையில் இருக்க விரும்புகிறேன். அதற்காகத் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுவேன். என்னைப் பொறுத்தவரை, நான் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும்நாளில்கூட நான் உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் சிந்த மாட்டேன்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய அணிக்காக 58 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள கம்பீர் 4 ஆயிரத்து 154 ஓட்டங்களும், 147 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடி 5 ஆயிரத்து 238 ஓட்டங்களையும் சேர்த்துள்ளார். இதில் டெஸ்ட் ஆட்டத்தில் 9 சதங்களும், ஒருநாள் ஆட்டத்தில் 11 சதங்களும் அடங்கும். கடந்த 2016ஆம் ஆண்டு நவம்பரில் இந்திய அணியில் இருந்து ஓரம் கட்டப்பட்டார் கம்பீர். (ம)

# புதிய பாரதி சம்பியனானது

யாழ்ப்பாணம், ஒக். 18

இலங்கை கரப்பந்தாட்டச் சமேளனத்தால் நடத்தப்படும் மஞ்சி வெற்றிக்கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மலையாள்புரம் புதிய பாரதி அணி சம்பியனானது.

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மலையாள்புரம் புதியபாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துவட்டக்கச்சிகுறிஞ்சிவிளையாட்டுக்கழக அணி மோதியது.

3 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. இதில் மலையாள்புரம் புதியபாரதி விளையாட்டுக்கழகஅணி 2:0 என்றசெற்கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



இலங்கை கரப்பந்தாட்டச் சமேளனத்தினால் நடத்தப்படும் மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இராணுவ பொலிஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# மே. தீவுகளுக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு

## விளையாடுகிறார் விராட் கோக்லி

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களுக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. கோக்லி விளையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை இந்திய அணி 2:0 என்ற அடிப்படையில் அபாரமாகக் கைப்பற்றியது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் அடுத்ததாக பிக்கிறது. இந்திய அணி அடுத்ததாக ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நீண்ட தொடரில் விளையாடவுள்ளதால் இந்தத் தொடரைக் கருத்தில் கொண்டு கோக்லிக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கப்படும் என்று கருதப்பட்டது. எனினும் அவர் விளையாடுகிறார். காயமடைந்த தாக்கூருக்குப் பதிலாக உமேஸ் யாதவ் அணிக்கு



அழைக்கப்பட்டார். ஆசியக் கிண்ணத் தொடரில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய ஜடேயா தொடர்ந்தும் அணியில் நீடிக்கிறார். காயம் காரணமாக பாண்டியா இடம்பெறவில்லை.

இந்திய அணி விவரம் கோக்லி (தலைவர்), ரோகித் சர்மா, தவான், லோகேஸ் ராகுல், ராயிடு, பாண்டே, டோனி, பன்ட், ஜடேயா, சாகல், குல்தீப் யாதவ், சமி, கலீல் அகமது, உமேஸ் யாதவ். (ம)


அமெரிக்க லொத்தர் இலவச விசா

உடனடியாக பதிவு செய்யுங்கள்

அமெரிக்க இலவச விசா வாய்ப்பு பெற விரையுங்கள் - இந்த வருடமே இறுதி வருடம்

0768226243

V2 TRAVELS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

வெளிவந்துவிட்டது

தீபாவளி வாழ்த்து மடல்கள் சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
ஞாயிறு தினங்களிலும் திறந்திருக்கும்.

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
021 222 9881
(C/32115) (11,17)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

டுபாய் வான் சேல்ஸ்மன்
சுப்பர் மார்க்கட்
DHS 1800 SR 72 000 + OT
மலேசியா (காஸ்பேக் பியர் கம்பனி)
RM 1800 SR 70 000 + OT
கட்டார் (றைவர் - லைட் வேக்கில், ஹெவி வேக்கில்)
RL 2000 - 3 000
SR 82 000 - 125 000
நடைபெறவுள்ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடர் எதிர்வரும்
Phone No. 077 939 4727, 076 237 3527
E - Mail : LaiFindubai@gmail.com
உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

திகதி பிற்போடப்பட்டுள்ளது

பரமகுரு ஸ்ரீமுதலியப் பெருமான் ஆலய கட்டட திருப்பணிகளை முன்னிட்டு 18.10.2018 ஆம் திகதி நடத்தப்பட இருந்த அதிர்ஸ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 30.10.2018 அன்று 4.00 மணியாக மாற்றப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபை.


### மரண அறிவித்தல்

### திருமதி தவமணிதேவி சதாசிவம்



பிறப்பு 16.06.1946 இறப்பு 17.10.2018

செல்வரகம், மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி சதாசிவம் நேற்று (17.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் - செல்வரகம் மட்டுவில் தெற்கு) - செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் சதாசிவத்தின் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்) அன்பு மனைவியும் அருந்ததி, வாசுகி (ஆங்கில ஆசிரியை - கொடிகாமம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாதரன், இளங்குமரன் (காப்புறுதி திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இந்துசா, மிதுசா, திருக்கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சண்முகநாதன் (விசுவமடு), குணமணிதேவி ஆறுமுகம் (இளைப்பாறிய செயலாளர் - நகரசபை, சாவகச்சேரி), காலஞ்சென்ற சற்குருநாதன் (கிராம சேவையாளர், திருகோணமலை, வசந்தாதேவி வைகுந்தநாதன் (இளைப்பாறிய அதிபர்), சாந்தநாயகி, பாக்கியநாதன் (ஆசிரிய ஆலோசகர் கல்வித் திணைக்களம், சாவகச்சேரி), காலஞ்சென்ற அற்புதமலர்தேவி, சந்திரகாந்தன், விஜயலட்சுமி, குலநாயகம் (கனடா), ஜெகதீஸ்வரி சுந்தரலிங்கம் (அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2018) வியாழக்கிழமை மட்டுவில் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

# ஆஸி. தொடருக்கு வேண்டும் உமேஸ்

## கவாஸ்கர் வலியுறுத்தல்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரின்போது இந்திய அணியில் உமேஸ் யாதவ் விளையாட வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர்.

இந்தியா - ஆஸ்திரேலியத் தொடர் தொடர்பில் தற்போதிருந்தே வார்த்தைப் பரிமாற்றங்கள் ஆம்பித்துள்ளன. இந்த நிலையில் ஆஸ்திரேலியத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கவாஸ்கர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"உமேஸ் யாதவ் அணிக்குள் வருவதும் போவதுமாக நீண்ட நாள்களாக இருக்கிறார். தென்னாபிரிக்கத் தொடரிலும் வாய்ப்புக் கிடைக்கவில்லை, இங்கிலாந்திலும் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் அவர் அணிக்கு அவசியமானவர். பும்ரா, புவனேஷ்வர் குமார், சமி, இஷாந்த் சர்மா இருக்கும் போது வாய்ப்பு கடினம்தான். எனினும் மாற்று வீரராகவேனும் உமேஸ் யாதவ் வேண்டும்" என்று கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆஸ்திரேலியத் தொடருக்கான தென்னாபிரிக்கா அறிவிப்பு

ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தானுக்கு எதிராகத் தற்போது விளையாடி வருகிறது. தென்னாபிரிக்க அணி சிம்பாப்வேக்கு எதிராகத் தற்போது விளையாடி வருகிறது. இந்தத் தொடர்கள் முடிந்த பின்னர் ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்க அணிகள் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேருக்குநேர் மோதவுள்ளன.

இந்த ஆட்டங்களுக்கான தென்னாபிரிக்க அணியே நேற்று அறிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க அணி விவரம் - பிளாசிஸ் (தலைவர்), பெக்கார்டின், குயின்டன் டி ஹொக், ஹென்க்ஸ், தாகிர், கிளாசன், மார்க்ரம், மில்லர், கிறிஸ் மோறிஸ், நெக்டி, பி ளுக்வையோ, பிறிஸ்டோரியஸ், ரபாடா, சம்சி, ஸ்ரெய்ன். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.